Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

விலை : ரூபா 25.00

என்றும் உங்களுடன்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

பக்கம் 24 | ஏப்.11-17, 2016 | செய்தி - 28

# பௌத்த சிங்களம் என்ற இனம் இந்த நாட்டில் இல்லை

வாசகர்களுக்கு
துர்முகி புதுவருட
வாழ்த்துக்கள்



தமிழ் ஈழ விடுதலைப் புலிகளால் யாழ்ப்பாணத்திலுள்ள பௌத்த ஆலயத்திற்கு எந்தவிதமான இடர்பாடுகளும் ஏற்படவில்லை. நாகபூசணி அம்மன் ஆலயக் கோபுர உயரம் 104 அடி. நாங்கள் நிர்மாணிக்கவுள்ள புத்தர் சிலையின் உயரம் 37 முழம் அல்லது 64 அடியே ஆகும்.

இவ்வாறு அதி வணக்கத்திற்குரிய நவந்தகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் "தினச்செய்தி" க்கு கூறினார்.

வணக்கத்திற்குரிய தேரர் நாகதீபத்திலுள்ள புராதன ராஜமகா விகாரையின் விகாராதிபதி ஆவார். அவர் "தினச்செய்தி" க்கு வழங்கிய விசேட செவ்வியில் வருமாறு கூறினார்.

02 இல்

தினச்செய்தி
என்றும் உங்களுடன்
T.P : 021 224 2636
Fax : 021 2242139
Web : www.thinacheithi.com / lk

# நல்லூர் கந்தசுவாமி கோவிலும் பொதுக் கோவில் கோரிக்கையும்

சென்ற முறை "தினச்செய்தி" ஆசிரியர் பீடம் யாழ்ப்பாணம் மாவட்ட அதிபர் என்.வேதநாயகனைச் சந்தித்து, நல்லூர் கந்தசுவாமி கோவிலைப் பொதுக் கோவிலாக மாற்றுமாறு எழுத்து மூலமான வேண்டுகோளை வழங்கினோம்.

மாவட்ட அதிபருக்கு, நம்பிக்கைச் சொத்து சட்டத்தின் கீழ் கோவிலைப் பொதுக் கோவிலாக மாற்றுவது சம்பந்தமான அதிகாரம் உண்டு எனத் தெரிய வருகின்றது.

அவ் அடிப்படையில்தான் நல்லூர் கந்தசுவாமி கோவிலைப் பொதுக் கோவிலாக மாற்றுமாறு நாம் கேட்டுக் கொண்டோம்.

இது சம்பந்தமாகச் சென்ற புதன் கிழமை மாவட்ட அரசாங்க அதிபரை நேரடியாகச் சந்தித்தும், வெள்ளிக் கிழமையன்று தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டும் எமது கோரிக்கையின் நிலை என்ன என்பது பற்றி அறிய விரும்புவதாகக் கேட்டோம்.

அதற்கு அவர், மிக விரைவில் இது சம்பந்தமாகக் கடிதம் அனுப்புவதாகக் கூறினார்.

மாவட்ட அதிபர் இக் கோவில் விவகாரம் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கத் தாமதம் ஏற்படின், எமக்குத் தெரிந்த மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

மாற்று நடவடிக்கைகளில் ஒன்று நீதிமன்றத்தை நாடுவதாகும்.

தற்போதுள்ள நல்லூர் கந்தசுவாமி கோவில் நிர்வாகத்தில் எமக்கு கிஞ்சித்தேனும் நம்பிக்கை கிடையாது. எவ்வாறு நம்பிக்கை வரும்?

கோவில் ஆரம்பித்த அன்றைய காலம் தொட்டு இன்று வரை கோவிலின் கணக்கு வழக்குகள் வெளியிடப்படவில்லை.

இக் கோவிலுக்கு எவ்வளவு வருமானம் வருகின்றது? வரும் பணத்திற்கு என்ன நடக்கின்றது? என்ற விடயம் வெளியே யாருக்கும் தெரியாது.

நல்லூர் கந்தசுவாமி கோவிலை 1749 ஆம் ஆண்டு இரகுநாத மாப்பாண முதலியார் முன்னின்று நிர்மாணித்து வைத்தார்.

பொது மக்களிடம் சேகரித்த பணத்திலிருந்து தான் இந்தக் கோவிலை நிர்மாணித்ததாக வரலாறு கூறுகின்றது.

பொது மக்களிடம் பணம் சேகரித்து நிர்மாணித்த இந்தக் கோவில் மணியகாரராக, இன்றேல் நிர்வாகியாக இரகுநாத மாப்பாண முதலியார் பொது மக்களால் தெரிவு செய்யப்பட்டார்.

இரகுநாத மாப்பாண முதலியாரை அடுத்து அவரது பரம்பரையினர் ஒருவர் பின் ஒருவராக அந்தப் பதவியைக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

கடைசியாகப் பதவியைக் கைப்பற்றியவர் குமாரதாஸ் மாப்பாண முதலியார்.

இரகுநாத மாப்பாண முதலியார் தொடக்கம் குமாரதாஸ் மாப்பாண முதலியார் வரை இக் கோவிலை நிர்வகித்த எவருமே, கணக்கு வழக்குகளை வெளியிடாது தமக்குள்ளேயே அமுக்குகின்றனர்.

கோவிலைப் பொதுக் கோவிலாக மாற்ற வேண்டும். கோவிலுக்கு ஒரு ரூபா கொடுத்து அர்ச்சனை செய்யும் ஒவ்வொரு பக்தனுக்கும் கோவிலின் கணக்கு வழக்குத் தெரிய வேண்டும் என விரும்புகின்றோம்.

எனவே மாவட்ட அரசாங்க அதிபர் தாமதிக்காமல் உடனடியாக நல்லூர் கந்தசுவாமி கோவிலைப் பொதுக் கோவிலாக மாற்றுவதில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

அது மாத்திரமல்லாது, இந்து ஆலயங்கள் அறநிலைச் சட்டம் ஒன்று இதுவரை உருவாக்கப்படவில்லை.

இங்குள்ள இந்து விவகார அமைச்சு அமைச்சரவைத் தீர்மானத்தை மையமாக வைத்து இயங்கி வருகின்றது.

இந்து சமயக் கோவில்களையும், கோவில் சொத்துக்களையும் நிர்மாணிப்பதில் தனியான சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றி அதன் பிரகாரம் கோவில் நிர்வாகங்களைச் செய்ய முன்வர வேண்டும்.

கோவில்களைப் பதிவு செய்கிறார்கள். வருடாவருடம் சிறு தொகையை மானியமாகக் கொடுக்கிறார்கள் .

ஆனால் நிர்வகிப்பதில் சட்டபூர்வமான அதிகாரம் இந்து விவகார அமைச்சிற்கும், இந்து விவகாரத் திணைக்களத்திற்கும் இல்லை எனவும் தெரியும் போது மிகவும் கவலையாகவும், வேதனையாகவும் இருக்கின்றது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# பௌத்த சிங்களம் ...

இந்த நாட்டில் இன்றேல் வேறெங்கும் பௌத்தம் சிங்களம் என்ற ஒரு இனம் கிடையாது, என்றார்.

சிங்கள இனம் என்ற ஒன்று உண்டு.

தமிழ் இனம் என்ற ஒன்று உண்டு.

ஆனால் பௌத்த சிங்கள என்ற ஓர் இனம் கிடையாது.

புத்தர் எப்பவும் சிங்கள இனத்தவர் அல்ல.

அவர் பொதுவானவர்.

உலகத்திற்குச் சொந்தமானவர்.

எல்லாவற்றிற்கும் மேலானவர்.

இலங்கை, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் புத்த மதத்தைப் பரப்பியவர்கள் தமிழ் புத்தத் துறவிகளன்றி வேறு யாரும் அல்ல.

மேலும், கந்தரோடையில் காணப்படும் பௌத்த துறவிகளின் சமாதிகள் எல்லாமே தமிழ் பௌத்த துறவிகள் வாழ்ந்ததற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும் என்று கூற முடியும் என்றார்.

மேலும் நான் இந்த ஆலயத்திற்கு 11 வயதில் வந்து சேர்ந்தேன். இப்போது எனக்கு 55 வயது ஆகின்றது. 44 வருடங்களும் இங்கு என்ன நடந்தது என எனக்கு நன்றாகத் தெரியும்.

இந்த நயினாதீவில் கிட்டத்தட்ட 15 ஆயிரம் பேர் வாழ்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும், அவர்களுடைய குடும்பங்களையும் எனக்கு நன்றாகத் தெரியும். நான் ஆரம்பம் தொட்டு இன்றுவரை இந்தத் தீவில் வாழும் எனது உறவுகளின் இன்ப துன்பங்களில் பங்குபற்றிக் கொண்டு தான் வருகின்றேன். இந்த தீவிலுள்ள "வாழும் சாட்சி" நான் எனத் தெரிவித்தார்.

இங்கே 1985 ஆம் ஆண்டு எல்லா இயக்கங்களும் இருந்த காலத்தில் யாழ்ப்பாணம் ஆரிய குளத்திற்கு அருகிலுள்ள நாக விகாரையை போரால் இயக்கத்தினர் அடியோடு தகர்த்து அழித்தார்கள்.

அதேபோல் நயினாதீவிலுள்ள "புத்தர் வளவை" 1986 ஆம் ஆண்டு ஓர் இயக்கம் அந்த அடியோடு தகர்த்துத் தரைமட்டமாக்கிற்று.

ஆனால் எப்போது தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தனித்து இப் பகுதியில் இயங்க ஆரம்பித்தார்களோ, அதன் பின்னர் நாகதீப புராதன ராஜமகாவிகாரைக்கு எவ்வித அச்சுறுத்தல்களோ, அபாயங்களோ ஏற்படவில்லை.


1995 ஆம் ஆண்டு இறுதி வரையும் யாழ்ப்பாணம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது.

அப்போது விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் எமது ஆலயத்திற்கு வந்து வணங்கிச் சென்றார்கள். எம்மிடம் ஆசி பெற்றுச் சென்றார்கள்.

2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான சமாதான காலத்திலும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் எமது விகாரைக்கு வன்னியிலிருந்து வந்து வணங்கிச் சென்றார்கள்.

அன்று இந்த ஆலயத்திற்குப் பொறுப்பாகவிருந்த வணக்கத்திற்குரிய பிரஸ்மணே வத்தகே தர்ம கீர்த்தி திஸ தேரரிடம் ஆசிர்வாதம் பெற்றுச் சென்றார்கள்.

இவர் இந்த விகாரையில் 56 வருடங்கள் விகாராதிபதியாக இருந்தவர். 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.



மட்டுப்படுத்தப்பட்ட
நயினாதீவு வடக்கு – கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
සීමාසහිත
නාගදීප උතුරු–ධීවර කාර්මිකසින්හේ සමූපකාර සමිතිය
Nainativu North - Fishermen's Co - Operative Society Ltd.
Reg. No :- TRI / Co-op / 474 of 30.10.92

Nainativu - 01
12-08-2016

விகாராதிபதி அவர்கள்
நாகதீப விகாரை

தங்களால் புதிதாக கடலில் நிர்மாணிக்கப்படவிருக்கும் புத்தர் சிலையால் நயினாதீவு வடக்கு கடற்றொழிலாளர் சங்க அங்கத்தவர்களுக்கோ நயினாதீவு வடக்கு கடற்றொழிலாளர்களுக்கோ எந்தவிதமான பாதிப்பும் இல்லை எனவும், இந்தப் புத்தர் சிலையை நிர்மாணிப்பதற்கு எமது பூரண ஆதரவை வழங்குகின்றோம். எனவும் தங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

தலைவர்
செயலாளர்
பொருளாளர்

செயலாளர்

பதிவு இல. TRI/474 of 30.10.1992 நயினாதீவு வடக்கு

இரண்டு வருடங்களுக்கு முன்பு எமது விகாரையின் கடற்பகுதி முகப்பில் 108 அடி உயரமுள்ள ஒரு புத்தர் சிலையை நிர்மாணிக்கத் திட்டமிட்டேன்.

ஆனால் இரண்டு வருடங்களுக்கு முன்பு நாகபூசணி அம்மன் ஆலயக் கோபுரத்தைக் கட்ட ஏற்பாடுகள் செய்தார்கள்.

ஆலயக் கோபுரம் 104 அடியில் நிர்மாணிக்கப்பட்டது.

அதன் பின்னர் 108 அடியில் புத்தர் சிலையை நிர்மாணிக்க நான் என்ன மடையனா?

நான் நாகபூசணி அம்மனை மதித்தும், நயினாதீவு மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பு கொடுக்கும் வகையிலும் எமது விகாரையின் முகப்பில் 37 முழம் இன்றேல் 64 அடியில் பத்மாசனத்தில் அமர்ந்திருக்கும் புத்தர் சிலையை நிர்மாணிக்கவும், நாகலோகத்தை அதற்குக் கீழ் நிர்மாணிக்கவும் திட்டமிட்டுள்ளேன்.


இவ்வாறு நிர்மாணிப்பதற்கு கிட்டத்திட்ட 12 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சிலையின் பின் பக்கத்தில் ஐந்து அடி ஆழத்தில் நாகர் உலகம் ஒன்றை நிர்மாணிக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

இந்தச் சிலையை நிர்மாணிப்பதற்கு நாங்கள் நயினாதீவு வடக்கு கிராமசேவகர், வேலணை பிரதேச செயலர் ஆகியோரின் அங்கீகாரம் பெற்றுக் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூல வள முகாமைத் திணைக்களத்திற்கு விண்ணப்பித்துள்ளோம்.

(தொடர்ச்சி 23 இல்...)

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் :
# நிச்சயமில்லாத் தன்மை நிலவுகின்றது

(வோஷிங்டன்)



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் முன்னணியில் நிற்கும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஹிளாரி கிளிங்டனும், குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டொனால்ட் ட்ரம்பும் முன்னணியில் நிற்கின்ற போதிலும் அவர்கள் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. ஓர் நிச்சயம் அற்ற தன்மை நிலவுகின்றது.

விஸ்கான்சின் மாகாணத்தில் நடைபெற்ற வேட்பாளர் தேர்தலில் டொனால்ட் ட்ரம்பும், ஹிலாரி கிளிங்டனும் தோல்வியடைந்தார்கள்.

விஸ்கான்சின் மாகாணத் தேர்தலில் குடியரசுக் கட்சி முன்னணி வேட்பாளர் டொனாலட் ட்ரம்பை பின்தள்ளிவிட்டு டெட் குரூஸ் வெற்றி பெற்றார்.

குரூஸிற்கு 48 வீதமும், டொனால்ட் ட்ரம்பிற்கு 34 வீதமுமான வாக்குகள் கிடைத்தன.

அதே போல ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளிங்டனும் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

அவர் 43 வீதமான வாக்குகள் பெற்றார். பெடின் சண்டேஸிற்கு 56 வீதமான வாக்குகள் கிடைத்தன.

இது இவர் ஹிலாரி கிளிங்டனை எதிர்த்துப் போட்டியிட்டுப் பெற்ற ஆறாவது வெற்றி ஆகும்.

இதுவரையில் ட்ரம்ப் 740 வாக்குகளையும், குரூஸ் 516 வாக்குகளையும் ஓஹியோ மாகாண ஆளுநர் ஜோன் கசிஜ் 143 வாக்குகளையும் தக்க வைத்துள்ளனர்.

குடியரசுக் கட்சி வேட்பாளராவதற்கு மொத்தம் 1237 பிரதிநிதிகள் வாக்கு ட்ரம்பிற்குத் தேவை.

இதுவரை வாக்களிக்காத 55 வீதமான வாக்காளர்களின் வாக்குகளை அவர் பெற வேண்டும்.

அதே போல் 2383 வாக்குகள் பெற்றால் தான் ஹிலாரி கிளிங்டன் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக வரமுடியும்.

எனவே மீதமுள்ள 1741 வாக்குகளில் 63 வீதம் வெற்றி பெற்றால் தான் குடியரசுக் கட்சி வேட்பாளராகப் பதவி கிடைக்கும்.

பேனிஸ் சண்டேஸ் 1052 வாக்குகளை இதுவரை பெற்றுள்ளார்.

எதிர்வரும் 19 ஆம் திகதி நியூயோர்க் நகரில் தேர்தல் நடைபெறவுள்ளது.




இந்த நியூயோர்க் நகரில் தான் ஹிலாரி கிளிங்டன் இரண்டு முறை செனட்டராகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதையடுத்து கிழக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாநிலங்களிலும் ஏப்ரல் 26 ஆம் திகதி தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

இந்த இரண்டு இடங்களிலும் ட்ரம்ப், கிலாரி கிளிங்டன் வெற்றி பெற வேண்டும் இதற்கு நடைபெறும் களநிலை தான் இரண்டு கட்சி வேட்பாளர்கள் யார் என்று தீர்மானிக்க முடியும்.

# ஆயுதம் தாங்கியோர் செய்த தவறுக்காக தமிழினத்தை நோகாதீர்...!!!

## – அமைச்சர் றிசாத் வேண்டுகோள்...



(கொழும்பு)

சகோதர இனங்களுடன் பரஸ்பர புரிந்துணர்வுடன் வாழ்வதன்மூலமே மீள்குடியேற்றத்தின் வெற்றி தங்கி உள்ளதாக, அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவரும், அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னாரில் மீள்குடியேறிய மக்களை சந்தித்து, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்த பின்னர் அங்கு இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியதாவது,

25 ஆண்டுகள் தென்னிலங்கை அகதி முகாம்களில் நாம் பட்ட கஷ்டங்கள் போதும். இனியாவது நிம்மதியாக வாழ வேண்டும். சிறுசிறு பிரச்சினைகளுக்காக நமக்குள் அடிபட்டுக் கொண்டிருக்க முடியாது. அதேபோன்று மாற்றுச் சமூகத்தைச் சேர்ந்த ஒரு தனிநபருடன், முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த இன்னுமொரு தனிநபர் முரண்பட்டு உருவாகும் தனிப்பட்ட பிரச்சினைகளை, இரண்டு இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளாக மாற்றி, இனங்களுக்கிடையிலான மோதலாக உருவாக இடமளிக்க வேண்டாம்.

ஆயுதம் தாங்கியோர் செய்த தவறுக்காக, தனது சகோதரத் தமிழினத்தை நோகடிக்காதீர்கள். வேற்றுமை உணர்வுகளை வேரோடு களைந்து, சமத்துவமாக வாழப் பழகிக்கொள்ளுங்கள். இறைவனுக்கு மாற்றமான காரியங்களில் ஈடுபடாதீர்கள். ஏனைய சமூகங்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து இன ஐக்கியத்துக்கு வழிகோலுங்கள்.

இந்த சந்திப்பில் மாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், சட்டத்தரணி மில்ஹான், அமைச்சரின் இணைப்பதிகாரிகளான முனவ்வர், முஜாஹித் போன்றவர்களும் பங்கேற்றனர்.

# சொத்துகுவிப்பு வழக்கில் ஜெயலலிதா குற்றமற்றவரென தீர்ப்பு வழங்கவேண்டும்

## மூத்தவழக்கறிஞர் வாதம்

(டெல்லி)

வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்த வழக்கில் முதல்வர் ஜெயலலிதா குற்றமற்றவர் என உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று தம்முடைய இறுதி வாதத்தில் மூத்த வழக்கறிஞர் நாகேஸ்வரராவ் வலியுறுத்தினார்.

ஜெயலலிதா விடுதலைக்கு எதிரான மேல்முறையீட்டு மனுக்களை நீதிபதிகள் பினாகி சந்திரகோஷ், அமித்வா ராய் ஆகியோர் அடங்கிய பெஞ்ச் விசாரித்து வருகிறது.

இம்மனு மீதான இறுதி வாதத்தை முன்வைத்த ஜெயலலிதா தரப்பு மூத்த வழக்கறிஞர் நாகேஸ்வரராவ், சொத்து குவிப்பு வழக்கை விசாரித்த விசாரணை நீதிமன்றம் சட்டப்படி வழக்கை நடத்தவில்லை. வருமானவரி ஆவணங்களை அது பரிசீலிக்கவே இல்லை. ஜெயலலிதாவும் சசிகலாவும் ஒரே வீட்டில்தான் வசிகின்றனர். ஆனால் போயஸ் தோட்டத்தில் எந்த ஒரு நிறுவனமும் இயங்கவில்லை. அப்படியான நிலையில் இருவரும் ஒரே வீட்டில் இருக்கிறார்களா? பணப் பரிமாற்றம் நடந்ததா?



விசாரணை நீதிமன்றம் ஆராய்ச்சி செய்திருப்பது அர்த்தமற்றது. ஆகையால் ஜெயலலிதா குற்றமற்றவர் என உச்சநீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டும் என்றார். இத்துடன் நாகேஸ்வரராவின் வாதம் நிறைவடைந்தது. இதனைத் தொடர்ந்து கர்நாடகா அரசும் ஜெயலலிதா தரப்பும் தம்முடைய வாதங்களை எழுத்து பூர்வமாக தாக்கல் செய்ய நீதிபதிகள் உத்தரவிட்டு வழக்கு விசாரணையை ஏப்ரல் 19 ஆந் திகதிக்கு வைத்தனர்.

அன்றைய தினம் சசிகலா, இளவரசி, சுதாகரன் சார்பாக மூத்த வழக்கறிஞர் சேகர் நாப்தே ஆஜராகி வாதங்களை முன்வைக்க உள்ளார்.

# தேசிய அரசாங்கத்தில் 92 அமைச்சர்கள்

(கொழும்பு)

அரசாங்கத்தில் மொத்தமாக 92 அமைச்சர்கள் உள்ளார்கள் என்றும், "கூட்டு எதிர்க்கட்சியினர் யாரும் தேசிய அரசாங்கத்தில் சேர விரும்பினால் அவர்கள் வரலாம்" என்றும் அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.

பிரதம அரசாங்க கொறடாவும் நாடாளுமன்ற சீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சருமான கயந்த கருணாதிலக நாடாளுமன்றத்தில் பேசுகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட மொத்தமாக 47 கபினட் அந்தஸ்துள்ள அமைச்சர்களும், 20 இராஜாங்க அமைச்சர்களும், 25 உதவி அமைச்சர்களும் தற்சமயம் உள்ளார்கள் எனக் கூறினார்.

அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில் "இது தேசிய அரசாங்கம் இன்னும் நிறையப் பேர்களை அமைச்சர்களாக நியமிக்க இடமுண்டு. எனவே கூட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் அவ்வாறு சேருவதற்கான ஜாடை மாடைகளைக் காட்டினால் அதை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் என்றும் கூறினார்.



"அரசாங்கத்தில் சேர விரும்பும் கூட்டு எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள் விரும்பினால் எவ்வளவு தொகையான அமைச்சுக்கள் இன்னும் நிரப்ப உள்ளன என்பதை அவர்கள் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

அண்மையில் எதிர்க்கட்சியை சேர்ந்த மகிந்த யாப்பா அபயவர்தனா மொத்தமாக உள்ள அமைச்சர்களின் விபரத்தை நாடாளுமன்றத்தில் கோரிய போது அரசு அந்த விபரத்தை வழங்க முன் வந்ததை அடுத்து அமைச்சர் கயந்த கருணாதிலக, அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட விபரங்களை சபையில் அறிவித்தார்.



# அரசகேசரியின் பதில்கள்

**கேள்வி :** வடக்கை அதிகார மேலாதிக்க மனப்பான்மையுடன் மத்திய அரசாங்கம் நடாத்துவதாக முதல்வர் விக்கினேஸ்வரன் குற்றம் சுமத்தியுள்ளாரே?

**பதில் :** அவருக்கு வேற வேலை இல்லை

*பொன்னம்பலம் நாவற்குழி*

**கேள்வி :** வர, வர அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்கிறதே இது நல்லாட்சி அரசின் சாதனையா?

**பதில் :** மொத்தமாய் 225 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் அமைச்சர்கள் ஆக்கினால் ஒரு பிரச்சினையும் வராது.

*திருச்செந்தூரன் கிளிநொச்சி*

**கேள்வி :** பிரதமரின் சீன விஜயம் எந்த நாட்டிற்கு சாதகமாக அமையும்?

**பதில் :** இலங்கைக்குத்தான்.

*மயூரன் கொழும்பு*

**உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்பவும் சிறந்த கேள்விகளுக்கு பணப்பரிசில் தர அரசகேசரியார் தயாராக உள்ளார்.**

*சிறந்த முதல் கேள்விக்கு ரூபா 1 000*

*இரண்டாவது கேள்விக்கு ரூபா 500*

*மூன்றாவது கேள்விக்கு ஆறுதல் பரிசாக ரூபா 100 வழங்கப்படும்.*

**வரும் கேள்விகளிலிருந்து சிறந்த கேள்வியை தெரிவு செய்யும் பொறுப்பு அரசகேசரியாருடையதாகும்.**

**ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைக்கு முன்னர் வரும் கேள்விகள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டு பரிசில் வழங்கப்படும்.**

*ஒரு வாரத்திற்கு 10 கேள்விகள் மாத்திரமே தெரிவு செய்யப்படும். அதன் பின்னர் வரும் மிகுதிக் கேள்விகள் அடுத்தவாரம் பிரசுரமாகும்.*

*கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி*

**தினச்செய்தி**

*தில்லைகட்டிவீதி,*

*சுன்னாகம்.*

**கேள்வி :** உலகை உலுக்கியுள்ள பனாமா பேப்பர்ஸ் விவகாரம் இலங்கையர்களில் முன்னாள் ஆட்சியாளர்களும் உள்ளடங்குவதாக தகவல்கள் வருகின்றனவே?

**பதில் :** கடவுள் புண்ணியத்தில் நான் பிழைத்துக் கொண்டேன்..

*வெற்றிவேல் யாழ்ப்பாணம்*

**கேள்வி :** தெற்கைச் சேர்ந்த சில அரசியல் சக்திகளுக்கே யுத்தமொன்றின் தேவை உள்ளதாக வடக்கின் அவைத்தலைவர் சி.வி. கே.சிவஞானம் கூறியுள்ளது பற்றி.?

**பதில் :** அடிடா சக்கை.

*நிமலன் தெல்லிப்பளை*

**கேள்வி :** இந்து ஆலயங்களில் மிருக பலிக்கான தடை. தங்களின் கருத்து யாதோ?

**பதில் :** கடந்த 2014 ஆம் ஆண்டு கவுணாவத்தையில் மிருக வதையை தடுக்க வேண்டுமென்று மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தொடுத்தவன் நான். அதிலிருந்து எனது கருத்து தெளிவாக புரியுமென நம்புகின்றேன்..

*வசந்தா சங்கானை*

**கேள்வி :** மகிந்தவின் பாதுகாப்பிற்கிருந்த இராணுவம் விலக்கி கொள்ளப்பட்டுவிட்டதே?

**பதில் :** இப்ப அதுக்கு என்ன வந்துவிட்டது.

*ஜெனிறோய் பேசாலை*

**கேள்வி :** கடற்படை வீரர்கள் இருவரை அமெரிக்காவில் தனது மகனின் வீட்டில் சமையல் காரர்களாக பயன்படுத்தியுள்ளாராமே பஸில்?

**பதில் :** முன்னாள் ஜனாதிபதி அலரிமாளிகையில் தனது காரியாலயத்தை வைத்திருந்த போது இலங்கை கடற்படையினர் தான் உணவு சமைத்து பரிமாறினர். அண்ணன் எவ் வழியோ அவ் வழியே தம்பி.

*அஸ்ரப் காத்தான்குடி*

**கேள்வி :** ரி 20 உலக கிண்ணத்தை மேற்கிந்தியத்தீவுகள் கைப்பற்றியுள்ளதே?

**பதில் :** நல்லதுதானே. கடைசியாக அடித்த நான்கு சிக்சரும் எனது மனக்கண்ணில் ஓடிக் கொண்டிருக்கிறது.

*பரதன் கொக்குவில்*

**கேள்வி :** யுத்தகாலத்தில் தமது சொத்துக்களை இழந்தவர்கள் நீதிமன்றை நாடலாமென சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது இதன்மூலம் தமிழர் இழந்த சொத்துக்கள் மீளவும் கிடைக்குமா?

**பதில் :** அட்ரா சக்கை. திரு.சுமந்திரனுக்கும் மற்றும் சட்டத்தரணிகளுக்கும் அள்ளு காசு தருமே தான்.

*வருணன் ஓமந்தை*


---

# உலகை உலுக்கிய பனாமா பேப்பர்ஸ்

உலகநாடுகளின் செல்வந்தர்களும், செல்வாக்கு மிக்கவர்களும் தங்களிற்கு வழங்கப்பட்டுள்ள வரிச்சலுகையை தங்கள் உண்மையான வருமானத்தை மறைப்பதற்கு எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பது பாரிய ஆவணங்கள் கசிந்ததின் மூலம் தெரியவந்துள்ளது.

உலகின் மிகவும் இரகசியமான நிறுவனங்களில் ஒன்றான மொசாக்பொன்செகா என்ற பனாமா சட்ட நிறுவனத்தின் ஆவணங்களே இவ்வாறு வெளியுலகிற்கு தெரியவந்துள்ளன. இவர்கள் தங்கள் வருமானத்தின் பெரும் பகுதியை மறைத்து வெளிநாடுகளில் இயங்கும் நிறுவனங்களில் முதலீடு செய்துள்ளனர், இவ்வாறான நிறுவனங்கள் பெருமளவிற்கு போலியானவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் எவ்வாறு சட்டவிரோத பணப்பரிமாற்றத்தில் ஈடுபட்டனர், தடைகளையும், வரிகளையும் மீறினர் என்பது கசிந்துள்ள ஆவணங்களின் மூலம் தெரியவந்துள்ளது. உதாரணத்திற்கு அதிகாரிகளிடமிருந்து தப்புவதற்காக அமெரிக்க கோடீஸ்வரர் ஒருவரிற்கு நிறுவனமொன்று போலி உரிமையாளர் என தெரிவிக்கும் ஆவணங்களை வழங்கியுள்ளது. இது சர்வதேச சட்டங்களிற்கு முற்றிலும் முரணான செயலாகும்.




## பனாமா பேப்பரில் யார் உள்ளனர்?

இந்த ஆவணங்களில் தற்போதைய, முன்னாள் ஜனாதிபதிகள் 12 பேரின் பெயர் விபரங்கள் காணப்படுகின்றன, இவர்களில் தங்கள் நாட்டையே சூறையாடிய சர்வாதிகாரிகளும் உள்ளனர். இது தவிர உலகத் தலைவர்களினதும் அரசியல்வாதிகளினதும் உறவினர்கள் குடும்பத்தவர்கள் 60 பேர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. ரஸ்ய ஜனாதிபதி விளாடிமிர்புடினின் நெருங்கிய சகாக்கள் சட்டவிரோத பணப்பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ளது குறித்து குறிப்பிட்ட ஆவணங்கள் மூலம் தெரியவந்துள்ளது. இதுதவிர சீன ஜனாதிபதியின் நெருங்கிய உறவினர், உக்ரைன் ஜனாதிபதி, அர்ஜென்டீனா ஜனாதிபதி, பிரிட்டிஸ் பிரதமர் டேவிட் கமரூனின் தந்தை,பாகிஸ்தான் பிரதமரின் 3 புதல்வர்கள் போன்றவர்களின் பெயர்களும் காணப்படுகின்றன.

ஐஸ்லாந்து பிரதமரின் பெயர் இந்த ஆவணங்களில் காணப்பட்டதைத் தொடர்ந்து அவர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. உலக கால்பந்து அமைப்பான பீபாவின் பெயரும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்பின் மூன்று புதல்வர்கள் லண்டனில் சொத்துக்களை வைத்திருக்கும் வெளிநாடுகளிலுள்ள நிறுவனங்களுடன் தொடர்புகளை வைத்திருப்பது தெரியவந்துள்ளது. பாகிஸ்தான் பிரதமரின் புதல்வர்கள் ஹூசைன் மற்றும் ஹசனும் மகள் மரியமும் வெளிநாடுகளிலுள்ள பல நிறுவனங்களுடன் தொடர்புகளை கொண்டுள்ளதை கசிந்துள்ள ஆவணங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

## வரிச்சலுகைகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன?

வரிச்சலுகைகளை சட்ட பூர்வமான விதத்தில் பயன்படுத்தலாம் என்றாலும் ஆவணங்களில் காணப்படும் பலர் உண்மையில் தங்கள் உண்மையான வருமானத்தை மறைப்பதற்கே இவற்றை பயன்படுத்தியுள்ளனர். பணம் எங்கிருந்து கிடைக்கின்றது, என்பதை மறைப்பதற்கும் வரிகள் செலுத்துவதை தவிர்ப்பதற்கும் அவர்கள் இந்த சலுகையை பயன்படுத்தியுள்ளனர்.

மேலும் வெளித் தோற்றத்திற்கு சட்டரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக காண்பித்துக் கொண்டு வேறு நபர்களின் பணத்தை அதன் உரிமையாளர்கள் யார் என்பதை மறைத்து, நிர்வகிக்கும் நிறுவனங்கள் குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பனாமா பேப்பர்களை பகிரங்கப்படுத்தியது யார்?

ஜேர்மனியை சேர்ந்த Sueddeutsche Zeitung என்ற செய்தித்தாள் 1.5 மில்லியன் ஆவணங்களை பெற்றுக்கொண்டு புலனாய்வு செய்தியாளர்களின் சர்வதேச அமைப்பிடம் வழங்கியுள்ளது. இதன் பின்னர் புலனாய்வு செய்தியாளர்களின் சர்வதேச அமைப்பு 76 நாடுகளைச் சேர்ந்த 107 ஊடக அமைப்புகளுடன் இணைந்து ஒரு வருடத்திற்கு மேலாக குறிப்பிட்ட ஆவணங்களை ஆராய்ந்துள்ளது. 214 000 நிறுவனங்கள், அறக்கட்டளைகள், மன்றங்கள் ஆகியவற்றின் பெயர்களை இந்த ஆவணம் வெளிப்படுத்தியுள்ளது.

# விண் முட்டும் கோபுரங்களில் விவசாயப் பண்ணைகள்



## சாத்தியமா?

உலக மக்கள் தொகை தற்போது எழுநூறு கோடி. 2050 ஆம் ஆண்டு இது ஆயிரம் கோடியாக உயரும்போது அவர்களுக்கான உணவைத் தரும் அளவுக்கு நிலம் இருக்கிறதா என்கிற கேள்வி பலராலும் எழுப்பப்படுகிறது.

இந்த பிரச்சினையைத் தீர்க்க ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வித்தியாசமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஸ்கை பார்ம்ஸ் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் விண்ணில் உருவாகும் விவசாயப்பண்ணைகள் இதற்கான ஒரு பகுதித் தீர்வாக அமையலாம் என்று விவசாய பெரு வர்த்தக நிறுவனங்கள் கருதுகின்றன.

அமெரிக்காவின் நியூஜெர்ஸியிலுள்ள நேவார்க் நகர மையத்தில் இருக்கும் ஒரு இடத்திற்குள் பல ஏக்கர் பரப்பில் பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. அத்தனையும் பசுமையான கீரைகள்.

தரையில் இருந்து கூரை வரை பல அடுக்குகளில் இவை பயிரிடப்பட்டுள்ளன. இவை மண்ணிலும் வளரவில்லை சூரிய ஒளியைக் காணவும் இல்லை. பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட லெட் விளக்குகளின் ஒளியில் காற்றாடிகளால் விசிறப்படும் நீர்த்திவலைகளை உண்டு இவை வளர்கின்றன.

ஏரோபோனிக்ஸ் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இந்த விவசாய முறை மண்ணில் பயிரிடுவதைவிட பல மடங்கு அதிக மகசூல் தருகிறது என்கிறார் ஏரோபார்ம்ஸ் நிறுவன பங்குதாரர் மார்க் ஓஷிமா.

“மண்வயலில் 30 முதல் 45 நாட்களில் விளையும் விளைச்சலை இங்கே 12 முதல் 16 நாட்களில் விளைவிக்கலாம். வயலில் ஆண்டுக்கு இரண்டு முதல் மூன்று போக அறுவடைக்கு பதிலாக இங்கே 30 போகம் விளைவிக்கலாம். இது மிகப்பெரிய மாற்றம்” என்கிறார் மார்க் ஓஷிமா.

அமெரிக்காவில் மட்டுமல்ல ஐரோப்பாவிலும் இத்தகைய முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

லண்டன் கட்டட வடிவமைப்பாளர்களான ரோஜெர்ஸ் ஸ்டிர்க் அண்ட் பார்ட்னர்ஸ் நிறுவனம், ஸ்கைபார்ம்ஸ் என்கிற வானில் உயரும் விவசாயம் என்கிற ஒரு மாதிரியை முன்வைக்கிறார்கள்.

மூங்கில் மற்றும் ஒளியை மறைக்காத வலுவான பிளாஸ்டிக்கால் கட்டப்படும் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட அடுக்குமாடி கோபுரங்களில் இந்த விவசாயம் செய்யப்படும். 80 மீட்டர் உயரம் வரை எழுப்பப்படும் இத்தகைய பிரத்யேக கோபுரங்களில் பல அடுக்குகளில் இயற்கையான சூரிய ஒளியையும் நீர்த்திவலை காற்றாடிகளையும் பயன்படுத்தி விவசாயம் செய்யலாம். நகரின் மையத்திலேயே கூட இவற்றை கட்டமுடியும் என்கிறார் இந்த நிறுவனத்தைச் சேர்ந்த ஸ்கைபார்ம் வடிவமைப்பாளர் இவன் ஹார்பர்.

“பயன்பாட்டாளருக்கு பயிர்களை அருகில் கொண்டுவரும் இந்த மாதிரி விவசாய முறை உலகின் அனைத்து தரப்பினரையும் ஈர்க்கும்” என்கிறார் அவர்.

எதிர்கால நிலப்பற்றாக்குறைக்கு இந்த வான்நோக்கி வளரும் விவசாயம் முழுமையான தீர்வல்ல என்பதை இதனை உருவாக்குபவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

அதிகபட்ச லாபம் தரக்கூடிய கீரைகள் மற்றும் பச்சைக்காய்கறிகளை பயிரிடுவதன் மூலம் மட்டுமே இத்தகைய பண்ணைகள் வர்த்தக ரீதியில் வெற்றிபெற முடியும்.

ஆனால் உலகின் மூன்றில் இரண்டு பங்கு மக்களுக்கு அரிசியே பிரதான உணவு. அந்த அரிசியை இதுபோன்ற நகர கட்டடங்களில் பயிரிட முடியாது. அதற்குத் தேவையான லட்சக்கணக்கான ஏக்கர் நிலத்தை எங்கே தேடுவது என்பதுதான் விடை காண முடியா கேள்வி.



# தங்க காரில் வலம் வரும் அப்துல்லா!

லண்டன் நகர வீதிகளில் வலம்வரும் சவுதி கோடீஸ்வரரின் தங்க முலாம் பூசப்பட்ட பிரமாண்ட கார்களின் அணிவகுப்பு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சவுதி அரேபியாவின் இளவரசர் துர்கி பின் அப்துல்லா (44). மிகப்பெரும் கோடீசுவரரான இவர், இரும்புக்கு பதிலாக தங்கத் தகடுகளால் தயாரிக்கப்பட்ட சூப்பர் கார்களில் லண்டன் நகர வீதிகளில் வலம் வருகிறார்.

தனது ஆடம்பரக் கார்களான பென்ட்லி, மெர்சிடஸ், லம்பாகினி, ரோல்ஸ் ராய்ஸ் ரக கார்களில் தங்கத் தகடுகளை பொருத்தி வலம்வரும் இளவரசர் துர்கி பின் அப்துல்லா பார்ப்பவர்களை பரவசத்தில் ஆழ்த்தி வருகிறார்.

இளவரசர் துர்கி பின் அப்துல்லாவின் சமூக வலைத்தள புகைப்படங்களும், வீடியோக்களும் அவரது ஆடம்பர வாழ்க்கையை பறைசாற்றுகின்றன. ஒரு புகைப்படத்தில் பாலைவன ஒட்டகம் ஒன்றை அவர் தனது விலைமதிப்பு மிக்க மெர்சிடஸ் ஜி 63 இல் துரத்துகிறார். மற்றொரு புகைப்படத்தில் மெர்சிடஸ் ஜீப்பின் சாரதி இருக்கையில் சிறுத்தை ஒன்று நிற்கிறது.

தெற்கு லண்டனில் உள்ள அவரது வீட்டில் மட்டும் பல கோடி பவுண்டுகள் மதிப்பிலான தங்க கார்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக இங்கிலாந்து பத்திரிகை தெரிவித்துள்ளது. அந்த கார்களுடன் செல்பி எடுத்துக் கொள்ள லண்டன் நகர இளைஞர்களும், இளம்பெண்களும் அதிக ஆர்வம் காட்டிவருவது குறிப்பிடத்தக்கது.

# ஸ்மார்ட்போன் வடிவில் துப்பாக்கி!



அமெரிக்காவில் மின்னசோட்டாவை சேர்ந்த ஐடியல் கான்சீல் நிறுவனம் ஒரு புதுமையான கைதுப்பாக்கியை வடிவமைத்து தயாரித்துள்ளது. இந்த துப்பாக்கி ஸ்மார்ட் போன் வடிவிலுள்ளது.

இந்த இரட்டைக்குழல் 380 கலிபர் ரக துப்பாக்கி இந்த ஆண்டு இறுதியில் விற்பனைக்கு வருகிறது. இதன் விலை ரூ.27 ஆயிரம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதை அனைத்து இடங்களுக்கும் சுலபமாக எடுத்து செல்ல முடியும். இந்த துப்பாக்கியை ஸ்மார்ட்போன் போன்று மடித்து கையடக்கமாக பாதுகாப்பாக வைத்துக் கொள்ள முடியும்.

இதன் தயாரிப்பு பணி வருகிற ஜூன் மாதம் தொடங்குகிறது. விற்பனை அக்டோபரில் தொடங்கும் என ஐடியல் கான்சீல் நிறுவனத்தின் தலைமை அதிகாரி கிர்க் ஜெல்பெரிக் தெரிவித்துள்ளார்.

# 70 ஆண்டுகளுக்கு பின்னர் காதலியை கரம் பிடித்த காதலன்



இங்கிலாந்தை சேர்ந்தவர் ராய் விக்கர்மேன் (90). இவர் இரண்டாம் உலகப் போரில் பங்கேற்ற ராணுவ வீரர் ஆவார். கடந்த 1940 ஆம் ஆண்டு பள்ளியில் படித்த போது நோரா ஜாக்சன் என்ற பெண்ணை சந்தித்தார். தற்போது இவருக்கு 89 வயது ஆகிறது. இருவரும் காதலித்தனர்.


1946 ஆம் ஆண்டு இவர்களுக்கு திருமணம் செய்ய முடிவு செய்து நிச்சய தார்த்தம் செய்து கொண்டனர். அந்த நேரம் இரண்டாம் உலகப் போர் அறிவிக்கப்பட்டது. எனவே, விக்கர்மேன் போருக்கு சென்று விட்டார்.

போரில் அவர் படுகாயம் அடைந்தார். அதற்காக சிகிச்சை பெற்ற அவர் மன உளைச்சல் அடைந்தார். எனவே திருமண எண்ணத்தை மறந்த அவர் நோரா ஜாக்சனை பிரிந்தார். அதை தொடர்ந்து நோரா ஜாக்சனுக்கு வேறு ஒருவருடன் திருமணம் நடந்தது. தற்போது அவரது கணவர் இறந்து விட்டதால் விதவையாக உள்ளார். இதற்கிடையே மன அழுத்தத்தில் இருந்து குணமான விக்கர்மேன் நோராவை தொடர்ந்து காதலித்து வந்தார். அவரை சந்திக்க பல வருடங்களாக தேடினார். கண்டு பிடிக்க முடியவில்லை.

திருமண நிச்சயதார்த்தம் நடந்து 70 ஆண்டு கடந்த நிலையில் சமீபத்தில் ஒரு ரேடியோ நிகழ்ச்சியில் பங்கேற்ற அவருக்கு வாய்ப்பு ஏற்பட்டது. அப்போது தனது காதல் கதையை கூறினார். அதைக் கேட்ட நோரா ஜாக்சன் விக்கர்மேனை சந்தித்தார். அவர்கள் இருவரும் தற்போதும் ஒருவரை ஒருவர் காதலிப்பதை உணர்ந்தனர். எனவே இருவரும் தற்போது திருமணம் செய்து கொண்டனர்.

# சொன்னார்கள் சொன்னார்கள்

அரசாங்கம், வடக்கு மாகாணத்தை 'அதிகாரத்துவ, மேலாதிக்க, அராஜக' மனப்பாங்குடன் நடாத்த முயற்சிக்கின்றது.



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான வீடமைப்புத் திட்டம் தொடர்பாக மத்திய அரசாங்கமானது மாகாண மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடன் விரிவாகக் கலந்துரையாடவில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்கு 65,000 வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கான திட்டம் ஒன்று தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த வீட்டுத் திட்டம் தொடர்பாக மத்திய அரசாங்கமானது மாகாண நிர்வாகங்களுடன் விரிவாகக் கலந்துரையாடவில்லை. இதன் மூலம் வடக்கு மாகாணத்தின் மீது அரசாங்கமானது தனது மேலாதிக்க, அதிகாரத்துவ மற்றும் அராஜகப் போக்கைக் கடைப்பிடிக்கிறது.

வடக்கு மாகாண முதலமைச்சர்

**சி.வி. விக்னேஸ்வரன்**

oooooooooooooooooooooooooooooooooooooooo

வடக்கில் 65 ஆயிரம் பொருத்து வீடுகளை அமைக்கும் திட்டத்துக்கு எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில், இந்த திட்டம் நிறுத்தப்படமாட்டாது ஆனால் பல்வேறு திருத்தங்களுடன் நடைமுறைப் படுத்தப்படும்

ஆனால், இந்தத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள சில வசதிகள் பயனாளிகளுக்குத் தேவையற்றவை.

"இந்த திட்டத்தில் எரிவாயு உருளை, எரிவாயு அடுப்பு, கணினி மற்றும் தொலைக்காட்சியும் அடங்கியுள்ளன.

இந்த திட்டத்தை எதிர்த்தால், தம்மைப் பார்த்து நீங்கள் பொறாமைப்படுவதாக மக்கள் நினைப்பார்கள்.

மக்கள் இந்த திட்டத்தை விரும்புகிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் ஏழைகள். அவர்கள் இதுபோன்ற நல்ல வாழ்க்கையை விரும்புகிறார்கள்."



வடக்கு மாகாண ஆளுனர்

**ரெஜினோல்ட் குரே**

oooooooooooooooooooooooooooooooooooooooo

வடக்கு கிழக்கை பிரித்து கொடுத்து அதில் முகாம் ஒன்றை அமைப்பதற்கு அமெரிக்கா முயற்சிக்கின்றது. அதற்காகவே இந்த அரசாங்கத்திற்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் ஆதரவளித்தன.

போர் ஆரம்பிக்க முன்னதாக நாட்டில் நிலவிய நிலைமைகளே தற்போது நிலவுகின்றன. சாவகச்சேரியில் குண்டு மீட்பைப் போன்றே சிங்கள மக்கள் வடக்கிலிருந்து வெளியேறுகின்றனர்.

இதற்கு அரசாங்கத்தின் நடவடிக்கைகளே காரணமாக அமைந்துள்ளது. தமிழ் இனவாதிகளுக்கும் மேற்குலக நாட்டவருக்கும் தேவையான வகையிலேயே இந்த அரசாங்கம் செயற்படுகின்றது.



நாட்டின் பாதுகாப்பையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

வடக்கு முதலமைச்சர், எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் ஆகியோரின் பிரிவினைவாத சிந்தனைகளை வலுப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தும் நல்லாட்சி அரசாங்கம் அமெரிக்கா, இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் கோரிக்கைக்கு இணங்கியும் பல பிரிவினைவாத செயற்பாடுகளை உள்நாட்டில் முன்னெடுக்கின்றது.

**குணதாச அமரசேகர**

oooooooooooooooooooooooooooooooooooooooo

உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ளும் வகையில் 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்தினை வடக்கு மற்றும் கிழக்கு வாழ் மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். கடந்த அரசாங்க ஆட்சிக்காலத்தின் போது இந்திய அரசாங்கத்துடன், கலந்துரையாடி, இந்திய வீடமைப்புத் திட்டத்தை முன்னெடுத்திருந்தோம்.

அந்த வகையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் 65 ஆயிரம் வீட்டுத்திட்டம் இன்னும் தரமானதாக முன்னெடுத்திருக்க முடியும். நல்லாட்சி அரசாங்கத்தில் இணக்க அரசியல் நடத்துபவர்களே இதனை செய்திருக்க வேண்டும்.

எனினும், அவர்கள் எமது மக்கள் குறித்து எதுவித அக்கறையும் கொண்டிருக்கவில்லை என்பதையே அவர்களது செயற்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன.

எவ்வாறாயினும், இத் திட்டத்தின் வீடுகளை ஓர் இடைக்கால ஏற்பாடாக உடனடித் தேவைகளுக்கு உட்பட்டிருக்கும் மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். குறித்த வீடுகளைப் பெறாமல் இத் திட்டம் நிராகரிக்கப்படுமானால் இதற்கு மாற்றீடாக ஒரு திட்டம் எமக்குக் கிடைக்கப் போவதில்லை.

இரணைமடு நீர் வழங்கல் திட்டத்தை எதிர்த்து அதனை முன்னெடுக்க விடாமல் தடுத்த தமிழ்த் தலைமைகளால் இன்று வரை எமது மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட முடியாமல் உள்ளது.



நாடாளுமன்ற உறுப்பினர்

**டக்ளஸ் தேவானந்தா**

oooooooooooooooooooooooooooooooooooooooo

## பார்வையற்றவர்களுக்கு உதவி புரியும் பேஸ்புக்

பேஸ்புக்கில் பதிவேற்றப்படும் படங்கள் என்ன என்பதை பார்வைத் திறன் இல்லாதவர்களுக்கு எடுத்துக்கூறி, அதனை விளங்கப்படுத்தும் முறைமை ஒன்றை பேஸ்புக் அறிமுகப்படுத்தியுள்ளது.

எழுத்து வடிவத்தை மையப்படுத்தியதாக இருந்த இணையப் பக்கங்கள் இப்போது அதிகளவில் படங்களை மையப் படுத்தியே வருகின்றன.

ட்விட்டர், இன்ஸ்டாகிராம் மற்றும் பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களில் நாளாந்தம் அண்ணளவாக 1.8 பில்லியன் படங்கள் பதிவேற்றப்படுகின்றன.

பேஸ்புக்கில் பதிவேற்றப்படும் படங்களில் என்ன உள்ளது என்பதை பார்வைத்திறன் இல்லாதவர்களுக்கு எடுத்துக்கூறி, அதனை விளங்கப்படுத்தும் முறை ஒன்றை பேஸ்புக் அறிமுகப்படுத்தியுள்ளது.

எழுத்து வடிவிலான தரவுகளை ஒலி வடிவில் வெளியிடும் ஸ்கிரீ ரீடர்ஸ் என்று அழைக்கப்படும் அதிநவீன மென்பொருள் ஒன்றை கண்பார்வையில்லாதோர் பாவித்து வந்தனர். எவ்வாறாயினும் அந்த மென் பொருளால் படங்களை வாசிக்க முடியாது என்ற குறைபாடு இருந்து வந்தது.

அந்த குறைபாட்டினையும் நீக்கி கண் பார்வையற்றோருக்கு அதிக பயனை வழங்கும் வகையில் பேஸ்புக்கின் புதிய படைப்பு வெளிவந்துள்ளது.

படத்தில் உள்ளவற்றைக் கேட்டு, படத்தை கற்பனையில் பார்க்க முடிகிறது என இதன்மூலம் பயனடைந்தவர்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

பேஸ்புக்கில் பதிவேற்றப்படும் படங்கள் ஆர்டிபிஷல் இன்டலிஜன்ஸ் மூலம், பயனாளிக்கு ஒலி வடிவில் விளங்கப்படுத்தப்படுகிறது.

இந்த புதிய கண்டுபிடிப்பை பேஸ்புக்கின் பொறியியலாளர் மாட் கிங் உருவாக்கியுள்ளார். மாட் கிங் பார்வைத்திறன் அற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தினச்செய்தி சிறுகதைப் போட்டி

இந்தச் சிறுகதைப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சுமார் எழுநூற்று ஐம்பது தொடக்கம் ஆயிரம் சொற்களுக்கு இடையில் எழுதி அனுப்பி வைக்க வேண்டும்.

எழுதுபவரின் சொந்தக் கற்பனை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். **சமகால விடயங்களை உள்ளடக்கியதாக சிறுகதை அமைய வேண்டும்.**

இப்போட்டி **ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி** வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒருவர் ஒரு சிறுகதை மாத்திரமே அனுப்பலாம். ஒன்றிற்கு மேற்பட்ட சிறுகதைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஏ4 தாளில் ஒரு பக்கத்திற்கு மாத்திரம் எழுதி அனுப்ப வேண்டும். அத்துடன் எழுதுபவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையையும் (பெயர், விலாசம் அடையாள அட்டை இலக்கம், தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம், அத்தோடு பாஸ்போட் சைஸ் புகைப்படம்) இணைத்து அனுப்ப வேண்டும்.

வெற்றி பெறும் சிறுகதைகளுக்குப் பரிசுகள் உண்டு.

**முதல் பரிசு ரூபா 10000**
**இரண்டாவது பரிசு ரூபா 5000**
**மூன்றாவது பரிசு ரூபா 2500**

முதல் பத்து சிறுகதைகளும் வரிசைக்கிரமப்படி தினச்செய்தி வாரமலரில் பிரசுரிக்கப்படும். அதையடுத்து தினச்செய்தி சிறுகதைத் தொகுப்பு என்று பத்து சிறுகதைகளையும் சேர்த்து புத்தக வடிவில் வெளியிடப்படும். புத்தக வடிவில் வெளியிட்டு புத்தக அறிமுக விழாவின் போது புத்தகத்தில் சிறுகதை எழுதிய பத்து எழுத்தாளர்களும் விழா மேடையில் வைத்துக் கௌரவிக்கப்படுவார்கள்.

தபால் மூலம் சிறுகதை எழுதி அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி

**தினச்செய்தி**

தில்லைக்கட்டி லேன்,

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிசா பிஸ்வால், வோசிங்டனைத் தளமாகக் கொண்டியங்கும் பாதுகாப்புக்கான புதிய அமெரிக்க

இது சிறப்புக் கவனத்திற்கு உட்பட்டுள்ளது. இலங்கையில் ஏற்பட்டுள்ள இத்தகைய முன்னேற்ற நிலையை வரவேற்ற நாடுகளில் அமெரிக்காவும் முன்னிலை வகிப்பதுடன் அமெரிக்காவானது

தல் போன்றவற்றில் இன்னமும் பலவற்றைச் செய்ய வேண்டியுள்ள நிலையில், இந்த நாட்டு அரசாங்கமானது நாட்டை முன்னேற்றிச் செல்வதற்கான முயற்சிகளை அர்ப்பணிப்புடன் முன்னெடுத்து வருகிறது.

ரிக்கா இராஜதந்திர ரீதியாக அழுத்தத்தை வழங்க வேண்டும். அத்துடன் இவ்வாறான விவகாரங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கமானது நிலையான தீர்வை எட்டாதவிடத்து அமெ

கொண்டனர் என்பதை எவரும் மறந்து விடக்கூடாது. போர் முடிவடைந்ததன் பின்னரும் கூட, இலங்கை இராணுவத்தினர் பல்வேறு மனித உரிமை மீறல்கள், பாலியல் மீறல்கள் மற்றும் சித்

# இலங்கையில் மீண்டும் தவறிழைக்கும் அமெரிக்கா

மையத்தில் கடந்த திங்களன்று உரையாற்றியிருந்தார்.


இதன்போது இலங்கையில் அண்மைய வாரங்களில் ஏற்பட்டு வரும் அரசியல் மாற்றங்கள் தொடர்பாக நிசா பிஸ்வால் பாராட்டியுள்ளார். அமெரிக்காவின் பராக் ஒபாமா நிர்வாகத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரியான நிசா பிஸ்வாலின் இலங்கை மீதான புகழாரமானது அமெரிக்காவின் உயர் அரசியல் அதிகாரிகளின் இலங்கை மீதான அண்மைய பாராட்டுக்களுக்கான பிறிதொரு சான்றாக உள்ளது.

'இலங்கையில் இடம்பெற்றுள்ள கடந்த இரண்டு தேர்தல்களிலும் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதன் மூலமும் நாட்டை மீளிணக்கப் பாதை நோக்கி கொண்டு செல்வதன் மூலமும் இலங்கைக்கு தனது ஆதரவையும் உதவியையும் வழங்கவும் முன்வந்துள்ளது.

கடந்த ஆண்டு எமது நாட்டின் இராஜாங்கச் செயலரான கெரி மற்றும் அமெரிக்கத் தூதுவர் பவர் ஆகியோர் இலங்கைக்கான தமது பயணத்தை மேற்கொண்டிருந்தனர். 2015 இல் நான் நான்கு தடவைகள் இலங்கைக்கு பயணம் செய்திருந்தேன். இந்த ஆண்டு நாங்கள் இலங்கையுடனான முதலாவது கூட்டுப் பங்களிப்புக் கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளோம்' என நிசா பிஸ்வால் குறிப்பிட்டுள்ளார்.

**அமெரிக்காவால் முன்னெடுக்கப்பட்ட அண்மைய இராஜதந்திரச் செயற்பாடுகள், இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துதல், பொறுப்புக்கூறல் மற்றும் போருக்குப் பின்னான சமூகத்தின் மத்தியில் மீளிணக்கத்தை ஏற்படுத்துதல் போன்ற விடயங்களைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.**

**இவ்வாறு The Diplomat ஊடகத்தில், Taylor Dibbert எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிடுள்ளார்.**




இவர் மேலும் 'இலங்கையானது தனது நாட்டில் நீதியை நிலைநாட்டுதல், அரசியல் உரிமைகளைப் பலப்படுத்துதல், நிலையான அமைதியை உருவாக்கு

**தமிழ் மக்களுக்கு எதிராக போர் மீறல்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான மீறல்கள் போன்ற பல்வேறு மீறல்களை இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்டனர் என்பதை எவரும் மறந்து விடக்கூடாது. போர் முடிவடைந்ததன் பின்னரும் கூட, இலங்கை இராணுவத்தினர் பல்வேறு மனித உரிமை மீறல்கள், பாலியல் மீறல்கள் மற்றும் சித்திரவதைகள் போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.**

**தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போர் முடிவடைந்து ஏழு ஆண்டுகள் கடந்த நிலையிலும் இலங்கை இராணுவத்தினர் மிகவும் அதிகளவில் பிரசன்னமாகியுள்ளமை நாட்டில் மேலும் மோசமான சூழலை உருவாக்கியுள்ளது.**

**குறிப்பாக, கடந்த சில நாட்களாக அமெரிக்காவானது இலங்கை அரசாங்கம் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்தினர் ஆகிய இரண்டு தரப்பினருக்கும் தவறான செய்தியை அனுப்புகிறது. இலங்கைத் தீவு மீதான எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாகத் திட்டமிடும் போது, அமெரிக்கா இதே தவறை இரண்டு தடவைகள் செய்ய மாட்டாது என நம்புகிறோம்.**

குறிப்பாக இலங்கையின் புதிய அரசாங்கமானது ஏற்கனவே உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களிடம் அவர்களுக்குச் சொந்தமான 3400 ஏக்கர் நிலப்பரப்பை மீளவும் கையளித்துள்ளது. இதில் கடந்த வாரம் கையளிக்கப்பட்ட 177 ஏக்கர் நிலப்பரப்பும் உள்ளடங்குகிறது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான சில நிகழ்ச்சித் திட்டங்களை USAID ஆரம்பித்துள்ளதுடன் இலங்கையின் பல புதிய மற்றும் கவர்ச்சிகரமான முதலீட்டு வாய்ப்புக்களை அமெரிக்காவின் வர்த்தக நிறுவனங்கள் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றன' எனச் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் இன்னமும் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் உள்ளதாக பிஸ்வால் உறுதிபடத் தெரிவித்துள்ள அதேவேளையில், இலங்கை மீதான ஒபாமா நிர்வாகத்தின் தொடர்ச்சியான நம்பிக்கையானது தவறாகப் பயன்படுத்தப்படுவது போல் தென்படுகிறது.

இலங்கை அரசாங்கத்தின் பல புதிய மறுமலர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் முழுமையற்றதாகக் காணப்படுகிறது. நிலையான நீதி உட்பட மிகக் கடினமான விவகாரங்கள் தொடர்பாக இலங்கையின் கூட்டு அரசாங்கமானது மிகத் தீவிர நடவடிக்கையை முன்னெடுக்கும் வரை அமெரிக்காவானது இலங்கையுடன் ஆழமான பரஸ்பர உறவுகளைத் தொடரமாட்டாது எனவும் அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டும்.

கெட்டவாய்ப்பாக, கடந்த சில நாட்களாக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகமானது அதிருப்தி தரும் நகர்வுகளை மேற்கொண்டு வருவதை நாம் அவதானித்துள்ளோம். சில நாட்களின் முன்னர், இலங்கையின் தலைநகரான கொழும்பில் அமெரிக்கக் கடற்படையானது இலங்கை இராணுவத்துடன் இணைந்து பாரியதொரு அணிவகுப்பை மேற்கொண்டிருந்தது. இந்த நிகழ்வை அமெரிக்கத் தூதரகமானது சமூக ஊடகங்களில் அதிகம் பிரபலப்படுத்தியது. இதேபோன்று திங்களன்று இது போன்ற பிறிதொரு சம்பவமும் இடம்பெற்றது.

இலங்கை தொடர்பில் அமெரிக்காவால் முன்னெடுக்கப்பட்ட அண்மைய இராஜதந்திரச் செயற்பாடுகள், இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துதல், பொறுப்புக்கூறல் மற்றும் போருக்குப் பின்னான சமூகத்தின் மத்தியில் மீளிணக்கத்தை ஏற்படுத்துதல் போன்ற விடயங்களைக் கேள்விக் குறியாக்கியுள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிராக போர் மீறல்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான மீறல்கள் போன்ற பல்வேறு மீறல்களை இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்டனர் என்பதை எவரும் மறந்து விடக்கூடாது. போர் முடிவடைந்ததன் பின்னரும் கூட, இலங்கை இராணுவத்தினர் பல்வேறு மனித உரிமை மீறல்கள், பாலியல் மீறல்கள் மற்றும் சித்திரவதைகள் போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போர் முடிவடைந்து ஏழு ஆண்டுகள் கடந்த நிலையிலும் இலங்கை இராணுவத்தினர் மிகவும் அதிகளவில் பிரசன்னமாகியுள்ளமை நாட்டில் மேலும் மோசமான சூழலை உருவாக்கியுள்ளது.

குறிப்பாக, கடந்த சில நாட்களாக அமெரிக்காவானது இலங்கை அரசாங்கம் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்தினர் ஆகிய இரண்டு தரப்பினருக்கும் தவறான செய்தியை அனுப்புகிறது. இலங்கைத் தீவு மீதான எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாகத் திட்டமிடும் போது, அமெரிக்கா இதே தவறை இரண்டு தடவைகள் செய்ய மாட்டாது என நம்புகிறோம்.

இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் போன்றவற்றை மேம்படுத்தும் போது வோசிங்ரன் மேலும் உறுதியான நகர்வை முன்னெடுக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

மொழியாக்கம் : **நித்தியபாரதி**

# புரட்சித் தலைவர் எம்.ஜீ.ஆரின் எழுச்சியும் பிரபாகரனும்



இலங்கையில் ஜூலை மாதம் 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரம் இந்தியாவில் நிறைய அரசியல் தாக்கத்தை உருவாக்கியது என ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

பத்து ஆகஸ்ட் 1983 ஆம் ஆண்டு கலைஞர் மு.கருணாநிதியும், பொதுச் செயலாளர் பேராசிரியர் க. அன்பழகனும் தங்கள் தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்தார்கள்.

இச் செயல் மூலம் ஈழத் தமிழர்கள் பால் தாங்கள் கொண்ட பற்று மற்றும் பாசத்தை வெளிக்காட்டினார்கள். ஆனால் கலைஞர் கருணாநிதியின் இராஜினாமாக் கடிதத்தை அன்றைய சட்டப் பேரவையின் சபாநாயகர் ஏற்க மறுத்தார்.

அந்த இராஜினாமாக் கடிதத்தில் தவறுகள் இருப்பதாகவும், அதைத் தாங்கள் ஏற்க மறுப்பதாகவும் அறிவித்தார்கள்.

அதையடுத்து செப்ரெம்பர் 3 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் கருணாநிதி பேசும் போது,

"மத்திய அரசாங்கம் தமிழ் ஈழம் அமைப்பதற்கு சகல உதவிகளையும் தருவார்களாயின், தி.மு.க.வும், அ.இ.தி.மு.கவும் தமிழ் நாட்டுத் தேர்தலில் போட்டியிடத் தேவையில்லை" என்றார்.

இதற்குப் பதிலளித்த தமிழ் நாட்டு முதலமைச்சர் எம்.ஜீ. இராமச்சந்திரன் "ஏன் கருணாநிதி ஈழத் தமிழர்களுக்கு ஏதாவது பலன் உள்ள விடயத்தினைச் செய்ய முன்வரவில்லை" என ஒரு கேள்வியை எழுப்பினார். அந்தக் கேள்வி கருணாநிதியின் சினத்தைத் தூண்டிவிட்டது போலும்.

"ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி இராமேஸ்வரத்திலிருந்து வள்ளத்தில் பழ. நெடுமாறன் இலங்கை செல்ல முயற்சித்தபோது அவர் வள்ளத்தில் செல்வதை ஏன் தமிழ் நாடு அரசு தடுத்து நிறுத்தியது?" என்றவாறு பல கேள்விகளைச் சரமாரியாகக் கிளப்பினார்.

அதே நேரம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சென்னையில் காரியாலயம் அமைத்து பலவிதமான இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

பலர் பிரபாகரனைச் சென்னையில் அவரது காரியாலயத்தில் சென்று சந்திக்கத் தொடங்கினார்கள்.

அவ்வாறு சந்தித்தவர்களில் ஒருவர் மலைநாட்டைச் சேர்ந்த இந்தியத் தமிழர் ஆவர்.

அவரைச் சந்தித்தபோது, மலைநாட்டில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தைப் பற்றி என்ன நினைக்கின்றார்கள் என அறியப் பிரபாகரன் விரும்பினார்.

அந்த இந்திய வம்சாவளித் தமிழருடன் பேசும்போது, "மலைநாட்டுத் தமிழர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்க எம்மிடம் எவ்விதமான திட்டங்களும் இல்லை. ஆனால் அங்கு வாழும் தமிழ் மக்கள் பற்றி எமக்கு நிறைய அக்கறை உண்டு" எனப் பிரபாகரன் கூறினார்.

மேலும், "எப்போதாவது சுதந்திரத் தமிழ் ஈழம் மலர்ந்தால், இந்திய வம்சாவளித் தமிழர்கள் மலைநாட்டில் வாழ முடியாத நிலை ஏற்படும். அவ்வாறான நிலை ஏற்பட்டால் அவர்களைத் தமிழ் ஈழத்தில் வடக்கு, கிழக்கில் குடியமர்த்த நாங்கள் எப்பவும் தயார்" என்று குறிப்பிட்டார்.

அந்தக் காலத்தில் பிரபாகரன் அன்றைய முதலமைச்சரான புரட்சித் தலைவர் என அழைக்கப்பட்ட முன்னாள் திரைப்படக் கதாநாயகன் எம்.ஜீ.இராமச்சந்திரன் பால் ஈர்க்கப்பட்டார்.

புரட்சித் தலைவர் எம்.ஜீ. இராமச்சந்திரன் மக்களால் "எம்.ஜீ. ஆர்." என அன்பாக அழைக்கப் பட்டார்.

நிறையத் தமிழ்ப் படங்களில் கதாநாயகனாக நடித்து செல்வாக்குடைய நடிகராக ஒடுக்கப்பட்ட மக்களின் நலனில் அக்கறையுள்ள நபராகத் தன்னைத் திரைப்படங்களில் காட்டிக் கொண்டார்.

1984 ஆம் ஆண்டு அவர் பேச்சுமூச்சு இல்லாமல் அமெரிக்க வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டார்.

தமிழ் நாட்டில் அவரது ரசிகர்கள் ஏழு, எட்டுப் பேர் அவரின் நோயின் தாக்கத்தைத் தாங்க முடியாது தாங்களே தங்களுக்குத் தீ மூட்டித் தற்கொலை செய்து கொண்டார்கள்.

நீண்ட காலமாக எம்.ஜீ.ஆர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய உறுப்பினராகப் பதவி வகித்தார்.

1967 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் சி.என் அண்ணாத்துரை தலைமையில் ஆட்சியமைக்கப்பட்ட போது எம்.ஜீ. ஆரின் பங்களிப்பு நிறைய இருந்தது.

அறிஞர் அண்ணாத்துரையின் மறைவை அடுத்து, கலைஞர் கருணாநிதி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராகவும், தமிழ் நாட்டின் முதலமைச்சராகவும் பதவி ஏற்றுக் கொண்டார்.

அவ்வாறு கலைஞர் முதலமைச்சராக இருந்த காலத்தில் அவருக்கும், புரட்சித் தலைவர் எம்.ஜீ.ஆருக்குமிடையே கருத்து முரண்பாடுகள் சிறிது சிறிதாக ஏற்படத் தொடங்கியது.

ஒரு சந்தர்ப்பத்தில் கருணாநிதி புரட்சித் தலைவர் எம்.ஜீ.ஆர் மனைவியான வீ.என்.ஜானகியைக் கடத்தி சில காலம் வைத்திருந்தார் என்ற வதந்தி கூட நிலவியது.

அப்போது புரட்சித் தலைவர் எம்.ஜீ.இராமச்சந்திரன் "உலகம் சுற்றும் வாலிபன்" என்ற முழு நீள வர்ணப்படம் ஒன்றைத் தயாரித்தார்.

அந்தப் படம் தயாரிக்கும் போது அவருக்கு கணக்கில் வரும் வெள்ளைப்பணம் தேவைப் பட்டது.

தேவையான பணத்தைத் தந்துதவுமாறு அன்று முன்னணி நடிகையாகவிருந்த ஜெயலலிதாவிடம் கேட்டார்.

அப்போது தன்னுடைய தாயாரான சந்தியாவிடம் கேட்குமாறு ஜெயலலிதா கூறினார்.

ஜெயலலிதாவின் தாயாரான சந்தியாவிடம் சென்று கேட்டபோது, எம்.ஜீ.ஆர் சகோதரனான எம்.ஜீ. சக்கரபாணியை கேவலப்படுத்தி அனுப்பி வைத்தார்.

எம்.ஜீ.ஆரின் கோபத்திற்குப் பயந்து ஜெயலலிதாவும், அவரது தாயாரான சந்தியாவும் கருணாநிதியிடம் சென்று தஞ்சமடைந்தார்கள்.

அந்தக்காலத்தில், கருணாநிதியுடன் சில காலம் ஜெயலலிதா உறவு முறையில் வாழ்ந்ததாக அரசல் புரசலாகக் கதைகள் வெளிவரத் தொடங்கின.

கருணாநிதியுடன் ஜெயலலிதா சென்று சரணடைந்தது எம்.ஜீ. ஆரின் கோபத்தை உச்சத்துக்குக் கிளறிவிடக் காரணமாக அமைந்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் தனாதிகாரியாக இருந்த எம்.ஜீ.ஆர் கருணாநிதியிடம் கணக்குக் கேட்டார்.

அவர்கள் இருவருக்குமிடையில் பிரச்சினை பூதாகாரமாக உருவாகத் தொடங்கியது.

எம்.ஜீ.ஆர்., தி.மு.கழகத்தை விட்டுவிட்டு அகில இந்திய திராவிட முன்னேற்றக் கழகம் என்ற புதிய கட்சியை 1972 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி ஆரம்பித்தார்.

1973 ஆம் ஆண்டு எம்.ஜீ. ஆரின் புதிய கட்சி இந்திய லோக் சபை திண்டுக்கல் உப தேர்தல் தொகுதியிலும், அதன் பின்னர் கோயம்புத்தூர் தொகுதியில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டசபைக்கான உப தேர்தலிலும் வெற்றி பெற்றது.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ் நாடு சட்டசபைத் தேர்தலில் எம்.ஜீ.ஆரின் அகில இந்திய திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட்டு வெற்றி பெற்றது.

அந்த வெற்றியை அடுத்து 30 ஆம் திகதி ஜூன் மாதம் 1977 ஆம் ஆண்டு எம்.ஜீ.ஆர் முதலமைச்சராகத் தெரிவு செய்யப் பட்டார்.

டிசம்பர் மாதம் 1987 ஆம் ஆண்டு அவர் காலமாகும் வரை அவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தார்.

அரசகேசரி

1977, 1980, 1984 ஆம் ஆண்டுகள் மூன்று சட்டசபைத் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

அந்தக் காலத்தில் பிரபாகரன் தலைமையில் இயங்கிய தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் முதலமைச்சர் எம்.ஜீ.ஆருடன் படிப்படியாக உறவுகளை மேற்கொள்ள முயற்சித்தார்கள்.

இந்த உறவினை உருவாக்குவதில் தீவிர அக்கறை காட்டி வந்தவர்களில் முக்கிய உறுப்பினராக இருந்தவர் பேபி சுப்ரமணியம்.

(தொடரும்...)

# லங்கா ராணி

அருளர்

இங்குள்ள இரு இனங்களும் சரித்திர ரீதியாகவும் சமுதாய பண்பாட்டு ரீதியாகவும் வெவ்வேறான பாதைகளிலேயே வந்திருக்கின்றன. சமதர்ம சமுதாயத்தைக் கட்டி நிறுவும்போது அந்த மகத்தான மக்களின் ஒற்றுமைப் பாட்டையும் ஒப்பந்தத்தையும் நிலைநிறுத்தும் போது இந்த பழம்பட்ட வெற்றுத் தனம் நிறைந்த அரசியல் குப்பைத் தனத்தை ஒழித்துக் கட்டி விட்டுச் சிறப்பான அந்த புதிய அரசியல் பாரம்பரியத்தை ஏற்படுத்திக் கொண்டு முன்னேறிச் செல்லும் போது, ஏற்படும் பிரச்சினைகளும் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு முன்வைக்கப்படும் முறைப்பாடுகளும் எங்களுடையதும் சிங்கள மக்களுடையதும் அதற்கேற்ற வாறு வேறுபட்டே இருக்கும். இதை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அந்தப் பாதையில் எங்களுடைய முன்னேற்றம் மற்றவர்களை விட பலவழிகளிலும் சிறப்புற்று விளங்குவதற்கான சாத்தியக்கூறுகளைக் கூட என்னால் காணமுடிகிறது.

தங்களை முற்போக்குவாதிகள் எனக் கூறிக்கொள்ளும் சிலர் சுய நிர்ணய உரிமையைப்பற்றிப் பேசி

யளவில் நன்மை பயக்கும் முறையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முன்வந்தால் நாங்கள் அதை நிராகரிக்க வேண்டிய தில்லை.

அடுத்ததாக ஒரு நாட்டைப் பிரிக்கக்கூடாது என்று கூறுகிறார்கள். அது ஒரு நல்ல கருத்துத் தான். ஆனால் நாட்டின் ஒருமைப்பாடு ஆதிக்க வெறிச்சக்திகளின் நிலைக்களனாகவும் சுரண்டல் வாதிகளின் தார்மீகமாகவும் மாறி அந்த நாட்டு மக்களின் வறுமைக்கும் இயலாமைக்கும் காரணமாகி விட்ட பொழுது அந்த வேண்டாத ஒருமைப்பாட்டை முடிவுக்கு கொண்டுவர வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. நாட்டுப்பற்றை என்னவென்று எங்களுக்கு உபதேசம் செய்ய முற்படுகிறார்கள். இது பற்றி யாரும் தமிழர்களுக்கு உபதேசம் பண்ண வேண்டியதில்லை."

"வெளிநாடுகள் யாரும் உதவி செய்ய முன்வருவதாகத் தெரிய வில்லையே" என்றான் வெள்ளைச் சாமி.

"அது அப்படித்தான் இருக்கும் வெள்ளைச்சாமி. அதைவிட்டு நீ கவலை கொள்ளக்கூடாது. அவர்கள் யாருடைய நன்மைக்

தொடர முற்படுகிறார்கள். இவர்கள் எவ்வாறு புரட்சியை ஏட்டுச் சுரைக்காயாக்கி விற்றுத் திரிந்து தீய சக்திகளை வளர்த்துவிட்டார் களோ அதே போல் சுயநிர்ணய உரிமையையும் விற்கத் திரிகிறார்கள். இவர்களால் உருப்படியாக ஏதும் முடியுமானால் முதலில் அங்கேயே செய்யட்டும்.

எங்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்று ஏற்றுக் கொள்ளும் போது நாங்கள் யாருடன் ஒத்து வாழ வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் நாங்களே என்பதையும் ஏற்றுக் கொள்கிறார்கள். அதற்கு மேல் எதையாவது கூற முற்படுவார்களானால் அது வெறும் ஆலோசனையாக இருக்குமே தவிர அதற்கு மேற்பட்ட எதுவுமாக அது இருக்க முடியாது.

எனினும் எங்கள் தனித்துவத்தை ஏற்றுக் கொண்டு இரு இனங்களின் விடுதலைக்காகவும் ஒன்றிணைந்த போராட்டப் பாதையை வகுத்துக் கொள்ள முன்வருபவர்களை நாங்கள் நிராகரிப்பது புத்திசாலித்தனமுமல்ல. நாகரீகமான அரசியலுமல்ல. எத்தனை நாடுகள் வேண்டுமானாலும் இங்கிருக்கலாம். ஆனால் எல்லா வற்றிற்கும் மேலாக இங்கிருப்பது




அவர்கள் யாருடைய நன்மைக்காகவும் நாங்கள் இதில் இறங்கவில்லையே. உலக நாடுகள் எல்லாமே இங்குள்ள இந்தப் போலித்தனத்துடன் கூட்டு வைத்திருக்கின்றன.

பல ஒப்பந்தங்கள், கடன்கள், வியாபாரம், வேறுசிலர் தங்கள் நீண்ட கால நலன்களுக்காக பல திட்டங்களையும் தீட்டி அவற்றை நிறைவேற்றுவதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்நிலையில் இங்கு இரு நாடுகள் உருவாவது பல்வேறு பிரச்சினைகளை தோற்றுவிப்பது எதிர்பார்க்கக் கூடியதே. இது மாத்திரமில்லை. பல நாடுகளில் இதே போல் விடுதலை கோரும் இனங்கள் அவற்றின் மீது அடக்கு முறை கட்டவிழ்த்து

இந்த போலி ஒற்றுமையை மேலும் தொடர முற்படுகிறார்கள். இவர்கள் எவ்வாறு புரட்சியை ஏட்டுச் சுரைக்காயாக்கி விற்றுத் திரிந்து தீய சக்திகளை வளர்த்து விட்டார்களோ அதே போல் சுய நிர்ணய உரிமையையும் விற்கத் திரிகிறார்கள். இவர்களால் உருப்படியாக ஏதும் முடியுமானால் முதலில் அங்கேயே செய்யட்டும்.

எங்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு என்று ஏற்றுக்கொள்ளும் போது நாங்கள் யாருடன் ஒத்து வாழ வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் நாங்களே என்பதையும் ஏற்றுக் கொள் கிறார்கள். அதற்கு மேல் எதையாவது கூற முற்படுவார்களானால் அது வெறும் ஆலோசனையாக இருக்குமே தவிர அதற்கு மேற்பட்ட எதுவுமாக அது இருக்க முடியாது.

எனினும் எங்கள் தனித்துவத்தை ஏற்றுக் கொண்டு இரு இனங்களின் விடுதலைக்காகவும் ஒன்றிணைந்த போராட்டப் பாதையை வகுத்துக் கொள்ள முன்வருபவர்களை நாங்கள் நிராகரிப்பது புத்திசாலித்தனமுமல்ல நாகரிகமான அரசியலுமல்ல. எத்தனை நாடுகள் வேண்டுமானாலும் இங்கிருக்கலாம். ஆனால் எல்லா வற்றிற்கும் மேலாக இங்கிருப்பது மனித குலம் ஒன்றே என்பதை நாங்கள் மறந்து போகக் கூடாது.

ஏகாதிபத்திய நாடுகளும் கூட எங்கள் தனித்துவத்தை ஏற்றுக் கொண்டு இருசாராருக்கும் ஒரே

காகவும் நாங்கள் இதில் இறங்க வில்லையே. உலக நாடுகள் எல்லாமே இங்குள்ள இந்தப் போலித் தனத்துடன் கூட்டு வைத்திருக் கின்றன.

இங்குள்ள இரு இனங்களும் சரித்திர ரீதியாகவும் சமுதாய பண்பாட்டு ரீதியாகவும் வெவ்வேறான பாதைகளிலேயே வந்திருக்கின்றன. சமதர்ம சமுதாயத்தைக் கட்டி நிறுவும்போது அந்த மகத்தான மக்களின் ஒற்றுமைப்பாட்டையும் ஒப்பந்தத்தையும் நிலைநிறுத்தும்போது இந்த பழம்பட்ட வெற்றுத்தனம் நிறைந்த அரசியல் குப்பைத் தனத்தை ஒழித்துக் கட்டிவிட்டுச் சிறப்பான அந்த புதிய அரசியல் பாரம்பரியத்தை ஏற்படுத்திக் கொண்டு முன்னேறிச் செல்லும் போது, ஏற்படும் பிரச்சனைகளும் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு முன் வைக்கப்படும் முறைப்பாடுகளும் எங்களுடையதும் சிங்கள மக்களுடையதும் அதற்கேற்றவாறு வேறுபட்டே இருக்கும். இதை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அந்தப் பாதையில் எங்களுடைய முன்னேற்றம் மற்றவர்களை விட பலவழிகளிலும் சிறப்புற்று விளங்குவதற்கான சாத்தியக் கூறுகளைக் கூட என்னால் காண முடிகிறது.

தங்களை முற்போக்குவாதிகள் எனக் கூறிக்கொள்ளும் சிலர் சுய நிர்ணய உரிமையைப்பற்றிப் பேசி இந்த போலி ஒற்றுமையை மேலும்

மனித குலம் ஒன்றே என்பதை நாங்கள் மறந்து போகக் கூடாது.

ஏகாதிபத்திய நாடுகளும் கூட எங்கள் தனித்துவத்தை ஏற்றுக் கொண்டு இருசாராருக்கும் ஒரே யளவில் நன்மை பயக்கும் முறையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முன்வந்தால் நாங்கள் அதை நிராகரிக்க வேண்டிய தில்லை.

அடுத்ததாக ஒரு நாட்டைப் பிரிக்கக்கூடாது என்று கூறுகிறார்கள். அது ஒரு நல்ல கருத்துத் தான். ஆனால் நாட்டின் ஒருமைப்பாடு ஆதிக்க வெறிச்சக்திகளின் நிலைக்களனாகவும் சுரண்டல்வாதிகளின் தார்மீகமாகவும் மாறி அந்நாட்டு மக்களின் வறுமைக்கும் இயலாமைக்கும் காரணமாகிவிட்ட பொழுது அந்த வேண்டாத ஒருமைப்பாட்டை முடிவுக்கு கொண்டுவர வேண்டியது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. நாட்டுப்பற்றை என்னவென்று எங்களுக்கு உபதேசம் செய்ய முற்படுகிறார்கள். இது பற்றி யாரும் தமிழர்களுக்கு உபதேசம் பண்ண வேண்டியதில்லை."

"வெளிநாடுகள் யாரும் உதவி செய்ய முன்வருவதாகத் தெரிய வில்லையே" என்றான் வெள்ளைச் சாமி.

"அது அப்படித்தான் இருக்கும் வெள்ளைச்சாமி. அதைவிட்டு நீ கவலை கொள்ளக்கூடாது.

விடப்பட்ட நிலையிலும் தங்கள் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் நீ எதையும் பிரமாதமாக எதிர்பார்க்க முடியாது. நீதியையும் தர்மத்தையும் வில்லங்கமாகப் பல இடங்களில் விழுங்க வைக்கவேண்டியிருக்கிறது. இதற்காக நீ கவலை கொள்ளவும் கூடாது. யாரோ இப்படிக் கனவு கண்டு விட்டார் என்பதற்காகவோ ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் நலன்களுக்காக ஏற்படுத்தி விட்டுச் சென்று விட்டார்கள் என்பதற்காகவோ நாங்கள் இந்தப் போலித்தனத்தில் மூழ்கிக் காலத்தை விரயமாக்க முடியாது.

எங்களுடைய மக்களின் சுபிட்சமான வாழ்வே இங்கு பிரதானம். அதற்கான பொருளாதார, சமுதாய, பூகோள, பண்பாட்டு வரையறைகளே நாட்டின் எல்லையாகவும் இருக்க வேண்டும். இங்குள்ள சூழ்நிலைகளில் எங்கள் இனத்தின் வரையறைகளோடு அவை நின்று விடுகின்றன. அதற்கு அப்பால் ஆதிக்க சக்திகளோடும் அடக்குமுறை ஆக்கிரமிப்பு அபகரிப்புச் சக்திகளோடும் கூட்டுச் சேர்ந்து அவற்றிலிருந்து எங்களைப் பாதுகாப்பதிலேயே காலத்தைச் செலவிட வேண்டியிருக்கிறது.

பல இனங்கள் ஒன்றாகச் சேர்ந்து வாழும் நாடுகள் இருக்கலாம். அவ்வாறான நிலை இருக்க முடியாது என்று நான் கூறவில்லை. இங்குள்ள சூழ்நிலைகளில் இது ஒன்று தான் ஒரே வழியாக இருக்கிறது.


சிங்கள மக்களோடு சிநேகபூர்வமான உறவுகளை ஏற்படுத்துவதற்கும் அவர்கள் தங்களை ஆட்கொண்டிருக்கும் தீயசக்திகளை எதிர்த்துப் போராடுவதற்கும் இவ்வாறான ஏற்பாடு கட்டாயமாக இங்கு தேவைப்படுகிறது வெள்ளைச்சாமி.

அங்கு என்ன பொருளாதாரம் உண்டு என்று சிலர் கேட்க முற்படுகிறார்கள். இவர்கள் என்னத்தைத்தான் கூறுகிறார்கள் என்று என்னால் விளங்க முடியவில்லை. ஈழம் சற்று வறட்சியுடையதாகத் தென்படலாம். எனினும் பாலை வனத்திலும் வான் வெளியிலும் சமுத்திரத்தின் அடியிலும் மனிதன் நகரங்களை நிர்மாணித்து நாகரிகம் சமைக்கப் புறப்பட்டுள்ள இந் நாட்களில் இவர்கள் கூற்று விந்தையானதாகவும் வேடிக்கையாகவும் அமைந்துள்ளது. இயற்கையே பொருளாதாரம் என்ற காலம் ஒன்று இருந்தது தான். அது கற்காலத்திற்கு முன்னைய காலம். இந்த நாட்களில் பொருளாதாரம் முழுவதும் பெரும்பாலும் மனிதனுடைய ஆற்றல் பற்றியதாகவே இருக்கிறது. எல்லா விதமான இயற்கையையும் வெல்ல மனிதன் அனுபவம் பெற்றுவிட்டான். இவர்களுடைய கதைகளை இவர்கள் இருந்துகொண்டு கூறும் அதே சாய்வு நாற்காலிகளைப் பார்த்துக் கூறிவிட்டு இருந்து விட்டார்களானால் அது மிகவும் நலமானதாக இருக்கும்.

சிலர் தாங்கள் அங்கு ஏற்படுத்திக் கொண்டுள்ள சுரண்டல் தார்ப்பரியங்களையும் சுகபோகங்களையும் தொடரும் நோக்கோடு எங்கள் சுதந்திரத்தை அடகு வைக்கலாம் என்று நினைக்கிறார்கள். இதற்கு நாங்கள் ஏமாளிகளல்ல. இவர்களுக்காக நாங்கள் ஒரு துளி கண்ணீர் கூடச் சிந்தப் போவதில்லை.

(தொடர்ச்சி 19 இல்......)

# சாவகச்சேரி தற்கொலை அங்கியும் வெடிபொருட்கள் மீட்பும்



சிவில் யுத்தம் முடிவடைந்து, ஏழு வருடங்களாகின்ற போதும், யுத்தம் நடைபெற்ற வடக்கு கிழக்கு பகுதிகளில் வெடிபொருட்கள் மீட்கும் பணிகள் இன்னமும் முழுமையாக நிறைவு பெறவில்லை. அத்துடன், விடுதலைப்புலிகளால் கைவிடப்பட்ட அல்லது, புதைத்து - மறைத்து வைக்கப்பட்ட வெடி பொருட்கள், ஆயுதங்கள் என்பன அவ்வப்போது கண்டறியப்பட்டு மீட்கப்படும் நடவடிக்கைகளும் நடைபெற்று வருகின்றன.

யுத்த காலத்தில் அரசாங்கப் படையினர் நிலைகொண்டிருந்த பகுதிகளில் அவர்களால் கைவிடப்பட்ட வெடிபொருட்களும் இவ்வாறு கண்டறிப்பட்டு மீட்கப்படுகின்றன. இது ஒரு சாதாரணமான விடயமேயாகும்.

இந்நிலையில், கடந்த 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி மறவன் புலவில் கண்டறியப்பட்டு மீட்கப்பட்ட சில வெடிபொருட்களுடன் தற்கொலைத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் அங்கிகளும் இருந்தமை இன்று பரபரப்பான செய்தியாகியுள்ளது. அக்காலங்களில் புலிகளால் மறைத்து வைக்கப்பட்ட ஏனைய ஆயுதங்கள், வெடி பொருட்கள் போலவே இவையும் இருக்கலாம்.

மீட்கப்பட்ட தற்கொலை அங்கி, 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதிக்குரிய சிங்களப் பத்திரிகையின் தாளொன்றிலேயே சுற்றப்பட்டிருந்தது எனவும், இந்தத் தற்கொலை அங்கியும் வெடி பொருட்களும், அவ்வளவு பழையன இல்லை என்றும் வடக்கு பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பொருட்களை வைத்திருந்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் அடுத்த நாளான 30 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். கிளிநொச்சி - அக்கராயன் குளத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கைது செய்யப்பட்டவர் ரமேஷ் என்றழைக்கப்படும் 32 வயதான எட்வட் ஜூலின் என்றும், அவர் தமிழீழ விடுதலைப் புலி இயக்கத்தில், 13 வயதில் இணைந்து கொண்டவர் என்றும் ஆரம்பக் கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இவரிடம் சரியான முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

முன்னரும் இவ்வாறு வெடிபொருட்களை தங்களுடன் வைத்திருந்தவர்கள் பிடிபட்டுள்ளனர். எங்காவது மறைத்து வைக்கப்பட்ட நிலையில் காணப்படும் வெடி பொருட்களை சிலர் எடுத்து சட்டவிரோதமாக மீன்பிடிப்பவர்களுக்கு விற்பனை செய்து வருகின்றமையும் அண்மைக் காலங்களாக நடைபெற்று வருகின்றன. இந்த வெடிபொருட்களை பயன்படுத்தி மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றவர்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு அந்த வெடிபொருட்கள் தேவைப்படுகின்றன. எனவே, முழுமையாக விசாரணைகளை மேற்கொண்டு உண்மையை கண்டறிய வேண்டியது பாதுகாப்புத் தரப்பினது கடமையாகும்.

விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே தென்னிலங்கையில் இச்சம்பவம் அரசியலாக்கப்பட்டு வருகின்றது.

மீண்டும் பயங்கரவாத தாக்குதல்களை நடத்துவதற்காகவே இவை வைத்திருக்கப்பட்டதெனவும், நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதெனவும் அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் - இனவாதம் பேசுகின்றவர்கள் கூச்சலிடுகின்றனர். முன்னாள் அமைச்சரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இதனை ஆரம்பித்து வைத்திருக்கின்றார்.

சாவகச்சேரி பகுதியில் ஜக்கட் இரண்டு, சீ நான்கு வெடிபொருள் பொதிகள் மூன்று மற்றும் சிம் காட் ஐந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள ஜீ.எல்.பீரிஸ் இந்த வெடிபொருட்கள் வெள்ளவத்தைக்கு கொண்டுவர தயாராக வைக்கப்பட்டிருந்ததாகவும் கண்டு பிடித்திருக்கின்றார். அரசாங்கம் இது பற்றிய உண்மைகளை மூடி மறைக்கின்றது எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

விமல் வீரவன்ச, சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் போன்றோர் 'மற்றுமொரு யுத்தத்திற்கான முதற்கட்ட நடவடிக்கை தயாராகிறது' என்பதாக கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். தென்னிலங்கை ஊடகங்களும் இது பற்றி பரபரப்பாக செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

இந்த விடயம் பயங்கரவாத தடுப்பு புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்ற நிலையில், எதிரணியினரின் பரப்புரைகளுக்கு அரசாங்கம் பதிலளித்தும் வருகின்றது.

குறித்த வெடிபொருட்கள் வெள்ளவத்தையிலுள்ள வீடொன்றிற்கு கொண்டு வர இருந்ததாக பீரிஸ் குறிப்பிட்டுள்ளதாகவும், அது பற்றி அவர் அறிந்திருப்பின் பொலிஸாரிடம் ஏன் சொல்லவில்லை எனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார். யுத்த காலத்தில் வன்னியில் கைப்பற்றப்பட்ட தங்கத்திற்கு என்ன ஆனது என்பது குறித்தும் ஜீ.எல்.பீரிஸ் பேச வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், யுத்தமொன்று இடம்பெற்ற நாடொன்றில் ஆயுதங்களும் வெடிபொருட்களும் கண்டுபிடிக்கப்படுவதென்பது அதிசயிக்கத்தக்க விடயமல்ல எனவும் ரணில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்தினால், நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு எவ்வித அச்சுறுத்தல்களும் இல்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இந்த வெடி பொருட்கள் கைப்பற்றப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் மிதவாத குழுக்களின் செயற்பாடுகள் இருக்கலாம் என, வடமாகாண ஆளுனர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என வெளியாகும் தகவல்களில் எந்தவொரு உண்மையும் இல்லை எனவும், ஊடகங்கள் மூலம் இந்த சம்பவம் திரிவுபடுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் போது, போர் முடிவடைந்த பின்னரும் அச்சுறுத்தல்களும் கெடுபிடிகளும் தொடர்ந்த வண்ணமே இருந்தன. அவர்கள் நினைத்தால் எதனையும் செய்ய முடியும் என்ற நிலைமையே காணப்பட்டது. விடுதலைப்புலிகளை மீளுருவாக்க வடக்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறி பலர் கைது செய்யப்பட்டமையும், சிலர் சுட்டுக்கொல்லப்பட்டமையும் தெரிந்ததே.

**விஸ்வா**

இன்று மீண்டும் ஆட்சியைப் பிடிக்க அவர்கள் எதனையும் செய்யத் தயாராக இருக்கின்றார்கள். அதற்காக அவர்கள் கைவசம் வைத்திருக்கும் ஆயுதங்களில் வலிமையானதாக கருதப்படுவது இனவாதமே. 'மீண்டும் புலிகள்' என்கிற பரப்புரை சிங்கள மக்கள் மத்தியில் நன்கு எடுபடும் என எண்ணி அவர்கள் செயற்படுகின்றனர்.

கடந்த அரசாங்கத்தின் காலப்பகுதியில் இருந்ததை விடவும், அச்சுறுத்தல்கள் குறைந்து, நாட்டில் ஓரளவிற்கு ஜனநாயகம் நிலவ ஆரம்பித்திருக்கின்றமையினை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த நிலைமையை மேலும் மேம்படுத்த நாட்டின் அனைத்து தரப்பினரும், பொது மக்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

தமிழ் பிரதேசங்களில் தமிழர்களைக் கொண்டே குழப்பங்களை ஏற்படுத்த சில சக்திகள் முயற்சிக்கலாம். அது குறித்து தமிழ் மக்களும் விழிப்புடனிருக்க வேண்டும்.

சாவகச்சேரியில் தற்கொலை அங்கி- வெடிபொருட்கள் கண்டறியப்பட்ட விவகாரம் தொடர்பில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, கைதான நபர் எந்தவொரு சக்தியினதும் கையாளாக செயற்பட்டார் என்பது நிரூபிக்கப்பட்டால் அதற்காக கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டும்.

அவ்வாறானவர்கள் தமிழர்களாக இருந்தாலும், தங்கள் இனத்திற்கும், பாதிப்பிற்குள்ளாகி மீளெழ முயலும் தமிழ் மக்களுக்கும் துரோகம் இழைப்பவர்களே!

**தினச்செய்தி தொடர்பான விமர்சனங்கள், ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**

தொடர்புகளுக்கு :
தில்லைகட்டி லேன்,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
தொலைபேசி : 021 7539300
தொலைநகல் : 021 7539300
இணையம் : thinacheithi@gmail.com

# உண்மை வெளிவருகிறது

தமது பயணத்தைக் குறுக்கிக் கொண்டு, கூடிய விரைவில் தளத்திற்குத் திரும்பிவருமாறு ரோந்து சென்ற இராணுவ அணியினர் வானொலிச் செய்தி மூலம் திடீரென கேட்டுக் கொள்ளப்பட்டனர். "Four Four Brave" குழூஉக் குறியைக் கொண்டிருந்த இராணுவ அதிகாரி மற்றும் 14 சிப்பாய்கள் சென்ற ஒரு ஜீப் மற்றும் இராணுவ டிரக் தொடரணியும் அந்த நேரம் ரோந்தில் ஈடுபட்டிருந்தன.

வாகனத் தொடரணி திரும்பிக் கொண்டிருந்த வேளை, யாழ்ப்பாணச் சந்தை, நாக விகாரை, நல்லூர், கோப்பாய் அதன் பின்னர் உரும்பிராய் ஆகிய இடங்களுக்குச் சென்றது.

உரும்பிராயில் இருந்து, குருநகர் முகாமுடன் தொடர்பு கொண்டு, "சகலதும் சகஜமாக இருக்கின்றன" என்று தகவல் அளித்துவிட்டு, கோண்டாவில் மற்றும் கொக்குவில் பகுதியூடாகக் கல்வியங்காடுப் பகுதிக்கு பயணத்தைத் தொடர்ந்தனர்.

திருநெல்வேலிச் சந்தியில், ஜீப் மூடிமறைக்கப்பட்டிருந்த தொலைபேசிக் குழியின் மீது சென்றதால், வெடித்துச் சிதறியது.

ஜீப்பில் இருந்த ஆறு சிப்பாய்களும் சிதறுண்டார்கள். ஜீப்பைத் தொடர்ந்து, டிரக் வாகனம் நிறுத்தப்பட்டது.

அதில் இருந்த சிப்பாய்கள் குதித்து வெளியேறினார்கள். பதுங்கியிருந்த விடுதலைப் புலியினர் சிறிய ரக இயந்திரத் துப்பாக்கிகள், G-3 மற்றும் சுழல் துப்பாக்கிகள் மூலம் அவர்கள் மீது சரமாரியாக வேட்டுகளைத் தீர்த்தனர்.

பதுங்கியிருந்து நடத்தப்பட்ட தாக்குதல் சொற்ப நேரமே நீடித்து.

ஆனால் மொத்தம் 13 இராணுவ வீரர்கள் இறந்தார்கள். இருவர் காயமுற்றார்கள்.


அத்துடன் இத்தாக்குதல் சம்பவத்தில் மர்மமான ரவை மூலம் நெஞ்சில் காயமுற்று செல்லக்கிளியும் கொல்லப்பட்டான்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளைப் (LTTE) பொறுத்தவரையில், மிக வெற்றிகரமான பதுங்கியிருந்து நடத்தப்பட்ட தாக்குதலில், செல்லக்கிளியின் மரணம் தொடர்பாகத் தெளிவான விவரம் வெளிவரவில்லை.

பதுங்கியிருந்து நடத்தப்பட்ட தாக்குதலுக்குத் திட்டமிட்ட முக்கிய விடுதலைப்புலி உறுப்பினரான செல்லக்கிளி கொல்லப்பட்டு விட்டார் என்று காணப்பட்டபோது விடுதலைப் புலியினரின் மகிழ்ச்சி ஆரவாரம் திடீரென நின்றது.

வன்னிப் பிரதேச முன்னாள் (TULF) தமிழ் தேசிய அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான ஜனாதிபதியின் ஒருங்கிணைப்பாளருமான எஸ். கனகரத்தினத்தின் ஒருதாய் வயிற்றுப் பிள்ளையுமான செல்லக்கிளியைச் சுட்டுக் கொன்றது பிரபாகரனே எனப் பின்னர் தகவல்கள் வெளிவந்தன.

அதேவேளை, துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காலில் இரத்தம் வழிந்தொழுக யாருடைய கண்ணிலும் படாமல் கோண்டாவில் பஸ் டிப்போவுக்குப் படைத்துறை சிற்றுலுவலர் ஜே.ஆர். ஏ.யூ. பெரேரா நழுவிச் சென்று,




சம்பவம் பற்றிக் குருநகர் இராணுவ முகாமுக்குத் தொலைபேசி மூலம் அறிவித்தார்.

உடனடியாகவே வடமாகாண இராணுவத் தளபதி படைப்பகுதித் தலைவர் பால்தாஹெர் தேடுதல் இராணுவக்குழு ஒன்றை அனுப்பி வைத்தார்.

13 சிப்பாய்களின் மரணத்தை அந்தக்குழு பின்னர் அறிக்கையிட்டது.

தமிழ் ஆயுதக்குழுக்களின் கரங்களால் ஒரே தடவையில் இலங்கை இராணுவத்திற்கு பாரிய இழப்பை ஏற்படுத்திய 13 சிப்பாய்களைக் கொன்று குவித்த படுகொலைக் களரி இலங்கை இராணுவத்தினதும், அரசாங்கத்தினதும் எதிர்ப்பை வெளிக் கொண்டு வந்தது.

கொல்லப்பட்ட 13 சிப்பாய்கள் அனைவரும் சிங்களவர்கள். பெரும்பாலானவர்கள் 20 வயதுக்கு குறைந்தவர்கள். ஒருவர் இளவயதுப் பருவத்தவர்.

கொல்லப்பட்ட செய்தி 24 ஆம் திகதி ஜூலை மாதம் மாலை கொழும்புக்கு எட்டியது.

கொல்லப்பட்டவர்களுக்கு முழு அளவு இராணுவ மரியாதையுடன் ஒரு இராணுவ இறுதிச் சடங்கை நடாத்த வேண்டும் என இராணுவம் விரும்பியது.

கொழும்பிலுள்ள கனத்தை மயானத்தில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் உட்படப் பெரும் கூட்டமொன்று திரண்டது.

சிறிது நேரத்தில், சனக்கூட்டம் கட்டுப்பாட்டை மீறி மூர்க்கமான வன்முறையில் இறங்கியது.

என்ன நடந்தது என்றால், 25 ஆம் திகதி ஜூலை மாதம் காலை, மிகத் தெளிவாக இருந்தது என்னவென்றால் கனத்தையில் எதுவித மரணச்சடங்கும் இடம்பெறப் போவதில்லை என்பதாகும்.

ஆயினும் ஆங்கிலத் தினசரியான (SUN) "சண்" மற்றும் அதன் சிங்களப் பத்திரிகையான "தவஸ" ஆகிவற்றின் பொய்யான செய்தி அறிக்கை காரணமாக ஆயிரக் கணக்கானவர்கள் கனத்தையில் திரண்டார்கள்.

கூட்டம் திடீரென வன்முறையில் இறங்கியது. இதன் விளைவால் 49 மரணங்களும், 209 தீவைப்புச் சம்பவங்களும் இடம்பெற்றன.

அத்துடன் அதேதினம் வெலிக்கடையிலுள்ள அதிகூடிய பாதுகாப்புச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த தமிழர்கள் தாக்கப்பட்டார்கள்.

அவர்களில் தங்கத்துரை, ஜெகன் மற்றும் குட்டிமணி ஆகியோர் உட்பட 35 பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

27 ஆம் திகதி ஜூலை மாதம், இரண்டாவது சிறைச்சாலைக் கலவரத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளில் சந்தேகிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த தமிழர்கள் தாக்கப்பட்டார்கள்.

வைத்திய கலாநிதி இராஜசுந்தரத்துடன் மேலும் 18 பேர் அடித்துக் கொல்லப்பட்டார்கள்.

கெடுபிடிநிலை நிலவிய நாளாக இருந்த அதேவேளை, அந்த நாட்களின் போது 1983 ஆம் ஆண்டு பிற்பகுதியில், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் தமது உயர்கல்விக்கு தேவைப்படும் வசதிகளை வழங்குவதில் அரசாங்கத்தின் செயல் இன்மைக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினார்கள்.

எதிர்ப்புப் போராட்டத்தை நடத்திய பல்கலைக்கழக மாணவர்களுடன், மாணவிகளும் கூட இணைந்து கொண்டார்கள்.

அவர்களில் நால்வர் மிக முக்கியமானவர்களாகவும், குறிப்பிடத்தக்கவர்களாவும் மாறினார்கள்.

பிரபாகரனின் உத்தரவின் பேரில் அந்த நான்கு மாணவிகளும் விடுதலைப்புலி LTTE ஆயுதப் போராளிகளினால் கடத்திச் செல்லப்பட்டார்கள்.

மதி, வினோஜா, ஜெயா மற்றும் லலிதா ஆகியோரே அவர்கள். அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டார்கள்.

சென்னையில், மதி – மதிவதனியைப் பார்த்ததும் விடுதலைப் புலிகளின் LTTE தலைவர் அவள்பால் காதல் வயப்பட்டு, அவள் மீது நிர்ப்பந்தத்தைத் திணித்தார். தப்பாக நடந்து கொண்டார். அவள் கர்ப்பிணியானாள்.

அதையடுத்து, அவருடைய தப்பான நடத்தையை மூடி மறைக்க, சென்னையிலுள்ள திருப்போரூர் முருகன் கோயிலில் 1 ஆம் திகதி அக்டோபர் மாதம் 1984 ஆம் ஆண்டு அவசர அவசரமாக ஒரு திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ்வாறு மதிவதனியுடனான முறைகேடான கட்டாய உறவு ஒழுங்கமைக்கப்பட்டது.

ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு சார்ள்ஸ் அன்ரனி எனப் பெயரிடப்பட்டது.

அதைத் தொடர்ந்து ஒரு மகள் துவாரஹா பிறந்தார்.


யாழ்ப்பாண இராணுவ நடவடிக்கை ஒன்றில் மரணமான வரும் மெய்ப்பாதுகாப்பாளருமான துவாரஹாவின் பெயர் அவருக்கு சூட்டப்பட்டது.


பத்து வருடங்களின் பின்னர் மூன்றாவது பிள்ளையும் இரண்டாவது மகனுமான பாலச்சந்திரன் பிறந்தார்.

(தொடரும்....)

## கபாலிக்கு சிலை

ரஜினி நடித்து வரும் கபாலி படத்தில் அவரது தோற்றத்தால் கவர்ந்த தனியார் பேக்கரி நிறுவனம் ஒன்று 600 கிலோ சொக்லெட்டில் அவரது உருவத்தை சிலையாக வடிவமைத்துள்ளது. ரஜினி நடிப்பில் 'கபாலி' படம் விறுவிறுப்பாக உருவாகி வருகிறது. இப்படத்தை அட்டக்கத்தி பா.ரஞ்சித் இயக்கி வருகிறார். ரஜினி இப்படத்தில் வெள்ளை தலைமுடி மற்றும் வெள்ளை தாடியுடன் நடித்து வருகிறார். ரஜினியின் இந்த கெட்டப் ரசிகர்களிடையே பிரபலமாகி வருகிறது. இந்நிலையில், ரஜினியின் இந்த தோற்றத்தால் கவர்ந்த சென்னையில் உள்ள தனியார் பேக்கரி நிறுவனம் ஒன்று 600 கிலோ சொக்லெட்டை கொண்டு ரஜினியின் கபாலி தோற்றத்தை போன்ற ஒரு சிலையை வடிவமைத்துள்ளது. அதை பொதுமக்கள் பார்வைக்கும் வைத்துள்ளது. இந்த சிலையை பார்த்த அனைவரும் ஆச்சர்யத்தில் உறைந்து போயுள்ளனர்.









## மீண்டும் புது முயற்சியில்

படத்திற்கு படம் புது முயற்சியை கையிலெடுத்து வெற்றி பெற்று வரும் 'ஜெயம்' ரவி, அடுத்ததாக நடிக்கவிருக்கும் புதிய படத்திலும் புதிய முயற்சியை கையிலெடுத்திருக்கிறாராம். ஜெயம் ரவி நடிப்பில் சமீபத்தில் வெளிவந்த 'மிருதன்' படம் ஜோம்பி வகையில் ஹாலிவுட் தரத்தில் வித்தியாசமாக படமாக்கப்பட்டது. இப்படத்தை சக்தி சௌந்தரராஜன் இயக்கியிருந்தார். தமிழ் சினிமாவுக்கு புதிய முயற்சியாக எடுக்கப்பட்டு வெளிவந்த இப்படம் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. இப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து தற்போது மீண்டும் 'மிருதன்' பட இயக்குனர் சக்தி சௌந்தராஜன் இயக்கும் புதிய படத்தில் ஜெயம் ரவி நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். ஏற்கனவே, ஜோம்பி வகையிலான வித்தியாசமான கதையை கையிலெடுத்த படக்குழு, இந்த முறையும் வித்தியாசமான கதையை எடுக்கவிருக்கிறார்களாம். அதன்படி, இவர்கள் இணையும் புதிய படத்தை வான்வெளி சம்பந்தப்பட்ட கதையாக உருவாக்கவிருக்கிறார்களாம். இப்படம் தமிழ் சினிமாவுக்கு புதிய முயற்சி என்றும், தமிழ் சினிமாவை அடுத்த லெவலுக்கு கொண்டு செல்லும் என்றும் கூறுகின்றனர்.



சர்வதேச தீவிரவாதி ஓசாமா பின்லேடனை ஒரு கொமெடியன் போல சித்தரித்து பாலிவுட்டில் "தேரே பின்லேடன்" என்ற பெயரில் இரண்டு படங்கள் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றன. அதுபோல இப்போது தமிழிலும் ஒரு படம் வருகிறது. பின்லேடன் திருச்சி வந்தால் என்ன நடக்கும்? என்பதே இந்த படத்தின் கரு.

மிர்ச்சி சிவா நடிப்பில் புதுமுக இயக்குநர் அரவிந்த் இயக்கும் இந்த படத்திற்கு "பின்லேடன்" என்றே பெயர் வைத்துள்ளனர். திருச்சியில் பின்லேடன் படும் இன்னல்களை கொமெடியாக இந்த படம் காட்டுமாம்.மேலும் இந்த படத்தில் ஸ்பெஷல் என்னவென்றால் பாடல் காட்சிகளில் நடிகர் சிவா கொஞ்சம் நடனம் ஆடியுள்ளதுதான் என்கிறார் இயக்குனர்




## துப்பறியும் விஷால்!

'மருது' முடித்துவிட்டு, லிங்குசாமி இயக்கத்தில் 'சண்டக்கோழி' படத்தின் இரண்டாம் பாகம் என்று திட்ட மிட்டிருந்தார் விஷால். லிங்குவோ, தெலுங்கில் அல்லு அர்ஜ"ன் நடிக்கும் படத்தில் பிஸியாகிவிட்டார். இதனால்தான் விஷாலுக்கும், லிங்குசாமிக்கும் முட்டிக் கொண்டது. தயாரிப்பாளர் சங்கம் பஞ்சாயத்து செய்து, பிரச்சினையை சுமுகமாக காதும் காதும் வைத்தாற்போல முடித்துவிட்டார்களாம். எனவே, விஷால், லிங்குசாமிக்கு கொடுத்த கால்ஷீட்டை தூக்கி அப்படியே மிஷ்கினிடம் கொடுத்திருக்கிறார். விஷால் பிலிம்பேக்டரி தயாரிக்கவிருக்கும் இந்தப் படத்துக்கு 'துப்பறிவாளன்' என்று கெத்தாக டைட்டில் வைத்திருக்கிறார் மிஷ்கின்



# சின்ன வட்டமா வாழ்க்கை?

விஜய்யோடு நடிக்க நினைக்கிறது ஒரு மறுக்க முடியாத ஆசையாக இருக்கும். எனக்கு 'தெறி' ஒரு கௌரவமான ப்ராஜக்ட். அவரோட படங்களில் எப்போதும் பெண்களுக்கு ஒரு டீசன்ட்டான ரோல் இருக்கும். அழகாகவும் காட்டுவார்கள்... நடிக்கவும் வைப்பார்கள். இதில் இந்த இரண்டு விஷயமும் நடந்திருக்கு.
விஜய்யோடு நடிக்கிற சந்தர்ப்பம் எனக்கு இவ்வளவு சீக்கிரத்தில் கிடைக்கும் என்று நான் நினைத்தே பார்த்ததில்லை. அதிர்ஷ்டம் என்பதா, அல்லது எப்படிச் சொல்றதுனு தெரியலை. வாழ்க்கை இவ்வளவு சின்ன வட்டமா? ஒண்ணும் புரியலை .. எனக்கு! என்னைக் கூப்பிட்டு 'நீங்களும் இதில் விஜய்யோடு நடிக்கறீங்க'னு சொன்னதும் நம்பவே முடியலை. என் மௌனத்தைப் பார்த்துட்டு. 'என்னடா! இந்தப் பொண்ணுகிட்ட பேச்சையே காணோம்'னு நினைச்சிருக்கலாம். நான் அவரோட மிகச் சிறந்த ரசிகை. இது சும்மா சொல்ற விஷயமில்லை என்பதை எல்லோரும் நம்பணும்!"




# அம்மாவாக ஆசை



எண்பதுகளில் சுமலதாவுக்கு தமிழ், தெலுங்கு, கன்னட மொழிகளில் எக்கச்சக்க ரசிகர்கள். கரையெல்லாம் செண்பகப்பூ, ஒரு ஓடை நதியாகிறது போன்ற முக்கிய மான படங்களில் நடித்தவர், ரஜினியுடன் முரட்டுக்காளை, கழுகு போன்ற படங்க ளிலும் நடித்தார். கன்னட நடிகர் அம்பரீஷ் பூரியை திருமணம் செய்து கொண்டபின் நடிப்பிலிருந்து விலகினார். தற்போது எல்லா பழம்பெரும் நடிகைகளைப் போல் அம்மா வேடங்களில் நடித்து வருகிறார். கன்னட படங்களில் அழகான அம்மா தேவையென்றால், முதல் போன் சுமலதாவுக்குதான் செல்கிறது. பழம் நினைவுகள்... தமிழிலும் நடிக்க சுமலதா ஆசைப்படுகிறார். நடிகர் என்றால் ரஜினியைப் போல் 60 வயதிலும் இருபது வயது பெண்ணுடன் டூயட் பாடலாம். நடிகைக்கு அது அனுமதியில் லையே ... அம்மா வேடங்கள் கிடைத்தால் போதும் என்கிறார் சுமலதா.



# விஷாலுடன் ரகுல்

மிஷ்கின் இயக்கத்தில் உருவாக இருக்கும் 'துப்பறிவாளன்' படத்தில் நடிக்க இருக்கிறார் விஷால். இந்த படத்தின் ஆரம்பகட்ட பணிகள் நடைபெற்று வரும் நிலையில், விஷாலுக்கு ஜோடியாக ரகுல் பிரீத் சிங் நடிக்க இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது. ரகுல் பிரீத் சிங் தமிழில் "தடையற தாக்க", "புத்தகம்" மற்றும் "என்னமோ ஏதோ" ஆகிய படங்களில் நடித்துள்ளார். இவர் நடித்த தமிழ் படங்கள் அதிகம் பேசப்படவில்லை என்றாலும், தெலுங்கில் பிரபலமான நடிகையாக வலம் வந்து கொண்டிருக் கிறார். தற்போது விஷாலுடன் இணைவதன் மூலம் தமிழிலும் பிரபலமாவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சூடு பிடிக்கத் தொடங்கியுள்ள

# தமிழக தேர்தல் களம்

அ.தி.மு.க.வின் தேர்தல் வரலாற்றில் முதல்முறையாக இந்த சட்டப்பேரவை தேர்தலில் 234 தொகுதிகளிலும் இரட்டை இலை சின்னத்தில் அந்த அணியின் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் 227 தொகுதிகளுக்கான அ.தி.மு.க. வேட்பாளர் பட்டியலை முதல்வரும் அக்கட்சியின் பொதுச் செயலாளருமான ஜெயலலிதா திங்கட்கிழமை வெளியிட்டார். தோழமை கட்சிகளுக்கு 7 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தமிழக சட்டப்பேரவைக்கு மே 16 ஆம் திகதி தேர்தல் நடக்கிறது. இதற்கான வேட்புமனு தாக்கல், வரும் 22 ஆம் திகதி தொடங்குகிறது. இதையடுத்து அனைத்துக் கட்சிகளும் கூட்டணியை இறுதி செய்வது, வேட்பாளர் பட்டியல் வெளியிடுவது என தீவிரமாக ஈடுபட்டுள்ளன. அ.தி.மு.க.வில் கடந்த சில நாட்களாக வேட்பாளர் நேர்காணல் நடத்தப்பட்டு வந்தது. மேலும் கூட்டணி கட்சிகளின் தலைவர்களும் ஜெயலலிதாவை சந்தித்து ஆதரவு தெரிவித்தனர்.

இந்நிலையில், 227 தொகுதிகளுக்கான அ.தி.மு.க. வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. கூட்டணி கட்சிகளுக்கு 7 தொகுதிகள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன. முதல்வர் ஜெயலலிதா ஆர்.கே. நகர் தொகுதியில் மீண்டும் போட்டியிடுகிறார். அ.தி.மு.க. 227 தொகுதிகளில் போட்டியிடுவது இதுவே முதல் முறையாகும்.

தி.மு.க.வில் இருந்து வெளியேற்றப்பட்ட எம்.ஜி.ஆர்., 1972-இல் அ.தி.மு.க.வை தொடங்கினார். அதன்பிறகு, முதல்முறையாக 1977 சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. போட்டியிட்டது. அந்தத் தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளர்கள் 200 தொகுதிகளில் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டனர்.

அதன் பிறகு 1980ஆம் ஆண்டு பேரவைத் தேர்தலில் 177 தொகுதிகளிலும், 1984 ஆம் ஆண்டு தேர்தலில் 155 தொகுதிகளிலும் இரட்டை இலை சின்னத்தில் அதிமுக வேட்பாளர்கள் போட்டியிட்டனர். எம்.ஜி.ஆர். மறைவைத் தொடர்ந்து ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. (ஜெ) அணி எனவும், ஜானகி எம்.ஜி.ஆர். தலைமையில் அ.தி.மு.க. (ஜா) அணி எனவும் அக்கட்சி பிளவுபட்டது. அதன்காரணமாக 1989 பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க.வி.ன் அதிகாரபூர்வமான இரட்டை இலை சின்னம் முடக்கப்பட்டது. அ.தி.மு.க. (ஜெ) அணி வேட்பாளர்கள் 198 தொகுதிகளில் சேவல் சின்னத்திலும், அ.தி.மு.க (ஜா) அணி வேட்பாளர்கள் 175 தொகுதிகளில் இரட்டைப் புறா சின்னத்திலும் போட்டியிட்டனர்.

பின்னர் இரு அணிகளுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் மறைந்து, அ.தி.மு.க. ஒன்றுபட்டது. அதைத் தொடர்ந்து 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற பேரவைத் தேர்தலில் அக்கட்சியின் வேட்பாளர்கள் 168 தொகுதிகளில் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டனர். 1996 ஆம் ஆண்டு தேர்தலில் 168 தொகுதிகளிலும், 2001 ஆம் ஆண்டு 141 தொகுதிகளிலும் இரட்டை இலை சின்னத்துடன் அ.தி.மு.க. வேட்பாளர்கள் தேர்தலைச் சந்தித்தனர். 2006 ஆம் ஆண்டில் 188 தொகுதிகளிலும், கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற பேரவைத் தேர்தலில் 165 தொகுதிகளிலும் அ.தி.மு.க.வின் இரட்டை இலை சின்னம் களம் கண்டது.



இந்நிலையில், இந்த சட்டப் பேரவைத் தேர்தலுக்கான அ.தி.மு.க. வேட்பாளர்கள் பட்டியலை கட்சியின் பொதுச் செயலாளரும், முதல்வருமான ஜெயலலிதா வெளியிட்டார். அந்தப் பட்டியலில் அ.தி.மு.க. வேட்பாளர்கள் 227 பேர் இடம் பெற்றுள்ளனர். தோழமைக் கட்சிகளுக்கு 7 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதிமுகவின் எல்லா தோழமைக் கட்சிகளும் இரட்டை இலை சின்னத்திலேயே போட்டியிடுகின்றன. இதனால், அதிமுகவின் தேர்தல் வரலாற்றில் முதல்முறையாக 234 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் இரட்டை இலை சின்னத்திலேயே தேர்தலை சந்திக்கும் சிறப்பை அக்கட்சி பெற்றுள்ளது.

இதுகுறித்து அரசியல் விமர்சகர் ஞானி கூறியதாவது:

ஏற்கனவே 2014 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தின் அனைத்து தொகுதிகளிலும் இரட்டை இலை சின்னத்தில் அ.தி.மு.க. வேட்பாளர்கள் போட்டியிட்டனர். நாடாளுமன்ற தேர்தலில் ஒரு மாநிலக்கட்சி மேற் கொண்ட மிகவும் துணிச்சலான முடிவாக அது கருதப்பட்டது.

அந்தத் தேர்தலில் கிடைத்த வெற்றியால் பெரும் துணிச்சல் பெற்ற அ.தி.மு.க., வரும் சட்டப் பேரவை தேர்தலிலும் பெரிய கட்சிகளுடன் கூட்டணி தேவையில்லை என்று கருதுகிறது. மேலும், தமிழகத்தில் தாங்கள்தான் மிகவும் பலமான கட்சி என்பதை மக்களுக்கு காட்ட அ.தி.மு.க. விரும்புகிறது. அதன் வெளிப்பாடாகவே அ.தி.மு.க. மட்டுமின்றி, அந்த அணியில் இடம்பெற்றுள்ள தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்களையும் இரட்டை இலை சின்னத்திலேயே ஜெயலலிதா களத்தில் இறக்கி யுள்ளார்.

அரசியல் விமர்சகரும், மூத்த பத்திரிகையாளருமான ஆர்.மணி கூறியதாவது:

தமிழகத்தின் 234 தொகுதிகளிலும் இரட்டை இலை சின்னத்தில் தமது அணி வேட்பாளர்களை நிறுத்தியுள்ளதன் மூலம் ஜெயலலிதாவின் அதீத நம்பிக்கை வெளிப்படுகிறது. அ.தி.மு.க.வுக்கு எதிர் முகாமில் இருப்பவர்கள் பல அணிகளாக சிதறி நிற்கின்றனர். எதிர்க்கட்சிகளின் இந்த பலவீனத்தை ஜெயலலிதா மிகவும் துல்லியமாக புரிந்து வைத்துள்ளார். எதிர்க்கட்சிகளின் இந்த பலவீனமே அ.தி.மு.க.வின் பலமாக மாறியுள்ளது.

அதிமுகவில் வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழக தேர்தல் களம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.

# நியூட்டனின் விதியும் வீதிப் பாதுகாப்பும்

காலம் பொன் போன்றது என்பது பழமொழி. ஏனென்றால் சென்றால் வராது. அதேபோல் தான் உயிரும். தற்போதைய நிலவரப்படி வீதி விபத்தில் தான் அதிக உயிரிழப்பு ஏற்படுவது அனைவரும் அறிந்த ஒன்று.அதிலிருந்து உயிரிழப்பை எவ்வாறு தடுப்பது என்பதைப் பார்ப்போம்.

**நியூட்டன்**

என்னடா எங்கேயோ கேட்ட பெயராக உள்ளது என்று யோசனை செய்கின்றீர்களா? பாடசாலைகளில் கற்ற எந்த வகுப்பு அறிவியல் புத்தகத்திலும் இவர் பெயரைக் காணலாம்.

இவருக்கும் விபத்திற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கிறீர்களா? இருக்கிறது. அது எதுவென்றால் அதுவும் உங்களுக்குத் தெரியும்... அதுதான் இவருடைய மூன்று விதிகள்.

**முதல் விதி:**

நிலையாக இருக்கக்கூடிய ஒரு பொருள் மீது விசையை செலுத்தினால் அது இயக்க நிலைக்கு செல்லும். இயக்க நிலையில் இருக்கும் பொருள் அதன் மீது மற்றொரு எதிர் விசை செயற்படும் வரை தொடர்ந்து அதே இயக்க நிலையில் தான் இருக்கும்.

**இரண்டாம் விதி:**

விசையானது முடுக்கத்திற்கு நேர்தகவிலும் நிறைக்கு எதிர் தகவிலும் இருக்கும்.

**மூன்றாம் விதி:**

ஒவ்வொரு விசைக்கும் அதற்கு நிகரான எதிர்விசை உண்டு.

20 வயது பையன் தன் அப்பாவிடம் எனக்கு 200 cc பைக் தான் வேண்டும் என்று அடம் பிடித்து உண்ணாவிரதம் இருந்து வாங்கிவிட்டான். அடுத்தகட்ட நடவடிக்கை high speed riding. அப்போது எதிர்பாராத விதமாக ஒரு விபத்து.

விபத்திற்கான காரணம்

அதிவேகம்

தலைக்கவசம் இல்லை

அவன் 100 kmphல் சென்று sudden brake போட்டு, எதிரே இருந்த சுவற்றின் மீது மோதியதில் அவன் உயிர் பறிபோனது என்றது பொலிஸ்.

**ஏன்?**

இப்போது நியூட்டனின் விதிகளுக்கு வருவோம்.

அவன் 100 இல் பைக்கை செலுத்தும் போது பைக் மட்டுமல்ல அவனுடைய உடலும் 100 முஅிா என்ற இயக்கத்தில் தான் இருக்கும். உடனே அவன் Sudden brake போடும் போது டீசயமநன் உராய்வு விசையின் காரணமாக வாகனம் உடனடியாக ஓய்வு நிலைக்குத் திரும்பும். ஆனால் அவனது உடல் நியூட்டனின் முதல் விதிப்படி தொடர்ந்து 100 Kmph என்ற இயக்கத்திலேயே வாகனத்தை விட்டு வெளியே வீசப்படும்.

அப்படி வீசப்படும் அவன் உடல் மீது நியூட்டனின் இரண்டாம் விதிப்படி 1805 N என்ற அள்வில் விசை செயற்பட்டு அதே அளவு விசையுடன் அவன் சுவற்றின் மீது மோதல் ஏற்படும்.

அப்போது மூன்றாம் விதிப்படி சுவரும் அவனது உடலின் மீது 1805 N என்ற அளவில் எதிர் விசையை செலுத்தும். புரியும்படி சொன்னால் 185 Kg உள்ள ஒரு பொருளை அவன் மீது வீசுவது போல் இருக்கும்.

**தீர்வு:**

நிதானமாக செல்லுங்கள்..

தலைக் கவசம் அணியுங்கள்...

நான்கு சக்கர வாகனம் எனில், சீட் பெல்ட் அணியுங்கள்...

தலைக்கவசம், உங்கள் தலை மீது செயற்படும் எதிர் விசையை (நியூட்டனின் மூன்றாம் விதி) கட்டுப்படுத்தும்.

சீட் பெல்ட், உங்கள் மீது உருவாக்கப்படும் விசையை (நியூட்டனின் இரண்டாம் விதி) குறைக்கும்.

# மதுவை நாடும் மங்கைகளே



மதுவின் பிடியில் மனித வாழ்க்கை கலாசாரத்தோடு இணைந்து விட்டது என்பது கொடிய உண்மை. மது தனது பிடியை சமூகத்தை நோக்கி நெருக்கிக் கொண்டே போகிறது. மது அருந்தும் விஷயத்தில் பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது என்பது வேதனையின் உச்சம்.

சில பெண்கள் தங்கள் உயர்ந்த அந்தஸ்தை காட்டிக் கொள்ள குடிக்கிறார்கள். தான் வெளிநாட்டில் பிறந்து வளர்ந்தவள் இதெல்லாம் அங்கே சாதாரணம் என்கிறார்கள். வெளிநாட்டு தட்ப வெப்பம் வேறு. எமது தட்ப வெப்பம் வேறு. ரத்தம் உறைந்து போகும் அளவிற்கு குளிரில் வசிப்பவர்கள் தங்களை தற்காத்துக் கொள்ள மது அருந்தும் கட்டாயத்திற்கு இயல்பாகவே தள்ளப்படுகிறார்கள். இங்கு அப்படியான சூழல் இல்லை. அப்படியிருந்தும் தேவையில்லாமல் மது அருந்துகிறார்கள்.

விடுமுறையை கழிக்க மது விருந்து என்று ஏற்பாடு செய்து மகிழ்கிறார்கள். எந்த நேரம் என்ன விளைவு உண்டாகும் என்று யாராலும் அனுமானிக்க முடியாது. காரணம் எதுவாக இருந்தாலும் விளைவு ஆபத்தானது.


மது ஆண்களை காட்டிலும் பெண்களுக்கு அதிக பாதிப்பை உண்டுபண்ணும். பெண்கள் மது போதையில் வீழ்ந்துவிட்டால் போதை தெளிய காலதாமதமாகும். ஆண்கள் உடலில் இருக்கும் தண்ணீரை விட பெண்கள் உடலில் தண்ணீரின் அளவு குறைவு. இதனால் போதை தலைக்கேறினால் இறங்குவது சிரமம்.

குடிக்கு அடிமையாகிக்கிடக்கும் ஆண் சமூகத்தை திருத்தும் பொறுப்பு பெண்களிடம் தான் உள்ளது. அப்படிப்பட்ட நிலையிலிருக்கும் பெண்களே குடிக்கும் போது அதை ஒரு வெறுமையோடு பார்க்க வேண்டியுள்ளது. மேலும் குடியால் நேரடியான உடல்நல பாதிப்புகள் வெகு சீக்கிரத்தில் ஏற்படுவதும் பெண்களுக்கே!.

உடல் எடை கூடுவது, கல்லீரல் பாதிப்பு, இதயநோய், மார்பக புற்றுநோய், வயிற்றுப்புண், கண் பார்வை மழுங்குதல் போன்ற பல வியாதிகளுக்கு வழிவகுக்கிறது குடி.

ஆண்கள் குடியில் சிக்கிக் கொண்டால் குடும்பத்தை பெண்கள் எப்பாடுபட்டாவது நிமிர்த்தி விடுவார்கள். பெண்கள் குடியில் மூழ்கிவிட்டால் வீடும் நாடும் நிலைகுலைந்து போய்விடும்.

# விவாகரத்தானவரா நீங்கள்



விவாகரத்தான பெண்கள் முதலில் குடும்ப உறவுகளை மேம்படுத்தவேண்டும். குடும்ப உறவுகள் மேம்பாடு அடையும் போது ஓரளவு மகிழ்ச்சி நிரந்தரமாகும். அதன் பின்பு அவர்கள் சமூக உறவை மேம்படுத்த வேண்டும்.

சமூக உறவை நீங்கள்தான் வளர்க்கவேண்டும். அதற்கு ஆரோக்கியமான சிந்தனையும், மகிழ்ச்சியும், புன்னகையும், தைரியமும் அவசியம்.

உங்களுடைய பழைய சோக கதைகளை கேட்க யாருமே விரும்ப மாட்டார்கள். உங்களை சுற்றியிருக்கும் சமூகத்துக்கு உங்களால் முடிந்த நன்மைகளைச் செய்து அவர்களை அனுசரித்து நடந்தால் அது ஒரு நல்ல சூழலை உங்களுக்கு ஏற்படுத்தித் தரும். அதன் மூலம் உங்கள் மனதில் இருக்கும் வெறுமை அகலும்.

விவாகரத்தான பெண்கள் அடுத்தவர்களை குறைசொல்வதை தவிர்க்கவேண்டும் ஏனெனில் முதலில் கணவரை குறை கூறித்தான் விவாகரத்து பெற்றிருப்பார்கள். அப்படிப்பட்ட பெண்கள் குடும்பத்தினர் மீதும், சமூகத்தின் மீதும் குறை சொல்லும் போது அது சரியாகவே இருந்தாலும் 'இந்த பெண்ணுக்கு வேறு வேலையே இல்லை. யாரையாவது குறை சொல்லிக் கொண்டே இருப்பதுதான் இவள் வேலை' என்று காது படவே குற்றஞ்சாட்டுவார்கள். அதனால் அடுத்தவர்களை குறை சொல்லாமல் அனுசரித்து வாழ, விவாகரத்தான பெண்கள் முன் வரவேண்டும்.

# கோடையில் சருமத்தை பாதுகாக்க



கோடையில் சருமத்தை பாதுகாக்க கடலை மாவை பயன்படுத்துங்கள்

சோப்பைக் கொண்டு முகத்தைக் கழுவி வந்தால், வெயிலால் உண்டாகும் கருமையான சருமத்தை சரிசெய்ய முடியாது. ஆனால் அதுவே கடலை மாவைப் பயன்படுத்தினால், சருமத்தில் உள்ள கருமை எளிதில் நீங்கிவிடும்.

கடலை மாவைக் கொண்டு முகத்தை தேய்த்து கழுவினால், சருமத்தில் உள்ள இறந்த செல்கள் வெளியேற்றப்பட்டு, சருமம் பளிச்சென்று மின்னும்.

கடலை மாவில் உள்ள ப்ளீச்சிங் தன்மையால், அதனைக் கொண்டு தினமும் முகத்தைக் கழுவி வர சருமத்தின் நிறம் அதிகரிக்கும்.

முகப்பருவால் கஷ்டப்படுபவர்கள், கடலை மாவைக் கொண்டு முகத்தைக் கழுவி வர, சருமத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய் நீக்கப்பட்டு, பிம்பிள் வருவது தடுக்கப்படும்.

பலருக்கும் கண்களைச் சுற்றி கருவளையங்கள் ஏற்படும். இதற்கு முதன்மையான காரணமாக இருப்பது சரியான தூக்கத்தை மேற்கொள்ளாமல் இருப்பது. ஆனால் தினமும் கடலை மாவைக் கொண்டு முகத்தைக் கழுவி வந்தால், கண்களைச் சுற்றியுள்ள கருவளையங்களைப் போக்கலாம்.

உங்களுக்கு கரும்புள்ளிகள் அதிகம் இருந்தால், அதனைப் போக்க கடலை மாவு பெரிதும் உதவியாக இருக்கும். எனவே கரும் புள்ளிகளைப் போக்க கண்ட பொருட்களைப் பயன் படுத்தாமல், கடலை மாவைக் கொண்டு அன்றாடம் முகத்தைக் கழுவுங்கள்.

சிலருக்கு முகத்தில் எண்ணெய் அதிகம் வழியும். அத்தகையவர்கள் கடலை மாவைக் கொண்டு முகத்தைக் கழுவி வந்தால், சருமத் துளைகள் இறுக்கப்பட்டு, முகத்தில் எண்ணெய் அதிகம் வழிவது தடுக்கப்படும்.

கடலை மாவு இயற்கைப் பொருள் என்பதால், எந்த வகையான சருமத்தினரும் இதனைப் பயன்படுத்தலாம். இது 100% சுத்தமானது. எனவே அதிக செலவு செய்து கெமிக்கல் கலந்த சோப்பை வாங்கி பயன்படுத்துவதற்கு பதிலாக, கடலை மாவைப் பயன் படுத்தினால் சரும ஆரோக்கியம் மேம்படும்.

# கூந்தல் பராமரிப்பு



ஆரோக்கியமான கூந்தலை பெற விரும்பினால சரியான முறையில் கூந்தலை பராமரிக்க வேண்டியது அவசியம்.

ஆரோக்கியமான மற்றும் நீண்ட கூந்தலை பெற விரும்பினால், ஒரு சரியான வழக்கமான சுத்தப்படுத்துதல் அவசியம். வழக்கமாக லேசான ஷாம்பு மற்றும் கண்டிஷனருடன் உங்கள் கூந்தலை கழுவி கண்டிஷன் செய்யுங்கள்.

வாரத்திற்கு ஒரு முறை சூடான தேங்காய் எண்ணெய் மசாஜ் செய்வது, உங்களை ஓய்வெடுக்க உதவும் மற்றும் உங்கள் முடி இழந்த ஊட்டச் சத்துக்களை மீட்டெடுக்க முடியும். எண்ணெயை சூடுபடுத்த மற்றும் உங்கள் தலை மற்றும் உச்சந்தலையில் மசாஜ் செய்ய உங்களுக்கு தேவைப்படுவதெல்லாம் 5 நிமிடங்கள் தான்.

ஒவ்வொரு நாளும் முடி உலர்த்தியை (hair dryer) பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். உங்கள் முடி சேதத்தைத் தடுக்க தானாகவே இயற்கையாக உலர விடுங்கள்.

ஆரோக்கியமான முடியை பாதுகாக்க வழக்கமாக முடியை வாரிக்கொள்வது சிறந்ததாகும்.

## குட்டீஸ் பக்கம்





# இலட்சியத்தின் மதிப்பு

ஒரு கிராமத்தில் ஒரு சிறுவன் வசித்து வந்தான். அவன் சிறுவயதில் இருந்தே தனது எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டே இருப்பான். அவன் தனது எதிர்காலத்தில் பிரசித்தி பெற்ற ஒரு பத்திரிகை ஆசிரியராக வரவேண்டும் என்பதே அவனது இலட்சியம், கனவு. அவன் தனது படிப்புடன் தனது இலட்சியப் பாதையில் முன்னேறிச் சென்றான்.

காலங்கள் பல கடந்தன. பல பத்திரிகை வெளியீட்டுத் திணைக் களங்களும் உருவானது. அவன் தனது வேலை வாய்ப்புக்காக பல பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்றான். ஆனால் எதுவும் கைகூடவில்லை. மிக வருத்தத்துடன் தனது வாழ்க்கையை நடத்திச் சென்றான். வறுமையில் வாழும் தனது குடும்பத்தை காப்பாற்றுவதற்காக கூலிவேலைக்குச் சென்றான். ஆனாலும் அவனுடைய அடி மனதில் அவனது இலட்சியமே அடிக்கடி நினைவில் வந்தது. மிகவும் மன வருத்தத்துடன் வாழ்ந்து வந்தான்.

ஒருநாள் அவனது கிராமத்தில் வேறு நபர்களால் ஏற்படுத்தப்பட்ட கொலையில் இவனுக்கும் பங்கு உண்டு என்று பொய்க் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டான். அவனுக்கு அந்நாட்டு அரசாங்கத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவனும் அவனது குடும்பமும் மிகவும் மனவருத்தப்பட்டனர். அவனது இறுதி ஆசையை நிறைவேற்றும் நோக்கில் காவல் துறையினரால் அவனை கேட்கப்பட்டிருந்தது. அவனும் அதற்கு நான் சிறந்த பத்திரிகை ஆசிரியரைப் பார்க்க வேண்டும் என்று கூறினான். அவனது ஆசைக்கு இணங்க காவல்துறை சிறந்த பத்திரிகை ஆசிரியை அழைத்து வந்தனர். அந்த வாலிபன் தனது வாழ்க்கைக் கதையை பத்திரிகை ஆசிரியரிடம் கூறினான்.

அந்தப் பத்திரிகை ஆசிரியரும் அவனது கதையை கேட்டு மிகவும் மனமுடைந்து போனார். அப்பொழுது அவன் பத்திரிகை ஆசிரியைப் பார்த்து, உங்களது பத்திரிகையில் எனது கதையை ஒரு சிறுகதையாக போடுமாறு வேண்டிக் கொண்டான். அவனது வேண்டுகோளுக்கு இணங்க அடுத்த வார பத்திரிகையில் அவனது வாழ்க்கை ஒரு சிறு கதை வடிவில் வெளிவந்தது. அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

**சச்சிதானந்தம் றொபின்சன்**
யா/அச்செழு சிவப்பிரகாச வித்யாலயம்,
நீர்வேலி.


## வாரமொரு குறள்



*செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்*
*செயற்கரிய செய்கலா தார்.*

**பொருள் :**
பெருமை தரும் செயல்களைப் புரிவோரைப் பெரியோர் என்றும், சிறுமையான செயல்களையன்றிப் பெருமைக்குரிய செயல்களைச் செய்யாதவர்களைச் சிறியோர் என்றும் வரையறுத்துவிட முடியும்.

# படிக்க வேண்டாமா?



ராமகிருஷ்ணர் தட்சிணேஸ்வரம் காளி கோவிலில் அர்ச்சகராகப் பணி புரிந்து வந்தார்.

அவரைச் சந்தித்த பக்தர் ஒருவர் அவரிடம், "ஐயா... நீங்கள் காளியைப் பார்த்து இருக்கிறீர்களா...?" எனக் கேட்டார்.

உடனே ராமகிருஷ்ணர், "பார்த்திருக்கிறேன்... இன்று காலையில் கூட அவளிடம் பேசிக் கொண்டு இருந்தேன்..." என்றார்.

அந்த பக்தர், "நீங்கள் சொல்வது உண்மையானால் அவளை எனக்காக வரவழையுங்கள்... பார்க் கலாம்" என்றார்.

ராமகிருஷ்ணர், "நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அவர், "நான் மருத்துவராக இருக்கிறேன்..." என்றார்.

ராமகிருஷ்ணர் அவரிடம், "அப்படியானால் என்னையும் இப்போதே மருத்துவர் ஆக்குங்கள்" என்றார்.

அவர், "அதெப்படி... அதற்கான படிப்பு படிக்க வேண்டாமா...?" என்று கேட்டார்.

"அதே போலத் தான்... காளியைக் காணவும் பக்தி என்ற படிப்பு வேண்டும்..." என்றார் ராமகிருஷ்ணர்.

## பொன் மொழிகள்



ஒவ்வொருவரும் கட்டளையிடவே விரும்புகின்றனர். யாரும் கீழ்படிவதற்கு தயாராக இல்லை. முதலில் நல்ல வேலைக்காரனாக இருக்க கற்றுகொள். பின் எஜமானனாகும் தகுதி உனக்கு வந்துவிடும்.

– **சுவாமி விவேகானந்தர்**



வாழ்க்கையில் எப்போதும், சமாதானத்தையும் சகிப்புத்தன்மையையும் நமது லட்சியமாக கொள்ள வேண்டும்.

– **பாரதியார்**



நாம் இன்று என்ன நிலையில் இருக்கிறோமோ, அந்நிலையை நமக்கு அளித்தது நமது எண்ணங்கள்தான். நமது இன்றைய நிலை நமது எண்ணங்களாலேயே ஆக்கப்பட்டிருக்கிறது.

– **புத்தர்**



நான் சாவதற்கு அஞ்சவில்லை. ஆனால் வாழ்ந்த வாழ்வின் அடையாளமின்றி சாக அஞ்சுகிறேன்.

– **மிக்கேல் லேர்மொண்டஸ்**



நம்பிக்கையே வாழ்க்கையின் சக்தி கவலை வாழ்க்கையின் எதிரி.

– **ஷேக்ஸ்பியர்**



இந்த உலகத்தை கெடுப்பது கெட்டவர்கள் அல்ல கைகட்டி வேடிக்கை பார்க்கும் நல்லவர்கள்தான்.

– **மாவீரன் நெப்போலியன்**

## காய் காய் காய்

*பீர்க்கங்காய் பீர்க்கங்காய் பீர்க்கங்காய்*
*பிளவுகள் நிறைந்த நெஞ்சம் கொண்டவர்*
*பீர்க்கங்காய் பீர்க்கங்காய் பீர்க்கங்காய்*

*சுண்டக்காய் சுண்டக்காய் சுண்டக்காய்*
*சுகத்திற்காகப் பிறரைக் கெடுப்பவர்*
*சுண்டக்காய் சுண்டக்காய் சுண்டக்காய்*

*வெண்டக்காய் வெண்டக்காய் வெண்டக்காய்*
*வேலையைச் செய்வதில் வழவழப்பானவர்*
*வெண்டக்காய் வெண்டக்காய் வெண்டக்காய்*

*பறங்கிக்காய் பறங்கிக்காய் பறங்கிக்காய்*
*பானை வயிற்றைக் கொண்டவர்*
*பறங்கிக்காய் பறங்கிக்காய் பறங்கிக்காய்*

*பாகற்காய் பாகற்காய் பாகற்காய்*
*பைந்தமிழ் பேசாப் பிறமொழிப் பேச்சு*
*பாகற்காய் பாகற்காய் பாகற்காய்!*

## காற்றின் வேகமும் பெயர்களும்!

மணிக்கு 6 கிலோ மீட்டர் வேகத்தில் வீசினால் அது **மென் காற்று.**

மணிக்கு 6 முதல் 11 கிலோ மீட்டர் வேகத்தில் வீசினால் அது **இளம் தென்றல்.**

மணிக்கு 12 முதல் 19 கிலோ மீட்டர் வேகத்தில் வீசினால் அது **தென்றல் காற்று.**

மணிக்கு 20 முதல் 29 கிலோ மீட்டர் வேகத்தில் புழுதியைக் கிளப்பிக் கொண்டு வீசினால் அது **புழுதிக் காற்று.**

மணிக்கு 30 முதல் 39 கிலோ மீட்டர் வேகத்தில் வீசினால் அது **ஆழிக் காற்று.**

மணிக்கு 40 க்கு மேல் 100 கிலோ மீட்டர் வேகத்தில் வீசினால் அது **கடுங்காற்று.**

மணிக்கு 101 முதல் 120 கிலோ மீட்டர் வேகத்தில் வீசினால் அது **புயல் காற்று.**

மணிக்கு 120 கிலோ மீட்டருக்கு மேலான வேகத்தில் வீசினால் அது **சூறைக் காற்று.**

## பேனா நண்பர்கள்




அருகிவரும் கடிதம் மூலமான தொடர்புகளை வளர்த்தெடுக்கும் நோக்கில் தினச்செய்தி பேனா நண்பர்கள் வட்டத்தை உருவாக்கவுள்ளது. எனவே கடித தொடர்பு மூலம் பேனா நண்பர்களாக விரும்புவோர் தமது முகவரி உட்பட்ட விபரங்களை எழுதி அனுப்பி பேனா நண்பர்கள் வட்டத்தில் இணைந்து கொள்ளலாம்.

**தினச் செய்தி,**
தில்லைக்கட்டி வீதி,
சுன்னாகம்.



# வாழ்வாதாரத்திற்கு வளம் சேர்க்கும் 'வன்னி கெமி இன்டஸ்றீஸ்'

**வன்னி கெமி இன்டஸ்ரீஸ் நிறுவனத்தின் விற்பனை முகாமையாளரும் ஊடகவியலாளரும் அனுபவமிக்க அரசியல், தொழிற்சங்க பிரதிநிதியும் சமூக சேவையாளருமான வே. ஜீவராஜா உடனான நேர்காணல்.**



**கேள்வி : உங்கள் நிறுவனம் பற்றி விளக்கமாகக் கூற முடியுமா?**

பதில் : ஆம். எமது நிறுவனம் பற்றி கூறுவதானால் மிக உயரிய நோக்கத்துடன் யுத்தகாலத்தில் பப்படம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக திரு. தர்மராஜா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அந்தச் சமயம் அவர் பலருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவியவர். கடந்த யுத்தம் நடைபெற்ற காலத்தில் அவர் மரணமடைந்தார். யுத்தத்தால் தொழிற்சாலையும் உபகரணங்களும் முற்றாகச் சேதமடைந்தன. இதன் பின் தான் வாழ்வாதாரத்திற்காகவும் அநேக விதவைப் பெண்கள் வாழ்வாதார வசதிகள் இன்றி சிரமப்பட்டு வந்தனர். இதனை உயர்த்து முகமாக முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை 3 ஆம் வட்டாரத்தில் திருமதி த. சரஸ்வதி "வன்னி கெமி இன்டஸ்ரீஸ்" என்னும் பெயரில் எமது நிறுவனத்தை ஆரம்பித்தார். இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் தொற்று நீக்கிகள், அழுக்கு நீக்கிகள், கறை நீக்கிகள் போன்ற தூய்மை பேண் திரவங்கள் கூடிய பாவனைக்காலத்தை கொண்டவைகள். இவ்வாறு தயாரிக்கப்பட்ட திரவங்கள் வடமாகாணத்தில் சந்தைப்படுத்தும் பொறுப்பை சமூக ஆர்வலரும் நலன்விரும்பியுமான திரு. M.G. சீலன் அவர்கள் வவுனியாவில் அமைந்துள்ள தனது "செந்தூரன்ஸ் நிறுவனம்" ஏற்றுக் கொண்டமையால் இதனை உற்பத்தி செய்வதற்கு முடிந்தது. ஆரம்பத்தில் சில பொருட்களை உற்பத்தி செய்தாலும் தற்போது முப்பதுக்கும் மேற்பட்ட உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்கின்றனர்.

வடமாகாணத்திலேயே மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சான்றிதழைப் பெற்ற ஒரே நிறுவனமாகவும் தென்னிலங்கையில் உள்ள இதே பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களைவிட அதிக உற்பத்திகளை மேற்கொள்ளும் நிறுவனமாகவும் எமது நிறுவனம் காணப்படுகிறது. அத்தோடு 'வன்னி கெமி இன்டஸ்ரீஸ்' ஆரம்பிக்கப்பட்ட சில ஆண்டுகளிலே பல சான்றிதழ்களையும் பல சிறப்புகளையும் பெற்றுக் கொண்ட நிறுவனமாகவும் திகழ்கின்றது.

**கேள்வி : உங்கள் நிறுவனத்தில் எவ்வாறான உற்பத்திகளை மேற்கொள்கிறீர்கள்?**

பதில் : நாம் அழுக்கு நீக்கிகள், கறை நீக்கிகள், தொற்று நீக்கிகள் போன்ற தூய்மை பேண் திரவங்கள் மட்டுமே தற்போது உற்பத்தி செய்கின்றோம். விஸ்வமடு, வள்ளிபுனம், மற்றும் கைவேலி போன்ற இடங்களில் விசேட தேவைக்கு உட்பட்டவர்களிற்கு விளக்குமாறு, தும்புத்தடி தயாரிக்கும் பயிற்சியை வழங்கி அவர்களையும் ஊக்குவித்து வருகின்றோம்.

**கேள்வி : நீங்கள் தயாரிக்கும் பொருட்களின் பயன்பாடு பற்றிக் கூறமுடியுமா?**

பதில் : நாம் பாத்திரங்களைக் கழுவுவதற்காக பயன்படுத்தப்படும் "டிஸ் வோஸ்" (திரவமாகவும் பவுடராகவும்) கல்சியம் நீக்கும் திரவங்கள், மாபிள் கிளீனர்கள், மலசலகூடம் துப்புரவாக்கும் திரவங்கள், கண்ணாடி அலுமாரிகளை பளபளப்புடன் தூய்மை செய்யும் 'கிளாஸ்' கிளீனர்கள் கிருமிகள் மற்றும் நுண்ணுயிர்களை அழித்து தளத்தை தொற்று நீக்கம் செய்து பாதுகாக்கக் கூடிய 'பைனோல்' மற்றும் 'லைசோல்' ஆகிய வீட்டு உபயோகப் பொருட்களுடன் வாகனங்களின் தூய்மை பேணும் பொருட்கள், ஆடைகளைத் துவைப்பதற்கு பயன்படுத்தப்படும் சம்போக்கள் மற்றும் மிருதுவாக்கிகள் போன்ற முப்பது வகையான பொருட்களை தயாரிக்கின்றோம். குளிரூட்டப்பட்ட இடங்களில் காற்றைத் தூய்மையாக்கும் "Air freshners" வகைகள் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட வாசனைகளில் தயாரிக்கிறோம். இவை பூக்கள் மற்றும் பழங்களின் வாசனைகளில் தயாரிக்கப்படுகின்றன.

**கேள்வி : வாகன பராமரிப்பு பொருட்களை பற்றி சுருக்கமாக கூறமுடியுமா?**

பதில் : ஆம் வாகன பராமரிப்பு பொருட்களை பொறுத்தவரை ஒரு வாகனத்தின் எல்லா பாகங்களையும் நிறப்பூச்சு, பிளாஸ்ரிக் தோல், றெக்சீன், சீற், செசி, ரயர், கண்ணாடி போன்ற எல்லா பாகங்களையும் தூய்மையாக்கக் கூடிய பத்திற்கும் மேற்பட்ட விசேட தயாரிப்புக்களை நாம் தயாரிக்கின்றோம்.

ஆட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள்களை கழுவக்கூடிய பொருட்கள் தொடக்கம் வாகன சுத்திகரிப்பு நிலையங்களில் பயன்படுத்தப்படும் அனைத்து வகைப் பொருட்களையும் நுகர்வோரின் தேவைகளிற்கு ஏற்ப கொள்கலன்களில் சந்தைக்கு அனுப்புகின்றோம்.

**கேள்வி : பல்வகைப் பயன்பாடுகளை கொண்ட திரவங்கள் எதையும் நீங்கள் தயாரிக்கின்றீர்களா?**

பதில் : ஆம் நாம் தயாரிக்கும் சுப்பர் குளோறெக்ஸ் எனும் திரவமானது கிருமி நீக்கம் செய்வதற்கும் பாத்திரங்கள், பீங்கான் கோப்பைகள், தேநீர் குவளைகள் மற்றும் மாபிள்களில் காணப்படும் கறைகளை நீக்குவதற்கும் வெள்ளை ஆடைகளில் ஏற்படக்கூடிய மங்கல் தன்மையினை நீக்குவதற்கும் இரத்தக்கறை, மைக்கறை, கத்தரி, மற்றும் வாழைக்கயர், வெற்றிலைக்கறை ஆகியவற்றை நீக்குவதற்கு பயன்படக் கூடியது. பாடசாலை மாணவர்கள், தாதியர் மத்தியிலும் இது விரும்பி உபயோகிக்கப்படுகின்றது. இதன் சிறப்பம்சம் என்னவென்றில் இதனை ஒத்த ஏனைய நிறுவனங்களின் விலையினை விட எமது நிறுவன உற்பத்தியானது மிகவும் மலிவானது.

**கேள்வி : இதற்கான மூலப் பொருட்களை எங்கிருந்து பெறுகிறீர்கள்?**

பதில் : வெளிநாடுகளிலிருந்து இத்தகைய பொருட்களை இறக்குமதி செய்யும் நிறுவனம் ஒன்றிடமிருந்தே நாம் இவற்றை கொள்வனவு செய்கின்றோம். அவர்கள் வியட்நாம், சீனா, ஜேர்மனி, போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து இவற்றை எமக்கு வழங்குகின்றனர். இவற்றை நேரடியாக இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரத்தை நாம் பெற்றுள்ள போதிலும் அதற்கான வளம் பற்றாக்குறைகள் முட்டுக்கட்டையாக உள்ளது என்று தான் கூற வேண்டும்.

**கேள்வி : நீங்கள் உபயோகிக்கும் இயந்திர சாதனங்களை எங்கிருந்து பெற்றீர்கள்?**

பதில் : இவையாவும் இந்தியாவில் ஏற்கனவே உபயோகிக்கப்பட்டவைகள். நாம் தீர்வையின்றி பெற்றுக்கொண்டோம். இருப்பினும் பொயிலர், ஹற்றர், சீலர், மிக்ஷர், போன்ற சிறிய சாதனங்களே அவ்வாறு பெறப்பட்டன. நாம் பெரிதும் உள்ளூர் விதவைகளிற்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கும் முகமாக அநாவசிய இயந்திரங்களை பாவிக்க விரும்பவில்லை கூடுதலாக மனித வளத்தையே உபயோகிக்கின்றோம்.

**கேள்வி : உங்கள் நிறுவனத்தில் கடமை புரிபவர்கள் எப்படிப்பட்டவர்கள்? எவ்வாறான வேலைகளை செய்கிறார்கள்? அவர்களுக்கு நீங்கள் எப்படியான நன்மைகளை செய்கின்றீர்கள்?**


பதில் : அனைவரும் கணவரை இழந்த விதவைகள். யுத்தத்தின் கொடூரத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள் குடும்ப பொருளாதாரத்தை மட்டும் அல்ல அனைத்தையும் தமது தலையிலேயே சுமக்க வேண்டியவர்களாகவும் காணப்படுகின்றார்கள். இவர்களது அன்றாட வீட்டு வேலைகள் சமையல் மற்றும் பிள்ளைகளை பாடசாலைக்கு / முன்பள்ளிக்கு கொண்டு சென்று விடுதல், கூட்டிவருதல், வீட்டிலுள்ள வயது முதிர்ந்தவர்களை பராமரித்தல் போன்ற வேலைகளையும் செய்ய வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே இவர்களது அன்றாட கடமைகளிற்கு பங்கம் ஏற்படாமல் சிறு சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிற்கும் தனித்தனி பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அடிப்படைச் சம்பளத்துடன் அவர்களால் களஞ்சியத்திற்கு பதப்படுத்தப்படும் எண்ணிக்கைக்கு ஏற்ப ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தவிர பண்டிகைக் காலங்களில் உடுதுணிகளுக்கும் பாடசாலை ஆரம்பிக்கும் காலங்களில் அவர்களின் பிள்ளைகளிற்கு கல்வி உபகரணங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

**கேள்வி : வேறு ஏதேனும் சமூகப் பணிகளை உங்கள் நிறுவனம் ஊடாகச் செய்கிறீர்களா?**

பதில் : ஆம் நிறைய சமூகப் பணிகளைச் செய்கின்றோம். குறிப்பாக சிறுவர் இல்லங்கள், ஆலயங்கள் ஆகியவைகளிற்கு விசேட விலைக்கழிவில் சுத்தமாக்கிகளை வழங்கி வருகின்றோம். தவிர இவ்விடங்களின் நீர் நிலைகளில் காணப்படும் பாசி நீக்கும் திரவத்தை இலவசமாக வழங்குகிறோம். விசேட தினங்களில் பாடசாலை மட்டத்தில் கட்டுரைப் போட்டிகளை நடாத்தி பரிசில்களை வழங்கி மாணவர்களை ஊக்கப்படுத்தி வருவதுடன் சில பாடசாலைகளுக்கு தேவையான மலசலகூடம் சுத்தப்படுத்தும் பொருட்களையும் இலவசமாக வழங்கி வருகின்றோம். டெங்கு ஒழிப்புக்காக விசேட வேலைத்திட்டங்களையும் நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

**கேள்வி : உங்கள் எதிர்கால திட்டங்கள் பற்றி?**

பதில் : எங்கள் எதிர்காலத் திட்டம் என்னவென்றால் வடக்கில் வன்னியில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா என தற்போது கிழக்கிலும் கால் பதித்துள்ளது. திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் தற்போது அதிக பாவனையாளர்களை நாம் ஈர்த்துள்ளோம் என்பதை பெருமையுடன் தெரிவிக்க விரும்புகிறேன். அத்தோடு வடகிழக்குப் பகுதியில் வியாபார நடவடிக்கையில் மாத்திரம் அன்றி தமிழ் சமூகத்தின் கல்வி, கலை, கலாசாரம், சமூக பணிகளிலும் எமது நிறுவனத்தின் ஊடாக சேவை செய்வதே எங்கள் எதிர்பார்ப்பாகும். அத்தோடு எம் சொந்த முயற்சியினால் நாமும் உழைத்து எமது சமூகத்தையும் இன்றைய இளம் சமூகத்தினரையும் காப்பாற்ற வேண்டும். அதே வேளை உள்ளூர் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்த வேண்டிய பொறுப்பும் குறித்த பகுதியில் வசிக்கும் அனைவரின் கடமையாகும்.




# அகஞ்சுரக்கும் தொகுதியியல் [Endocrinology] என்றால் என்ன?

**1. அகஞ்சுரக்கும் தொகுதியியல் என்றால் என்ன என்பது பற்றிச் சிறிது விரிவாகக் கூறுங்கள்?**

எமது உடலில் பல வகையான ஹோர்மோன்களைச் சுரக்கும் சுரப்பிகள் உள்ளன. இவ்வாறான ஹோர் மோன்களைச் சுரக்கும் சுரப்பிகள் ஒட்டுமொத்தமாக அகஞ்சுரக்கும் தொகுதியென அழைக்கப்படுகின்றது. இந்த அகஞ்சுரக்கும் தொகுதி சம்பந்தமான நோய்கள் தொடர்பாக ஆராயும் பிரிவானது அகஞ்சுரக்கும் தொகுதியியல் (*Endocrinology*) என அழைக்கப்படுகின்றது.

இது பொது மருத்துவத்தின் (*General medicine*) பிரதானமான ஒரு பிரிவாகக் கருதப்படுகின்றது. இன்றைய காலகட்டத்தில் பொது மருத்துவமானது மேலும் பல உப பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு சிறந்த முறையில் சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

**2. ஹோர்மோன் சுரப்புக்கள் தொடர்பாக ஏற்படும் நோய்கள் மற்றும் பிரச்சினைகள் பற்றி விளக்கிக் கூறுங்கள்?**

எமது உடலில் பல வகையான ஹோர்மோன் சுரப்புக்கள் (*Endocrine glands*) உள்ளன. சதையியில் ஏற்படும் இன்சுலின் சுரப்புக் குறைபாடு, எதிர்ப்பினால் நீரிழிவானது ஏற்படுகின்றது. இதே போல கழுத்துப் பகுதியிலுள்ள தைரொயிட் சுரப்பியில் ஏற்படும் பிரச்சினைகளால் தைரொயிட் குறைபாட்டுநிலை மற்றும் தைரொயிட் மிகைச்சுரப்பு நிலை என்பவை ஏற்படுகின்றன. மூளையினுள் உள்ள கபச் சுரப்பியே பிரதானமான ஹோர்மோன் சுரப்பியாகும். இதுவே உடலிலுள்ள அனேகமான ஹோர்மோன் சுரப்பிகளைக் கட்டுப்படுத்துகின்றது கபச்சுரப்பியில் (*Pituitary gland*) அல்லது அதற்கு அருகிலேற்படும் கட்டிகளால் அல்லது கபச் சுரப்பி தனது செயற்பாட்டை இழப்பதால், பல வகையான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. உதாரணமாக கபச்சுரப்பியில் ஏற்படும் கட்டியினால் அல்லது அந்தக் கட்டியானது அருகிலுள்ள பகுதிகளைத் தொடுவதனால் (*prolactin*) என்ற ஹோர்மோன் சுரப்பு உடலில் அதிகரிக்கின்றது. இதனால் பெண்களில் மாதவிடாய் பிரச்சினைகள் குழந்தைப்பேறு பாதிப்படைதல், மார்பகக் காம்பினுடாகப் பால் வடிதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதேபோல ஆண்களிலும் பாலியல் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட நேரிடுகிறது.

இவ்வாறான கட்டிகளால் தலைவலி, வாந்தி மற்றும் பார்வைக் குறைபாடுகள் போன்றவையும் ஏற்படுகின்றன. சில வகையான கபச்சுரப்பிக் கட்டிகள் ஹோர்மோன்களை மேலதிகமாகச் சுரக்கின்றன. இதனால் பல வகையான ஹோர்மோன் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. உதாரணமாக உயர ஹோர்மோனானது அதிகமாகச் சுரக்கும் போது உடல் அவயவங்களின் பருமன் அதிகரித்து *Acromegaly* என்ற நோய் ஏற்படுகின்றது. கபச் சுரப்பியின் தொழிற்பாடு குறையும்போது அல்லது செயலிழக்கும் போது உடலில் பல வகையான ஹோர்மோன் குறைபாட்டு நோய்கள் ஏற்படுகின்றன. காலம் தாழ்த்திப் பூப்படைதல் (*Delayed puberty*) அல்லது குறைந்த வயதில் பூப்படைதல் என்பவையும் ஹோர்மோன் தொடர்பான பிரச்சினைகளே யாகும். எமது உடலிலுள்ள கல்சியம் போன்ற பல வகையான கனியுப்புக்களின் தொழிற்பாட்டைக் கட்டுப்படுத்துவதும் ஹோர்மோன்களே. எலும்பு தேயும் நோய் (*Osteoporosis*) என்பதும் அகஞ்சுரக்கும் தொகுதியியலில் அடங்கும் ஒரு பிரதான பிரச்சினையாகும். சிறு பிள்ளைகள் உயரம் குறைவாக இருத்தலுக்கு உயர ஹோர்மோன் (*Growth hormone*) குறைபாடும் ஒரு காரணமாகும். இதனை நாம் கண்டறிந்தால் ஹோர்மோன் சிகிச்சையின் மூலம் சாதாரண உயரத்தை இந்தச் சிறுவர்கள் அடைய முடியும்.

இன்றைய காலகட்டத்தில் உடற் பருமன் அதிகரிப்பதால் பல வகையான நோய்கள் ஏற்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. பல பெண்கள் மாத விடாய்ப் பிரச்சினைகளோடு உடலில் முடி வளர்தல் போன்றவற்றுக்கும் உள்ளாகின்றார்கள். சூலகத்தில் ஏற்படும் சிறுகட்டிகள் (*Polycystic ovarian syndrome*) இதற்குப் பிரதானமானதொரு காரணமாகும்.

**3. இவ்வாறான ஹோர்மோன் பிரச்சினைகளைக் கண்டறிந்து கொள்வதற்கான வழிமுறைகளைப் பற்றிக் கூறுங்கள்?**

ஹோர்மோன் பிரச்சினையொன்று ஏற்பட்டுள்ளது என்று நோயாளியொருவரோ அல்லது அவரது குடும்ப வைத்தியரோ சந்தேகிக்கும் இடத்து ஹோர்மோன்கள் தொடர்பான சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைத்தல் மிகச் சிறந்ததாகும். ஹோர்மோன் தொடர்பான சுரப்பாக நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிவதன் மூலம் அவற்றை இலகுவாகத் தீர்த்துக்கொள்ள முடியும்.

**4. இன்றைய கால கட்டத்தில் ஹோர்மோன் தொடர்பான பிரச்சினைகள் அதிகளவில் கண்டறியப்பட்டு வருகின்றன. இதற்கான காரணங்களைப் பற்றிக் கூறுங்கள்?**

முதலாவதாக, மக்கள் மத்தியில் இது பற்றிய விழிப்புணர்வு சிறிது சிறிதாக ஏற்பட்டு வருகின்றது. இவ்வாறான நோய்களுக்கு சிகிச்சைகள் உள்ளன என்றும், இவற்றைச் சிகிச்சைகள் மூலம் குணமாக்க முடியுமென்றும் பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

நீரிழிவு மற்றும் பல வகையான ஹோர்மோன் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு உடற்பருமன் அதிகரித்தலும் ஒரு பிரதான காரணமாகும். எமது இன்றைய பிழையான மேலைத்தேய (*Western*) துரித உணவு (*Fastfood*) பழக்கவழக்கங்களும் உடற்பயிற்சியற்ற (*Sedentary*) வாழ்க்கை முறையும் இதற்கான காரணங்களாகும்.

**5. ஹோர்மோன் தொடர்பான பிரச்சினைகளுக்கு எமது பிரதேச மக்கள் எவ்வாறு சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.**

அகஞ்சுரக்கும் தொகுதியியல் சிகிச்சை நிலையமானது யாழ் போதனா வைத்தியசாலையின் நீரிழிவு நிலையத்தில் மிக அண்மையில் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. வட மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களையும் சேர்ந்த மக்களுக்கான ஒரேயொரு ஹோர்மோன் சிகிச்சை நிலையம் இதுவேயாகும். ஹோர்மோன் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் நோய்கள் உள்ளவர்கள் இங்கு வருகை தருவதன் மூலம் சிறப்பான சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள முடியும்.


**மருத்துவர். ஆ. அரவிந்தன்**
நீரிழிவு மற்றும் அகஞ்சுரக்கும் தொகுதியியல்
சிறப்பு வைத்திய நிபுணர்
யாழ் போதனா வைத்தியசாலை





மருத்துவர் திருமதி. பிரதீபனா செல்வகரன்
நீரிழிவு சிகிச்சைநிலையம்
யாழ். போதனா வைத்தியசாலை


# உப்பு உட்கொள்வதை எப்படிக் குறைக்கலாம்?

சாப்பாடுகளைத் திட்டமிடும் போது உடனடியாக உண்ணக்கூடிய பக்குவம் செய்யப்பட்ட உணவுகளைவிட சோடியம் குறைவாகக் கொண்டுள்ள உடன் புதிய உணவுகளை கருத்தில்கொள்வோம்.

உப்பிட்ட, தகரத்தில் அடைக்கப்பட்ட அல்லது பதப்படுத்தப்பட்ட உற்பத்திகளைவிட உடன் மீன், கோழி மற்றும் இறைச்சிகள் போன்றவற்றில் சோடியம் குறைவாகவுள்ளது என்பதைக் கவனத்தில் கொள்வோம்.

தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுகளைத் தெரிவுசெய்யும் போது குறைந்த அல்லது உப்பே இல்லாது தயாரிக்கப்பட்டவற்றையே தெரிவு செய்வோம்.

உணவுக்கு சுவையூட்டும் குழம்பு (Sauce) ஊறுகாய், தேசிக்காயும் உப்பும் சேர்ந்த கலவைகள், சட்னி, பச்சடிக்கலவைகள் கெச்சப் (Ketch-up) போன்ற சேர்க்கப்பட்ட உப்பைக்கொண்டுள்ள உணவுகளைக் கட்டுப்படுத்துவோம்.

சமைக்கின்றபோது குறைந்தளவு உப்பையே சேர்ப்போம். உணவுகளில் சுவையை வாசனையை அதிகரிக்க வாசனையூட்டும் திரவியங்களையும், மூலிகைகளையும் பயன்படுத்திக் கொள்வோம்.

உப்புச் சேர்க்கப்பட்ட உடனடியாக உட்கொள்ளக்கூடிய உணவுகளுக்குப் பதிலாக குறைந்த சோடியத்தைக் கொண்டுள்ள உடன் புதிய காய்கறிகளையும், பழங்களையும் தேர்ந்தெடுப்போம்.

பதப்படுத்தப்பட்ட உணவுகளிலும், பொதியாக்கப்பட்ட உணவுகளிலும் பதப்படுத்தலின்போது அதிகளவிலான உப்பு சேர்க்கப்படுவதை ஞாபகத்தில் வைத்திருப்போம்.

குழந்தைகளுக்கும் இளம் பிள்ளைகளுக்கும் உப்பினை அறிமுகப்படுத்துவதில் தாமதத்தை ஏற்படுத்துவோம். இதனால் குறைவான உப்புக்கு திருப்தி அடைவதுடன், சுவைகளைப் பழகிக்கொள்வதிலும் தாமதத்தை ஏற்படுத்தும். இவர்கள் எப்பொழுதும் உப்புச் சுவையை அறிய விரும்புவார்கள்.

நீங்கள் குறைவான அளவில் உப்பினை பாவிப்பதன் மூலம் அந்த அளவில் நாங்களும் திருப்தியடைவோம்.

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# லங்கா ராணி ...

இங்கு வந்து உட்கார்ந்து கொண்டிருக்கும் சிங்களக் கனவான்களின் தார்மீகம் பற்றிப் பத்திரிகையில் செய்திகள் போடுகிறார்கள். இவர்களைப் பார்க்கும் போது காலனிய நாட்கள் தான் எனக்கு ஞாபகம் வருகிறது. இவர்களுடைய தார்மீகத்தைப் பாராட்டும் நிலையில் நான் இல்லாததையிட்டு நான் மிகவும் கவலைப்படுகிறேன். அங்கிருந்து கொண்டு சிங்கள மக்களின் வறுமையைப் போக்குவதற்கு உருப்படியான காரியங்களில் ஈடுபடுவார்களானால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். இவர்களுடைய சேவை அங்கு தான் தேவைப்படுகிறது.

இங்கு எரிந்து கொண்டிருக்கும் பிரச்சினைகளில் சிலர் கூதல்காய முற்படுகிறார்கள். இப் பிரச்சனை வெகு நாட்களுக்குத் தொடர முடியாது. அதன் பின் இவர்கள் நிலை மிகவும் பரிதாபமானதாக இருக்கும். வெள்ளைச்சாமி நீ எதற்கும் தயங்க வேண்டியதில்லை. உன்னுடைய சமுதாயம் யாருடையவும் மிதிபடியாக இருக்க வேண்டுமென்ற நியதி இங்கு எப்பொழுதும் இருந்ததில்லை. அவ்வாறான சூழ்நிலை இங்கு இருக்குமாயின் இதன் முழுப் பொறுப்பையும் நீயே ஏற்றுக்கொள்ள வேண்டும். அந் நிலையை எதிர்த்துப் போராட வேண்டியவனும் நீதான் என்றான் அந்த இளைஞன்.

வள்ளமொன்று கரையிலிருந்து வருவது தெரிந்தது. இறங்குவதற்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்ததை இளைஞர்கள் தெரிந்து கொண்டனர். சரவணன், குமார், தேவன் ஆகியோர் கீழ் அறைகளில் இருந்து கொண்டு வந்து பொருட்களை இறங்கும் வாசலுக்குக் கொண்டு வந்து சேர்த்திருந்தனர்.

சிறிது நேரத்தில் வள்ளம் வந்து அணைக்கப்படும் சத்தம் கேட்டது. கடைசியாக வெள்ளைச்சாமி சிரித்துக் கொண்டே கேட்டான்.

"ஆமா இந்தப் புத்தகமெல்லாம் படிச்சுப் பார்த்திருக்கிறேன். எதுவுமே புரியமாட்டேங்குதே" என்றான். வேட்டியுடன் இருந்த இளைஞனால் அவனுடைய கேள்வியால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. கடல் பக்கமாக பார்த்துச் சிரித்துவிட்டு வெள்ளைச்சாமியைப் பார்த்து மறுமொழி கூறினான். அவனுடைய கண்களில் இருந்து வந்த ஒளி எவ்விதத்திலும் குன்றியதாகத் தெரியவில்லை.

"அது அப்படித்தான் இருக்கும் வெள்ளைச்சாமி. நீ சஞ்சலப்படக்கூடாது. மீண்டும் மீண்டும் படிக்கப் புரியத் தொடங்கி விடும். இதுவும் ஒரு விதமான மொழிப் பிரச்சனை தான். ஒரு காலத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழிற்புரட்சியும் அத்தோடு ஒன்றி வளர்ந்த முதலாளித்துவ வளர்ச்சியும் அவை தோற்றுவித்த முரண்பாடுகளையும் பிரச்சனைகளையும் பின்னணியாக வைத்தே இந் நூல்கள் பிறந்தன. ஆனால் அதே காலகட்டத்தில் நாங்கள் காலனிய ஆதிக்கத்தின் கீழ் இருந்ததனால் அங்கு அவ்வாறான தொழிற்புரட்சி ஏற்படவுமில்லை. அவ்வாறான அரசியல் பிரச்சனைகளும் அவற்றைப் பிரதிபலிக்கும் மொழியின் வளர்ச்சியும் ஏற்படவில்லை. ஆகவே இந்த மொழி பெயர்ப்புக்களை வைத்துக் கொண்டு எங்களுடைய சமுதாயத்தை நோக்கும் போது இவ்வாறான சிக்கல் எழத்தான் செய்கிறது.

ஆயினும் அடிப்படையான சூட்சுமத்தை விளங்கிக் கொண்டால் எவ்வித பிரச்சினையும் எழாது வெள்ளைச்சாமி. இங்கிருப்பது ஒருவரை ஒருவர் சுரண்டி லாபமடைந்து, தனிமனிதப் போக்கில் போட்டி, பொறாமை நிறைந்து, சுயநலம் நிறைந்து, எதிர்காலத்தைப் பற்றி எதுவித பாதுகாப்புமற்ற வறுமை நிறைந்த ஒரு சமுதாய அமைப்பு. இதை மாற்றிச் சுரண்டலற்ற திட்டமான பொருளாதார அமைப்பினை-சமுதாய ஒற்றுமைப் பாட்டையும் வறுமை ஏற்றத்தாழ்வுகள் அற்ற ஒரு அமைப்பை ஏற்படுத்த முனையும் போது பழைய நிலைகளில் ஊறிக் கொழுத்தவர்களும் அவற்றால் லாபம் அடைந்து வருபவர்களும் அவற்றை இலகுவில் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். அவ்வாறான ஒற்றுமைப்பாடு ஏற்படுவதற்குத் தடங்கலாகப் பல சூழ்ச்சிகளில் இறங்குவார்கள்.

இந்நிலையில் சமுதாயம் வர்க்கமாகப் பிரிகிறது. அந்த ஒருமைப்பாட்டை நாங்கள் நிலைநிறுத்தும் போது அது போராட்டமாக மாறுகிறது. இந்நிலையில் நாங்கள் எவ்வாறு முன்னேறிச் செல்லவேண்டுமென்பதையும் எங்கள் எதிரிகள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதையும் அதை எவ்வாறு நாங்கள் முறியடிக்க வேண்டுமென்பதையும் இந் நூல்கள் சித்தரிக்கின்றன. இத்தோடு அந்நூல்கள் விபரிக்கும் சமுதாயப் பின்னணியும் மனதில் வைத்துக் கொண்டால் அவற்றைப் புரிந்து கொள்வது சுலபமாகிவிடும் இதில் சஞ்சலமடைவதற்கு எதுவுமில்லை.

சுமதர்ம சமுதாயம் என்பது எவ்வித சமுதாய அமைப்பையும் மேலிருந்து திணிப்பதல்ல வெள்ளைச்சாமி. அந்த உன்னதமான விஞ்ஞானம் நிறைந்த பொருளாதார சமுதாய ஒற்றுமைப்பாட்டை உழைக்கும் மக்களின் தலைமையில் நாங்களே எங்களுடைய நன்மைக்காக ஏற்படுத்தி நிலைநிறுத்திக் கொள்வது தான் சமதர்ம சமுதாயத்தை அமைக்கும் செயலாகும் என்று அந்த இளைஞன் கூறிவிட்டு அங்கிருந்து எழுந்து இருவரும் இறங்குவதற்காக வந்தனர். பொருட்களைக் குமார், சரவணன், தேவன் மூவரும் வள்ளத்தில் இறக்கி அடுக்கிவிட்டு மேலே வந்திருந்தனர். குமார் கடைசியாக எல்லா இடமும் நோட்டம்விட்டு ஏதும் தவறவிடப்பட்டிருக்கிறதா என்பதையும் பார்த்துக் கொண்டான். இளைஞர்கள் கரை சேர்வதற்காகக் க்பலை விட்டு இறங்குவதற்குத் தயாரானார்கள்.



ஏதோ திடீரென்று தீர்மானித்தவன் போல் சரவணன் கால் சட்டையிலிருந்து ஒரு சிறு வில்லுக்கத்தியை எடுத்து விரித்தான். அவனை மற்றவர்கள் அவதானித்துக் கொண்டு நின்றனர். அவன் துடிப்பது தெரிந்தது. சற்றும் எதிர்பாராத வகையில் ஆள்காட்டி விரலில் கத்தியை வைத்து ஒரு இழுவை அழுத்தான். இரத்தம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

அங்கிருந்த வெள்ளை இரும்புக் கவரில் எழுதினான். "ஈழ விடுதலைப்" எழுத்துக்கள் வந்தன. அடுத்ததாகப் "பு" என்ற எழுத்தை எழுதினான் அடுத்ததாக 'ல' வை எழுதுவது போல் முதலில் ஒரு சுழியைப் போட்டான். இதுவரைக்கும் அவனைப் பார்த்துக் கொண்டிருந்த இளைஞன் அவனது மணிக்கட்டை எட்டிப் பிடித்தான். சரவணனும் கையை விடுவிக்க முயற்சித்தான். மற்றவர்கள் பார்த்துக் கொண்டு நின்றனர். தனது கையை மேல் பக்கமாக மடக்கித் திருகி விடுவிக்கப் பார்த்தான். அவனுடைய விரலிலிருந்து வெளிப்பட்ட இரத்தம் ஓடி முழங்கையால் வடிந்தது. "நான் உனக்கு உதவி செய்கிறேன் எழுதுவதற்கு" என்று இளைஞன் தாழ்மையாகக் கூறினான். சரவணன் ஏற்றுக் கொண்டவன் போலச் "சரி" என்றான் இளைஞன் மணிக்கட்டிலிருந்த பிடியைத் தளர்த்திச் சற்று மேலாக விரல்களையும் சேர்த்துப் பிடித்தான். சரவணன் ஆட்காட்டி விரலை நீட்டிக் கொண்டான். அந்தச் சுழியை மற்ற கையால் அழித்து விட்டுச் சரவணனுடைய கையைப் பிடித்துக் கொண்டு பு-ர-ட்-சி-வா-தி-க-ள் என்ற எழுத்துக்களை எழுதிவிட்டான்.

"ஈழவிடுதலைப் புரட்சிவாதிகள்' என்று எழுதப்பட்டிருந்தது. அங்கு எழுதப்பட்டிருந்த ஒவ்வொரு எழுத்துக்களிலிருந்தும் இரத்தம் துளிகளாகக் கீழே வடிந்து கொண்டிருந்தது. நேரம் ஆகிவிட்டது.இளைஞர்கள் தாங்கள் கொண்டு வந்திருந்த பெட்டிகளுடன் கீழே இறங்கினர். சரவணனை வேட்டியுடன் இருந்த இளைஞன் அரவணைத்தபடியே இருவரும் இறங்கினர். "நீ எதற்கும் முதலில் பண்ணைக்கு வா" என்பதே சரவணனுக்கு இளைஞனின் ஒரே வேண்டுகோளாக இருந்தது.

எல்லோரும் ஏறிக் கொண்ட பின் இயந்திரப் படகு புறப்பட்டது. அது ஒரு மீன்பிடிப் படகு. வலைகள் மத்தியில் நிரப்பி வைக்கப்பட்டிருந்தது. நடுவில் வேட்டியுடன் இருந்த இளைஞனும் ஒரு பக்கத்தில் குமாரும் மறுபக்கத்தில் சரவணனும் இருந்தனர். இருவர் படகைச் செலுத்தினர். ஒருவர் இயந்திரக் கூட்டின் மற்றப் பக்கமாக நின்று சுக்கானைப் பிடித்துக் கொண்டு நின்றார். அதற்கு முன் வலைகளுக்கு அப்பால் மற்ற மீனவ இளைஞன் நின்று கொண்டிருந்தான்.

குமார் யாழ்ப்பாணம் நிகழ்ச்சிகளைப் பற்றிக் கேட்டதும் அந்த மீனவ இளைஞன் யாழ்ப்பாணத்தில் ஒரு சிங்களவர் கூடத்தாக்கப்படவில்லை என்றும் எல்லோரையும் பாதுகாப்பாக அனுப்பி விட்டார்கள் என்றும் கூறினான். பாராளுமன்ற எதிர்க் கட்சித் தலைவரும் தமிழர் கூட்டணித் தலைவருமான அமிர்தலிங்கத்தை எவ்வாறு பொலிஸார் தாக்கினார்கள் என்பதை விவரித்தான். இளைஞர்கள் திருகோணமலையைப் பற்றிக் கூறவே அங்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் காடையர்களுடன் சேர்ந்து தாக்கிப் பல தமிழர்கள் இறந்திருப்பதாகச் செய்தி கிடைத்திருப்பதாகக் கூறினான். இயந்திரத்தில் இருந்து வந்த சத்தம் அவனுடைய பேச்சைக் கேட்க விடாமல் செய்யவே அவன் உரத்துக் கத்தி எல்லாவற்றையும் விவரித்தான். அவனுடைய கண்கள் சிவந்து கழுத்து நரம்புகள் புடைத்துப் போய் நின்றன.

முல்லைத்தீவிலிருந்து திருகோணமலைக்கு வள்ளங்களில் சரக்குகள் கொண்டு போகிறார்கள் என்றும் கூறினான். வேட்டியுடன் இருந்த இளைஞன் வெள்ளைச்சாமியைத் திரும்பிப் பார்த்தான். அடுத்ததாகச் சரவணனைப் பார்த்துக் கொண்டு "நாங்கள் எப்படியாவது இன்றைக்கே அங்கு போவதற்குப் புறப்படவேண்டும்" என்றான்.

படகு கரைக்குச் சமீபமாக வந்திருந்தது.

*************

முற்றும்.

"தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாண் என்ன முழமென்ன" என்ற மாதிரி நவநாகரிகம் தலைவிரித்தாடேக்க சமூகச்சீர் திருத்தம் பற்றி நாங்கள் சொல்ல, கண்ட பாவனையில் கொண்டை முடிமிறவை ஓமாமே? சாத்தான் வேதம் ஓதேக்க, கலி புருஷன் ஒழுக்கம் கற்பிக்கேக்க சீர் திருத் தம் பற்றி என்னத்தைச் சொல்ல, எதைச் செய்ய?" என்று சண்முகநாதன் பண்டிதர் மனம் சலித்துச் சொல்ல, கொழும்பான் ஆரோக்கியநாதனும் அமரசிங்கம் நொத் தாரிசும், கிராம உத்தியோகத்தர் சுப்பிர மணிய தேசியரும் பண்டிதரின் சோர்வைக் கண்டு யோசிக்க, "இப்ப உலகம் சுருங்கி, ஒன்று பட்டு, நாகரிகத்தின் உச்சிக்கே போகப் போகுது பண்டிதர் ஆறுமுகநாவலர் காலத்தில் நின்று பார்க்கிறார்!" என்று தனது அபிப்பிராயத்தை பளிச்சென்று கூறி னார் ஆரோக்கியநாதர்.

கலாசாரத்தில் எத்தனை அழிந்துபோய் இருக்கும், எத்தனை இறக்குமதியாய் இருக்கும். எங்களின் நிச்சயதாம்பூலம் அருக, திருமணப்பதிவு முறை வந்து விட்டது. பிறந்த நட்சத்திரத்திற்கு கோயில் வழிபாடு செய்தவர்கள் பிறந்த நாள் கொண்டாட்டம் கொண்டாடுகின்றார்கள். பசுவதை எல்லாம் கலாசாரத்தில் புகுந்து விட்டன" என்றார் சன்முகநாதன்.

"எத்தனை சொல்வழக்கு வந்து விட் டன, உடைநடை பாவனைகள் மாறி ஐரோப்பிய பாணிகள் வந்து விட்டன. என்னதான் வந்தாலும் எங்களின் பெறுமதி மிக்க விழுமியங்கள் மறைந்து அல்லது


குளறுபடி. அந்த மனிசனுக்கு ஒரு கலா சாரம் என்பது கஷ்டம். ஒவ்வொரு பிள் ளையும் வேறு வேறு சமயத்திலும், இனத் திலும் செய்திருக்குதுகள். அவருடைய குடும்பம் ஒரு குட்டி ஸ்ரீலங்கா. நான் அது தான் சில விடயங்களை பேசவில்லை. உந்த நிலை எங்கடை ஊருக்கு வரவிடக் கூடாது. தில்லைநாயகம் பிள்ளைகளை நினைத்துத்தான் வளர்த்தவர். சம்பந்த பகுதிகளும் நல்ல நடைத்தை உள்ள பகுதி

"ஆனால் இந்த உடுப்பு முந்தின அரைப்பாவாடையை விட நல்லது. என் னெண்டால் என்ன அது பிறத்திதானே அதை ஒருவரும் உணர்வதாய் இல்லை. சிலர் அதிலும் ரொப் என்று சொல்கிற மேல் கவுணை சிறிதாயும் இறுக்கமாயும் போடினை. நாய்க்கு நடுக்கடலுக்கு போனா லும் நக்கு தண்ணிதானே!" என்றார் அமரசிங்கம்.

"நாங்கள் காற்சட்டை போட்டுக்கொண்டு மற்றவையை குறை சொல்லக் கூடாது. இயன்றவரையிலை எமது கலாசார உடை களை அணிய வேணும். எமது அடை யாளங்களை இழந்து விடக்கூடாது. எல் லோரும் பிழை விட்டாச்சு. இனியாவது

# நாகரிகமும் சமூகச்சீர்கேடும்

பாலா



"நல்ல நாகரிகம்தான். எனது ஆரம்ப காலத்தில் இப்படி இல்லை, இதென்ன நாளாந்தம் பாலியல் தொந்தரவு என்று எனக்கும் பொலிசுக்கும் முறைப்பாடு எத் தனை என்பது உங்களுக்கு தெரியாது. சிசுக்கொலை எமது பிரதேசசெயலர்பிரிவில் மட்டும் சென்ற வருடம் நாலு, இந்தவரு டம் வைகாசிவரை மூன்று, ஆரோக்கிநாத் ஐயா இது தான் உங்கள் நாகரிகத்தின் முன்னேற்றமோ? என்றார் தேசிகர். "கரு கலைப்பு வெளிநாடுகளில் சர்வசாதாரணம்" என்றார் ஆரோக்கியநாதன் எந்தவித கூச்சமும் இல்லாது.

"நாங்கள் கதைக்கிறது சிவபூமி இலங்கையை பற்றியாக்கும்" என்றார் நொத்தாரிஸ் சற்று ஏளனமாக.

உணர்ந்து திருந்தி நடப்போம் என நடக்க வேண்டும்" என்றார் சண்முகநாதன்.

"சிலர் நாகரிகம் எது என்று தெரியாது பரீஸ், லண்டனிலை என்ன நடக்குதோ அது எல்லாம் நாகரிகம் என்று அதைக் கைக்கொள்கின்ற மடைமையை, அடிமைத் தன்மையை என்னென்று சொல்வது. மது மாது எல்லா பிழைகளையும் தவிர்க்க இளம் சமுதாயத்திற்கு படுகிற மாதிரி சொன்னால் ஏற்பினை" என்றார் தேசிகர்.

"இப்ப கோமாமிசம் சிலபேருக்கு பிடித்த பொருளாய் போச்சுது. பாமுவும், பொடியும் முந்தி பசுமாடு வைத்து சீவியம் நடத்தியதுகள். இப்ப வெளிநாட்டிற்குப் போய்வந்து வீட்டிலை ஒரே மாட்டு இறைச்சியும், நெத்தலி மீனும் தானாம். அவர் ஒவ்வொரு நாளும் அதை சாப்பிட்டு வந்துதான் கோவிலிலை வேலை பாக் கிறவர். கடைசியிலை அவாக்கு கான்சர். அவருக்கு உடம்பு அழுகியல்லோ செத் தவை. உதை ஐயர் எப்பவோ எனக்கு சொன்னவர். நான் அவருக்குச் சொன்னான் உவர் இப்பிடி சாப்பிட்டுபோட்டு ஒரு பயம் இல்லாது உள்ளுக்கு வாறார் என்று. அவர் மூலஸ்தானத்தைக் காட்டி எல்லாம் அவர் அறிவர் கடைசியிலை பாரும் அழுகி ஊத்தும் என்றார். இப்ப இது சரியாய் போச்சுதெல்லே" என்றார் பண்டிதர்.

"நவநாகரிகம் உச்சத்திற்கு போட்டுது என்றார் ஆரோக்கியநாதன். பள்ளி பிள் ளைகள் போதைவஸ்து பாவனைக்கு ஆளகி இருக்கிறார்கள். இது தான் நாகரிகத்தின் உச்சியோ? இது எவ்வளவு ஆபத்தானது. சமுதாயத்திற்கு இதெல்லாம் நஞ்சாய் போகும். இளம் சமுதாயத்தை கருக்கிற வேலையல்லோ? குடிவகை இப்போ வெகுத்து போச்சு ரோட்டு கரையெல்லாம் வெறும் போத்தல்கள். இதை உபயோ கித்து விட்டு பாலியல் விவகாரங்களிலும், களவுகளிலும் ஈடுபட்டு சீரழிவதுதானே. இந்தியாவிலை பெண்கள் கூட விற்பனை யாகும் இடத்திற்கு போய் குடிக்குதுகளாம். என்ன விபரீதம். இதை கட்டுப்படுத்தா விட்டால் பெரும் சீரழிவுகள் நடைபெறும். இளைஞரும் ஒருவரை ஒருவர் பார்த்து கெட்டுப் போக வழியுண்டு" என்றார் அமரசிங்கம்.

"பாலியல் குற்றங்கள் பெருகுகின்றன. சிறுமியர் பலர் இதற்கு ஆளாகி கொலை கூட செய்யப்பட்டுள்ளனர். இதற்கு சினிமாக் கள், பாலியல் படங்களும் போதைப் பொரு ளும் காரணமாய் இருக்கலாம். பெண்க ளும் கொஞ்சம் பாதுகாப்பாய் நடந்துகொள் வது அவசியம். எல்லோரும் இவற்றை தடுக்க முயலவேண்டும். எமது நல்ல கலாசார விழுமியங்களை பாதுகாத்து, வரும் சந்ததிக்கு அளிக்கவேண்டும்" என்று சண்முகநாதன் கூறிக்கொண்டு வீடு செல்ல எழுந்தார்.

"அதைவிட இது சிசுக்கொலை எவ்வளவு பாவம்" என்றார் தேசிகர். "கருகலைப்பை சமூகம் ஏற்றால் உது மாதிரி நடக்காது. எல்லாம் வறட்டு வேதாந்த போக்கு" என்றார் ஆரோக் கியநாதன் சுத்தமான மேல்நாட்டுக்காரன் மாதிரி.

"ஆரோக்கியநாதன்! இதற்கு நானோ நீரோ காரணமில்லை. வரலாறு உம்மை ஒரு விதமாகவும் என்னை வேறு வித மாகவும் பாதித்து உள்ளது அதுதான் எனக்கும் உமக்குமுள்ள முரண்பாட்டிற்கு காரணம். உமது குடும்பம் மிகவும் கலா சார மாறுபாடுகளுக்கு உட்பட்டு குழம்பி உள்ளது. எனது குடும்பம் அந்நியர் ஆதிக்கத்திற்கு ஆளாகியும் பழைய சில விழுமியங்களை இன்னமும் கடைப்பிடிக் கின்றது. அதுதான் உண்மை" என்றார் சன்முகநாதன் பண்டிதர்.

"உதாரணமாக அந்நியர் வருகைக்கு முன்பு எமது தமிழ் நாகரிகம் எந்தவித பாதிப்பும் இல்லாது இருந்திருக்கும். அவர்கள் வருகைக்கு பின்பு பயம், விருப்பு போன்ற காரணங்களால் சமயம் மாறியபடியால் ஒரு மிக்சர் (கலப்பு) தன்மை ஏற்பட்டு கலாசாரம் குழம்ப நிலையை அடைந்திருக்கும். பல சமய, இன சம் பந்தத்தால் பெரிய பாதிப்பு ஏற்பட்டு விட் டது. இது ஒரு சமுதாய நியதி." என்றார் தேசிகர்.

"போத்துக்கீசரின் ஆட்சி, ஒல்லாந்தரின் ஆட்சியில் அரைவாசிக்கு மேல் அடக்கு முறைதான் கிட்டத்தட்ட நூற்றி ஐம்பது அறுபது வருடங்களுக்கு மேல் எமது

மருவி, சுயத்தன்மை கெட்டு வேறுவித மாக திரிபு பெற்று விட்டதை காணக் கூடியதாக உள்ளது. இப்போ ஐம்பது வருடங்களுக்கு முன்பு இருந்த சமய சம்பிரதாயங்களை இன்றைக்கு காண முடியாது உள்ளது. எமது நீண்ட போரும் இந்த நிலமைக்கு ஒரு கார ணம்." என்றார் அமரசிங்கம்.

"ஏன் அதிகம் தூரம் போவான். இந்த விழாவே புதுமைக்கு ஒரு எடுத்துக் காட்டு. இந்த மண்டப விழாக்கள் எல்லாம் புது விடயங்கள் தானே எமக்கு. சாப்பாடு வேறு இடத்தில் இருந்துவருகின்றது. முந்தின ஆட்கள் சிலர் இப்படியென்றால் சாப்பிடமாட்டார்கள். எல்லாம் கால மாற்றம் தானே? உறவுகள் மிகக்குறைவு. முன்பு எங்களை ஊரிலை எவ்வளவு உறவினர் எல்லாம் போரோட இடம்மாறி திசைமாறி போய் விட்டுதுகள். யார் சமைக்கிறது? யார் பரிமாறுகிறது? இன்னும் என்ன என்னவெல்லாம் வருமோ கடவுளுக்கு தான் வெளிச்சம்." என்று சுப்பிரமணியம் சொல்லி முடிக்க ஒரு இளைஞன் இவர் களை நோக்கி வந்து ஆரோக்கிய நாத னைப் பார்த்து "போவோமோ" என்றான். இது எனது பேரமகன் என்னை ஸ்ரேச னிலை ரொப்பண்ண வந்தவர்" என்று கூறிக்கொண்டு அவரும் போனார்.

"இது தில்லைநாயகத்தின் மகனல்லோ?" என்றார் பண்டிதர் சண்முகநாதன். தமயன் எவ்வளவு சமயவாதியும் சைவப்பழமும் தம்பி என்ன இனம், சமயம் என்று சொல்ல முடியாது கலவனாக இருக்கின்றார். யாரை யார் குறை சொல்வது எல்லாம் காலத்தின்

கள் தான். எங்கடை கலாசாரம் இல்லை யென்றால் பிறகு நாங்கள் இல்லை." என்று மேலும் அவர் சொன்னார்.

"ஐயா! நாங்கள் சாதி பற்றி பேச வில்லை, தமிழ் கலாசாரம் அழிய விடக் கூடாது என்பதே எமது நோக்கம். எமது பெற்றார் மாதிரிதான் எமது இனம், மொழி, சமயம் எல்லாம். இப்பவே காலப்போக்கில் நாம் அனேக கலாசார விழுமியங்களை இழந்தோ, மறந்தோ விட்டோம் இருக்கிற தையாகிலும் பாதுகாத்து அடுத்த சந்த திக்கு கொடுக்க வேண்டாமோ? என்றார் சுப்பிமணிய தேசிகர்.

இதை நினைக்க எனக்கு சிரிப்புத் தான் வரும். நான் ஏழு, எட்டு வயதாய் இருக்கும்போது கல்கி, ஆனந்த விகடன், ஆகியவை அப்பா எடுக்கிறவர். நான் அதை எடுத்து பார்க்கிறனான். உந்த சல்வார் பஞ்சாபி உடையை பார்த்து அதி சயப்படுகிறனான். இப்ப எனது இளையவள், பேரப்பிள்ளைகள் அதை போட்டுக் கொண்டு திரியுதுகள். தமிழ் பேசிற பஞ்சாபியள் என்றும் ஆரும் சொன்னாலும் சொல்லு வாங்கள். எங்கடை பாவாடை தாவணி எல்லாத்துக்கும் வெளிநாட்டிலை இடம் கிடைத்திருக்கு, அண்டைக்கு ஒரு நாள் பேத்தி பேஸ்புக்கிலை காட்டினாள். ஹரே கிருஸ்ணா இயக்க வெள்ளைக்கார பெண் பிள்ளைகள் பாவாடை தாவணியோடு கிருஸ்ணா கரே கிருஸ்ணா என்று படிப் பாடி இஸ்ரேவல் கடற்கரைப் பட்டினம் ஒன்றிலை ஆடுதுகள். இது என்ன கோலமோ தெரியவில்லை" என்றார் சண் முகநாதன் பண்டிதர்.


# இந்து தர்மத்தில் பத்து

## இந்து தர்மத்தில் எட்டு

எட்டு என்றவுடன் உங்கள் முகம் சற்று மாறுபடுவது தெரிகிறது. ஏன் என்றால் நீங்கள் அனேகமாக வெறுக்கின்ற அட்டமி எண் சோதிடத்தில் எண் எட்டிற்கு சொல்லப்பட்ட செய்திகள் அட்டமத்துச் சனி செய்யும் வேலை என்றெல்லாம் உங்கள் மனதை சஞ்சலப்படுத்துவது போன்றவையே தெரியும். அதை மட்டும் நீங்கள் நினைக்கப்படாது. ஏனெனில் எட்டு சமய இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் நல்லதாகவே சொல்லப்படுகின்றது. எண் குணத்தான் தாளை வணங்காத் தலை என்றும் சொல்லப்படுகிறதே. இதிலே எண் குணத்தான் என்று சொல்லப்படுபவர் இறைவனே. இவர் எண் குணங்களாகிய தன் வயத்தனாய், தூய உடம்பினனாய், இயற்கை உணர்வினனாய், முற்றும் உணர்ந்தவனாய், பாசங்களில் நின்று நீங்கியவனாய், எங்களுக்கு என்றும் அருள் செய்வான்.

ஓர் ஆலயத்தில் மகா கும்பாபிசேகம் நடைபெறும் பொழுது அட்ட மூர்த்தங்களை வேண்டி ஆச்சாரியர்கள் மந்திரங்களை ஓதுவார்கள். அட்ட மூர்த்தங்களாவன நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகியவை. ஊலகின் கண்ணே எட்டுத்திக்குகள் உள்ளன. அந்த எட்டுத் திக்கிற்கும் எட்டுப்பாலகர்களாக இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகியோர் இருக்கின்றனர். இதுபற்றி வேதங்களிலே சொல்லப்பட்டுள்ளது. இவர்கள் எட்டுத் திக்கிலும் இருந்து உலகைக் காப்பாற்றுவார்கள். இதே வேளை எட்டுத் திக்கிற்கும் எட்டு யானைகளாக ஐராவதம் புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புற்பதந்திரம், சர்வவௌமம், சுப்பிரதீபம் ஆகியன.

இனி மங்களத்தில் எட்டு வரும் இடங்களைப் பார்ப்போம். மங்களப் பொருட்கள்



எட்டு வகைப்படும். அவைகள் குறிப்பாக விளக்கு, கௌரி, கண்ணாடி, தோட்டி, இணைக்கப்பல், முரசு, நிறைகுடம், கொடி என்பனவாகும். நீங்கள் திருமணம், புதுமனை புகுவிழா மற்றும் வரவேற்புக்கள் போன்ற மங்கள வைபவங்களில் இந்த அட்ட மங்களப் பொருட்கள் கையாளப்படுகின்றன. பண்டைய தமிழ் அரசர்கள் ஒவ்வொரு நிகழ்வின் போதும் ஒவ்வொரு வகைப் பூமாலைகளை அணிவது வழக்கம். குறிப்பாகச் சொன்னால் வெட்சி, கரத்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உமிஞை, தும்பை ஆகிய எட்டு வகை மலர்களை கொண்ட மாலைகளையே அணிவர். இவ்வுலகில் நாங்கள் காணும் திருமணங்கள் இரண்டு வகைப்படும். ஆனால் ஆசார சாஸ்திரத்தில் எட்டுவகை திருமணம் பற்றி சொல்லப்படுகிறது. அத் திருமணங்களாக பிரம்மம், பிரசாமத்தியம், ஆருடம், தெய்வம், காந்தரூபம், அசுரம், ராக்கதம், பைசாசம் என வகைப்படும். இதே வேளை மனிதன் எட்டு வகைச்சித்திகளை சாதிப்பான். அதுவே அட்டமா சித்தியாகும். அவை முறையே அனு, பெரிது, பாரம், இலேசு, நினைத்துவிடல், செல்லுதல், விரும்பியதைப் பெறுதல், சிருஷ்டி என்பனவாகும்.

கோயிலிலே இறைவிக்கிரகத்தை அஷ்டபந்தனத்தால் பீடத்துடன் ஒட்ட வைப்பார்கள். இதனை மருந்து சாத்துதல் என்றும் சொல்வார்கள். அஷ்டபந்தனத்துக்குரிய பொருளாக எட்டுவகைத் திரவியங்களைச் சொல்வர். அவையாவன சுக்கான்கல், குங்கிலியம், கொம்பாக்கு, தேன்மெழுகு, நாற்காலி, செம்பஞ்சு, சாதிலிங்கம், எருமைநெய் என்பனவே. இனி எட்டு வகை ஐஸ்வர்யங்கள் எமக்கு கிடைப்பதற்கு எட்டு லட்சுமிகளை வழிபட வேண்டும். அந்த எட்டு லட்சுமிகளையும் அஷ்ட லக்சுமிகள் என்பர்.

கோயிலிலே ஆண்கள் வழிபாடு செய்வார்கள் அல்லவா? (இப்போதெல்லாம் நிறை நிலையில் வணங்கிவிட்டுப் போகிறார்கள்). ஆனால் ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமாய் வழிபடுவதே சிறந்தது ஆகும். அதாவது எட்டு அங்கங்கள் நிலத்தில் படும்படியாக வணங்குவதாகும். எட்டு மலர்கள் இறைவனை வணங்க இட்டுக் கொள்வார்கள்.

சோதிடப் பக்கம் எட்டைப் பார்ப்போம். ஒருவருடைய சாதகத்தில் எட்டாமிடத்தில் செவ்வாய் இருந்தால் பாவக்கிரகம் என்று சொல்வர். இவர்களுக்கு திருமணம் நடப்பதில் தாமதங்கள் ஏற்படும். ஒருவருக்கு அட்டமத்தில் சனி என்று இருந்தால் அந்தக்காலத்தில் உடலின் எட்டாமிடமான காலில் முறிவோ, காயமோ ஏற்படும். இவற்றைவிட சனிப் பார்வை உள்ளவர்களுக்கு காலில் தீராத நோயோ வாதமோ ஏற்படும். வளர்பிறையிலோ தேய்பிறையிலோ எட்டாம் நாள் அட்டமித் திதியாகும். இந்த அட்டமித்திதியில் கண்ணன் உதித்தான் என்று சொல்லப்படுகின்றது. சனி நல்லதையும் செய்யும் கெட்டதையும் செய்யும் என்பார்கள்.

எண்சோதிடத்தில் எண் எட்டுக்காரர்களை பிற எண் எட்டுக்காரர் சார்ந்தனின் வண்ணமாக இருப்பவர்கள். நல்லவர்களுடன் இணைந்திருந்தால் மிக நல்லவர்களாகவும் அதாவது உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பார்கள். கெட்டவர்களுடன் சேர்ந்தால் அடிமட்டத்தில் மற்றவர்கள் படிக்கும் வண்ணம் இருப்பார்கள்.

இந்து தர்மத்துடன் தொடர்புடைய இமயம், மந்தரம், கைலை, விரதம், நிடதம், எமகூடம், நிலம், கந்தமாதனம் ஆகிய எட்டு மலைகள் இருக்கின்றன. இம் மலைகள் பற்றி எங்கள் சமய நூல்களிலே நிறைய வருகின்றன. எனவே கைலைமலை வாசனாகிய இறைவனை தினமும் நாம் துதிப்போமானால் அஷ்டலட்சுமிகரமும் எம்மை வந்து சேரும்.

கவிஞர் துரையர்



# ஏன் வந்தார் போர்க்குற்ற விவகார நிபுணர்?

## அமெரிக்கத் தூதரகம் விளக்கி அறிக்கை

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பூகோள குற்றவியல் நீதிக்கான பணியகத்தின் சிறப்பு ஒருங்கிணைப்பாளர், ரொட் புச்வால்ட் மற்றும், தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதி உதவிச் செயலர் மன்பிரீத் ஆனந்த் ஆகியோர் இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பாக, அமெரிக்கத் தூதரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.





இந்த இக்கட்டான தருணத்தில், அரசியலமைப்பு சீர்திருத்தம், மற்றும் அமைதியான, செழிப்பான, நல்லிணக்கமான எதிர்காலத்தை உருவாக்க, இலங்கை மக்களின் ஆதரவை அமெரிக்கா கோருவதாக, அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வந்திருந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மூத்த அதிகாரிகளான, ரொட் புச்வால்ட் மற்றும், மன்பிரீத் ஆனந்த் ஆகியோர், நல்லிணக்கம் தொடர்பாக இலங்கையில் பல்வேறு தரப்பினரினதும் கருத்துக்களைக் கேட்டறிந்தனர்.

இது அடுத்து வரும் ஆண்டுகளில், இலங்கைக்கான அமெரிக்காவின் உதவிகள் மற்றும் கொள்கையை வடிவமைப்பதற்கு உதவியாக அமையும் என்றும் அதுல் கெசாப் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் இலங்கை அரசாங்க மற்றும் அரசியல் தலைவர்களையும், நாடெங்கும் உள்ள சிவில் சமூக பிரதிநிதிகளையும் சந்தித்து நல்லிணக்கம் தொடர்பான கருத்துக்களைக் கேட்டறிந்தனர்.

நல்லிணக்க விவகாரங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக சிறிலங்கா வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடிய ரொட் புச்வால்ட், வடக்கு மாகாண ஆளுனரையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனையும், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனையும், சந்தித்து விபரங்களை கேட்டறிந்தார்.

அத்துடன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்த இவர்கள், நல்லிணக்கத்துக்கான சவால்கள், வடக்கின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

கிழக்கு மாகாண ஆளுனர் ஒஸ்ரின் பெர்னான்டோவையும் சந்தித்த இவர்கள், யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி ஆகிய பகுதிகளுக்கும் சென்று பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடியிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில், இளைஞர்கள், மாணவர்கள், உள்ளூர் அதிகாரிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் புச்வால்ட் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்தப் பயணம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ரொட் புச்வால்ட், “ இலங்கையின் இன்றைய நிலைமைகள் தொடர்பாக பல்வேறு தரப்புகளினதும் குரல்களை கேட்டறிந்து கொள்வதற்கான பயனுள்ள பயணமாக இது அமைந்தது,

இலங்கையில் பல இடங்களுக்கும் சென்றதன் மூலம், முன்னேற்றங்களையும், இன்னமும் உள்ள சவால்களையும் அறிந்து கொள்ள முடிந்தது” என்று குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய சேதங்கள்

யாழ்ப்பாணத்து அருங்காட்சியகமானது மிகவும் ஏழ்மையான நிலையில் பல விலை மதிக்கமுடியாத பொருட்கள் யாவும் புறக்கணிக்கப்பட்டு பராமரிப்பின்றி உள்ளது. எவருமே முன்வந்து நமது சரித்திர ஆவணங்களை பாதுகாக்கவோ அவற்றை விலையேறப் பெற்றதாக காண்பிக்கவோ ஆர்வம் காட்டவில்லை. ஆனால் தம்ப கொலபட்டுன, நாகதீப விகாரை கந்தரோடை என இத்தகைய இடங்கள் யாவும் பழுதுபார்க்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டு இராணுவங்களினால் பாதுகாக்கப்பட்டும் வருகின்றது.

ஆனால் நம் சரித்திர ஆவணங்களோ மற்றும் இடங்களோ பலர் மத்தியில் புறக்கணிக்கப்பட்டு நம் சரித்திர தடயங்கள் யாவும் வருங்காலங்களில் அழிந்துபோகும் அபாயம் உள்ளது என யாழ்ப்பாண இராசதானியின் சக்கரவர்த்தி ராஜா றெமிஜியஸ் கனகராஜா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பலர் அமைச்சர்களாக பதவிக்கு வருமுன் பல வாக்குறுதிகளை வழங்குவார்கள். பின் பதவிக்கு வந்தவுடன் கொடுத்த வாக்குறுதிகளை பொருட்படுத்தாது விட்டுவிடுவார்கள். பதவியில் இருக்கும் பல தமிழ் அரசியல் அதிகாரிகளும் பல தமிழ் கல்வித் துறைகளில் உள்ள அதிகாரிகளும் இவையாவற்றிலும் எவ்வித ஆர்வமும் காட்டுவதில்லை.

இன்று யாழ்ப்பாண வட்டரத்து சைவ கோவில்கள் நீதிமன்றத்தில் பல வழக்குகள் சம்பந்தமாக பதிவாகியுள்ளது. இவையாவும் சீக்கிரத்தில் முடிவுக்கு வரவேண்டும் என விரும்புகிறேன். எல்லா சைவ கோவில்களும் தங்கள் பழைய அனுதின நிலைக்கு திரும்பி தமது முக்கிய இடத்தை சிவத்திற்கு கொடுக்க வேண்டும். நீங்கள் யாவரும் யாழ்ப்பாணத்து அரசர் ஆரிய சக்கரவர்த்திகளின் காலங்களில் எவ்வண்ணம் இயங்கி வந்தீர்களோ அவ்வண்ணம் சிவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து உங்கள் பழைய நிலைக்கு வர வேண்டும் என்பதே என் ராஜ உத்தரவு!

நம் தமிழ் வரலாற்று வளத்தைக் குறித்து நான் மிகவும் வருத்தத்துடன் உள்ளேன். யாழ்ப்பாணத்திற்கூட அனேகர் தங்கள் சொந்த வரலாற்றினை அறியாது உள்ளனர். கல்வி சாலைகளிலும் 1948 ஆம் ஆண்டிற்கு பின்னர் நிகழ்ந்தவற்றையே கற்றுக்கொடுக்கின்றனர். அவற்றிற்கு முன் நிகழ்ந்த தமிழ் வரலாறுகளை அவர்கள் கற்றுக்கொடுக்க அலட் சியமாக உள்ளனர்.

அதுமட்டுமல்லாது இன்று வாழும் நம் இளைய சமுதாயத்தினரும் தங்கள் சொந்த வரலாற்றினை அறியாது தங்கள் சொந்த தாய் மொழியையும் பேசாது உள்ளனர். இதற்கு பல வகையில் அவர்களது பெற்றோர்களும் காரணமாக உள்ளனர். ஏனெனில் தங்கள் பிள்ளைகளுக்கு அவர்கள் தமிழ் வரலாற்றில் உள்ள பெருமைகளை சொல்லிக் கொடுக்கத் தவறிவிட்டார்கள். நாம் இவ் வண்ணம் கவனக் குறைவின்றி இருப்போமேயானால் தமிழ்மொழி யும் அதிகம் பேசப்படாது தமிழ்மொழி அமிந்து போகும் அபாயம் உள்ளது. மேலும் பல மக்கள் சமூக வலைத்தளங்களில் தமிழ் அரசியல்வாதிகளை குறித்துகுறை கூறி எழுதுவதும் பதிவதுமாக உள்ளனர். இவ்வாறாக செய்வதைக் காட்டிலும் யாழ்ப்பாணத்தைக் குறித்த வளமான சரித்திரங்களை மற்றும் யாழ்ப்பாணத்து கலாசாரங்களை பண்பாடுகளை என நல்ல அறிவுபூர்வமான தகவல்களை போட்டால் அவை அனேகர்களுக்கு பயனுடையதாக இருக்கும்.



எமது சரித்திர ஆவணங்களை பாதுகாக்க தவறுவோமேயானால் இவையாவும் பிற்காலங்களில் ஆதாரங்கள் இல்லாது இன்றைய நாட்களில் எவ்வண்ணம் பல இடங்களின் பெயர்கள் மாற்றப்பட்டு வருகிறதோ அவ்வண்ணம் யாழ்ப்பாணமும் பெயர் மாற்றப்பட்டு ஒரு சிங்கள பட்டணடமாக மாறுவதற்கு வாய்ப்புண்டு. நாம் எக்காலமும் நடந்த யுத்தத்தை குறித்து இனி பேசாது வடக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களை ஓர் அழகான சுற்றுலா தளங்களாக மாற்றியமைப்பது நன்மையாக அமையும்.

எம் முன்னோர்களான யாழ்ப்பாணத்து அரசர் ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தில் நாட்டு நட்பை ஆராய்ந்து அறிந்து செயற்படுவதைப் போன்று இம் முறை நான் என் அரச குடும்பத்திலிருந்து எனது பிரதிநிதி இலங்கைக்கு விஜயம் செய்த நாட்களில் யாழ்ப்பாணத்து நடவடிக்கைகள் யாவையும் அவர்கள் பார்வையிட்டு எனக்கு அறிவித்தார்கள். எனவே நான் யாழ்ப்பாணத்து தற்போதைய நிலையைக் குறித்து நன்கு அறிந்திருக்கின்றேன்.

ஆகையால் என் தமிழ் மக்கள் அனைவரிடம் நான் விரும்புவது யாதெனில் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் முன்வந்து தங்கள் கரங்களை இணைத்து நமது வளமான பாராம்பரிய ஆவணங்களை பாதுகாக்க முன்வர வேண்டும் என்பதே.

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# பௌத்த சிங்களம் ...

அதுமாத்திரமன்றி, நயினாதீவு வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், "இந்தச் சிலை அமைப்பதனால் தமக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை எனவும், புத்தர் சிலை அமைக்கப் பூரண ஆதரவு வழங்குவோம்" எனவும் எழுத்து மூலம் கடிதம் அனுப்பியுள்ளனர்.

அதேபோல், கடற்றொழில் நீரியல் வளத்துறை யாழ் மாவட்ட இயக்கங்களும் இவ்வாறு புத்தர் சிலை அமைப்பதில் தங்களுக்கு எவ்விதமான ஆட்சேபனையும் இல்லை என அறிவித்துள்ளது.

ஆனால் அண்மையில் யாழ் மாவட்டச் செயலாளர் என்.வேதநாயகன் அவர்கள் அனுப்பிய கடிதம் சிறிது மன வருத்தத்தைத் தருகின்றது.

அந்தக் கடிதத்தில் இந்தப் புத்தர் சிலை அமைப்பதற்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத் திணைக்களத்தின் 1981 ஆம் ஆண்டு 57 ஆவது சட்ட விதிகளின் கீழ் அனுமதி பெற்ற பின்னர்தான் இதை அமைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதில் நாம் குறை காண முயலவில்லை. கடிதத்தின் பிரதி ஒன்றை ஊர்காவற்றுறையிலுள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அனுப்பி வைத்தது தான் வேதனையையும், மனச்சஞ்சலத்தையும் தருகின்றது என்றார்.

இது சம்பந்தமாகத் "தினச் செய்தி" யாழ் மாவட்ட அதிபர் என். வேதநாயகனைச் சந்தித்து விபரம் கோரிய போது, "நான் இந்தச் சிலையை நிர்மாணிக்க வேண்டாம் என்று கடிதம் எழுதவில்லை. ஆனால் அவ்வாறு சில சிங்கள ஊடகங்களும், பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டுள்ளன. ஆனால் அது தவறு. எனது கடிதத்தில் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்ற பின்னர் சிலையை நிர்மாணிக்கவும் என்று தான் குறிப்பிட்டிருந்தேன்.

நாகதீப விகாராதிபதி குறிப்பிட்டது போல் நீங்கள் ஏன் கடிதத்தின் பிரதியை ஊர்காவற்துறை பொலிஸ் அதிகாரிக்கு அனுப்பினீர்கள்? என்று கேட்டபோது, அவருக்குத் தகவலுக்காக அனுப்பினேன். அது ஓர் சம்பிரதாயம். வேறு எந்த நோக்கத்திற்காகவும் அனுப்பவில்லை எனக் கூறினார்.

நீங்கள் நாகதீபத்திற்குச் சென்று அங்குள்ள நிலைமையைப் பார்வையிட்டீர்களா? என்ற போது, உத்தியோகத்தர்கள் அறிக்கைகள் அனுப்பினார்கள். அதனடிப்படையில் தான் கடிதங்கள் அனுப்பினேன் என்றார்.

நீங்கள் நாகதீபத்தைச் சென்று பார்வையிடுவீர்களா எனக் கேட்ட போது? "ஆம் அடுத்த கிழமை சென்று பார்வையிடலாம் என இருக்கிறேன்" எனக் கூறினார்.

மேலும், 2000 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை இராணுவம் வன்னியைக் கைப்பற்றிய பிற்பாடு வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் கீரிமலை வரை ஏ-9 பிரதான வீதிகளில் மொத்தமாக 29 புத்தர் சிலைகளை நிர்மாணித்தார்கள். 29 ஆவது புத்தர் சிலை அண்மையில் பருத்தித்துறை யாழ்ப்பாணம் வீதியில் உள்ள வல்லை வெளியில் அமைந்துள்ள இராணுவ முகாமின் முகப்பில் அமைத்துள்ளார்கள். இவ்வாறு இராணுவத்தினாலும் கடற்படையினராலும் அமைக்கப்பட்ட புத்தர் சிலைகளைப் போன்ற இந்தச் சிலை அமைப்பு அல்ல. இந்தச் சிலை அமைப்பு நயினாதீவு மக்களின் அனுசரணையுடனும் ஒத்துழைப்புடனும் அமைக்கப்படுகின்றது என்று கூறினால் மிகையாகாது.

இவ்வாறு புத்தர் சிலைகள் நிர்மாணிக்கப்பட்ட போது பெரும்பாலான சிலைகள் கிளிநொச்சி, கனகராயன் குளம் போன்ற இடங்களில் உள்ள இந்து ஆலயங்கள் இடித்துத் தள்ளப்பட்ட பின் அந்த இடங்களில் தான் புத்தர் சிலைகள் நிர்மாணிக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

சமாதான காலங்களில் புத்தர் சிலைகள் தம்பகுதிகளில் நிர்மாணிப்பதை மக்கள் வரவேற்றிருப்பார்கள்.

ஆனால் தமிழர்களைத் தோல்வியடையச் செய்த இலங்கை இராணுவமும், கடற்படையும் புத்தர் சிலைகளைப் பொது இடங்களில் அமைப்பது கவலைக்குரியதும், வேதனைக்குரியதும், சினத்திற்குரியதுமாகும். நாகதீபத்தைப் பொறுத்தவரை நெடுங்காலமாகப் புத்த பெருமானுக்கு அங்கு ஆலயம் அமைத்துள்ளது.

இத் தீவில் வாழும் மக்கள் நாகபூசணி அம்மனுடன் விகாரையையும் தம் குல தெய்வமாகவே வணங்குகிறார்கள்.

மேலும், இந்தக் கோவிலைப் பற்றி விகாராதிபதி "தினச் செய்தி"க்கு குறிப்பிடுகையில், நயினாதீவில் 1964 ஆம் ஆண்டு பலத்த சூறாவளி வீசியது என்றும், அதன் போது இரண்டாயிரம் பேர் பலியானதாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன. ஆனால் அந்தத் தகவல் தவறானது என்று எனக்கு முன் இருந்த விகாராதிபதி எங்களுக்குக் கூறினார் எனவும் தெரிவித்தார்.

புத்தபிரான் ஞானம் பெற்று ஐந்து வருடங்களுக்குப் பின் இரண்டாவது தடவையாகவும் நாகதீபத்திற்கு வந்தார்.


இது தமிழ் காப்பியமான மணிமேகலையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று மகாவம்சத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


புத்தரின் காலடி நயினாதீவில் பதிந்தது என்றும், இரண்டு நாக மன்னர்கள் இரத்தினக்கல் பதித்த சிம்மாசனத்திற்காகப் பிரச்சினை பட்டபோது அதனைத் தீர்த்து வைக்கவே புத்தபிரான் நயினாதீவிற்கு வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளது.

நாகதீப விகாராதிபதியிடம் சிம்மாசனம் சம்பந்தமாகவும் மணிமேகலையின் அட்சய பாத்திரம் சம்பந்தமாகவும் "தினச்செய்தி" கேட்டபோது -


இவை இரண்டும் யார் கண்ணுக்கும் இதுவரை காணப்படவில்லை எனக் குறிப்பிட்டார்.

நாகதீப விகாரை அமைந்துள்ள இடம் ஒன்றே முக்கால் ஏக்கர் விஸ்தீரணம் கொண்டது எனவும், இரண்டு வருடங்களுக்கு முன் இந்த ஊர் மக்கள் இந்த விகாரையோடு அமைந்துள்ள ஆறு பரப்பு நிலத்தை ஒருவரும், பின்னர் இருவர் இரண்டரை (2 1/2), பரப்பு விஸ்தீரணம் கொண்ட நிலத்தை இரண்டு வருடங்களுக்கு முன் அன்பளிப்பாக வழங்கினார்கள் என்றும் இவற்றுடன் சேர்த்துத் தான் இன்று இவ்விகாரையின் விஸ்தீரணம் ஒன்றே முக்கால் ஏக்கர் ஆகும் எனவும் கூறினார்.


10/15
Came to the Vihare to pay my homage. It has given me great satisfaction and contentment. I was received by the Rev. Monks with much kindness and shown around the Vihare. I was also the beneficiary of prayers and a Pirith thread. On the whole it has been a most pleasant and rewarding experience. I am grateful that it happened. Wish everyone the very best
R Sampanthan MP
Leader of the Opposition
Sri Lanka Parliament








வணக்கத்திற்குரிய விகாராதிபதி நவந்தகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் மேலும் குறிப்பிடுகையில்,

56 வருடங்கள் பத்திரிகைத் துறையில் அனுபவமுள்ள உங்களைப் போல் ஒருவர் வந்தது எமக்குப் பெருமை அளிக்கின்றது என்றும், ஜனாதிபதிகள் ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாஸ, மகிந்த ராஜபக்ஷ ஆகியோரும் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனும் இந்த விகாரைக்கு வந்து வணங்கிச் சென்றுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

திரு. சம்பந்தன் ஒரு முறை மாத்திரமல்ல, இருமுறை விஜயம் செய்து வழிபட்டுச் சென்றுள்ளார் என்று விகாராதிபதி சுட்டிக்காட்டினார்.

விகாராதிபதி திரு. சம்பந்தனைப் பற்றிக் குறிப்பிடுகையில்–

அவரைப் பார்த்தவுடன் அவர் ஒரு பெரும் தலைவர் எனச் சொல்லக் கூடியதாக இருக்கும். அவ்வாறு அங்க இலட்சணம் உடையவராகத் திரு. சம்பந்தன் இருந்தார்.

அவர் எனது அன்பிற்கு உரியவர், மதிப்பிற்குரியவர்.

மேலும் இனங்களுக்கிடையில் ஒற்றுமையை நிலை நாட்டக் கூடிய ஒரே தலைவர் சம்பந்தன் தான் என நான் எவ்விடத்திலும் துணிச்சலுடன் சொல்லத் தயாராகவுள்ளேன் என்றார்.

தினச்செய்தி
வாரமலர்

# அழிவின் விளிம்பில் யாழ் குடாநாடு


யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக உயிர் அச்சம் ஊட்டும் விதத்தில் கிருமிநாசினிகளை விவசாயிகள் அளவுக்கதிகமாக பயன்படுத்துவதால் இப் பகுதியில் வாழும் மக்கள் உயிர் ஆபத்தை எதிர்கொள்வதாக எச்சரிக்கப்படுகின்றது.

தோட்டங்களிலும், வீடுகளிலும் உற்பத்தி செய்யப்படுகின்ற பழங்கள், மரக்கறிகள், கீரை வகைகளிற்கு அளவிற்கு அதிகமாக கிருமிநாசினிகளை விவசாயிகள் தெளிக்கின்றார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பிரதானமான ஐந்து வகையான மண் வகைகள் உள்ளதென்று புவியியலாளர்கள் கூறுகின்றனர். அவையாவன: சுண்ணாம்புக்கல், உவர்மண், வெண்மண், செம்மண், நரை மண் என்பனவே ஆகும்.

இன்று குடாநாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பாதீனியம், கருவேள மரங்கள் செறிந்து வளர்ந்து வருகின்றன. இவைகள் யாழ் மண்ணினுடைய தன்மைகளை மாற்றியமைக்கின்றன.

அதுமாத்திரமின்றி, சுன்னாகம், மல்லாகம் அடங்கிய பிரதேசங்களில் கிணற்று நீருடன் எண்ணெய் (ஓயில்) கலந்து வெளிவருவதால் மக்கள் தங்கள் வீடுகளில் உள்ள கிணற்று நீரைக் குடிப்பதை கைவிட்டு விட்டார்கள். இந்த நீரை பயிர்களுக்கு பாய்ச்சுவதால் பயிர்களுக்கு கேடு விளைவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





வடமாகாண சபையின் விவசாய அமைச்சின் செயலாளர் திரு. பற்றிக். டிரஞ்சனுடன் தொடர்பு கொண்ட போது, தற்சமயம் வடமாகாணத் தில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் 'சேதன விவசாயத்தை' ஊக்குவிப்பதாகக் கூறுகின்றார். அதுமாத்திரமல்லாமல் தாவரப் பாதுகாப்பு சட்டத்திற்குக் கீழ் பாதீனியம் ஒழிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறினார். ஆனால் இதுவரையில் புகையிலை விவசாயத்தை தடை செய்யும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக் கூறினார். ஆனால் யாழ் மாவட்டத்தில் புகையிலை உற்பத்தியைத் தாங்கள் ஊக்குவிக்கவில்லை எனவும் கூறினார்.

இந்த ஆண்டு வட மாகாணத்தில் 270 000 ஏக்கரில் நெல் உற்பத்தி சிறந்த முறையில் நடந்ததென்றும், நெல் சந்தைப்படுத்தும் சபை மூலம் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் இருந்து விவசாயிகளிடம் நெல் கொள்வனவு செய்யப்படுவதாகவும் கூறினார்.

அதுமாத்திரமின்றி 2,500 - 2,700 ஏக்கர் வரையில் நெல் உற்பத்தி யாழ் மாவட்டத்தில் செய்யப்பட்டதாகவும் மழை ஒழுங்காகப் பெய்ததால் நெல்லை உற்பத்தி செய்ய முடிந்ததாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம், மிளகாய், கரட், பீட்றூட், பாவல், வெண்டி, புடோல், பயற்றங்காய், அவரை ஆகிய மரக்கறி வகைகளிற்கும் திராட்சைக்கும் மற்றும் மாம்பழம், வாழைப் பழம் ஆகியவற்றை செயற்கை முறையில் பழுக்க வைப்பதற்கு இரசாயன திரவகங்கள் பாவிப்பதால் இவற்றை உண்ணும் மக்கள் சாவின் விளிம்பில் உள்ளார்கள் என எச்சரிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் வேலிகளிற்கு நாட்டப்பட்ட முள்முருங்கை மரம் ஒரு நோயினால் தாக்கப்பட்டு முற்றாகவே அழிந்து விட்டது. இந்த முள்முருங்கை திருமண வீடுகளில் பந்தல் காலிற்கு முன்னர் வைப்பார்கள். பந்தல்கால் தமிழனின் திருமண சடங்குகளில் ஒரு முக்கியமான அம்சமாகும். இன்று பந்தல் காலிற்கு கத்திரி முருங்கை, கிளுவை தடிகளை நடுகின்றார்கள்.

யாழ்ப்பாணம் ஒரு காலத்தில் வனாந்தரமாக இருந்ததென்றும் யாழ் ஈட்டிய பாணனிற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது என்றும் "யாழ்ப்பாண வைபவமாலை" கூறுகின்றது.

யாழ் மாவட்டத்தில் கிருமிநாசினியை பாவிக்காமல் மரவள்ளிக் கிழங்கு, சட்டிக் கரணை கிழங்கு ஆகியவற்றை மாத்திரமே விவசாயம் செய்யக்கூடியதாக உள்ளதென்றார். மாமரங்களில் ஒட்டுண்ணியான குருவிச்சை அதிகரித்து வருவதாகவும் வாழை மரங்களும் குருமன் பீடிக்கின்றன. கப்பல் வாழை ஒரு அடிக்கு




மேல் நிற்பதில்லை. குருமன் தாக்கதில் அழிந்து விடுகின்றது. அதையும் நீக்க வேண்டும் என்றும் கூறினார். மாமரம், தேசிமரங்களில் ஒரு வகையான கிருமித் தாக்கம் ஏற்பட்டு மாங்காய், தேசிக்காய் பாதிப்படைவதாகத் தெரிய வருகின்றது.

கிருமிநாசினிகள் சம்பந்தப்பட்ட விபரங்களுக்குப் பொறுப்பாக உள்ள டாக்டர் J.A. சுமித் குறிப்பிடுகையில், ஏற்கனவே D.D.T, மற்றும் களைகளை சாகடிக்கப் பயன்படும் ரவுண்டப் (Round up), மலத்தியோன் ஆகியன தடை செய்யப்பட்ட கிருமிநாசினிகள் என்றும் குறிப்பிட்டார். அண்மையில் ஐந்து விதமான இரசாயனச் செயற்கை கொண்ட கிருமி நாசினிகள் கிளைப்போசேற் (Glyphosate) உட்பட தடை செய்யப்பட்டு விட்டதாகத் தெரிவித்தார்.

கிருமி நாசினிகளை நாடு பூராகவும் தடை செய்யும் அதிகாரம் கிருமி நாசினிகளின் பதிவாளருக்கே (Registrar of Pesticide) உண்டு.

தற்சமயம் வீட்டுத் தோட்டங்களில் நாங்கள் நடுகின்ற செம்பரத்தை, முல்லை, ரோசா, மல்லிகை போன்ற பயிர்களும் பாதிக்கப்படுகின்றன. இந்த வீட்டுத் தோட்டப் பயிர்கள் இலைச்சுருள், அழுக்கணவன் போன்ற வியாதிகளால் பாதிக்கப்பட்டு வருகின்றன. இன்று வீடுகளிலும் கிருமிநாசினிகளை தெளித்து இவற்றை பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கிருமி நாசினிகளே வருங்காலத்தில் யாழ்ப்பாணத்தானின் உயிரைக் குடிக்கவுள்ள உயிர் கொல்லிகளாகும்.



இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஏப். 11, 2016 அன்று வெளியிடப்பட்டது.